


# கிளி/ குமுழமுனை அ. த. க. பாடசாலை
## பல்லவராயன்கட்டு



# பரிசளிப்பு விழா மலர்
# 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி/ குமுழமுனை அ. த. க. பாடசாலை

# பரிசளிப்பு விழா மலர்

# 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

| | | |
|---|---|---|
| கௌரவ ஆலோசகர் | :- | திரு. அ. அமிர்தநாதன் றொபேட்கெனடி (அதிபர்) |
| மலராசிரியர் | :- | திருமதி சாந்தினிதேவி விக்னேஸ்வரன் |
| மலர்கழு | :- | திருமதி. வை. அசோகபாலன்<br>செல்வி. ஜெ. பிறின்ஸி<br>அருட்சகோதரி. யு. கிருபதர்சினி<br>திரு. க. தர்மசீலன்<br>திருமதி. த. றோமன் (பெற்றோர்)<br>செல்வி. ஜே. றாகினி (பழைய மாணவி) |
| பாடசாலைமலர் | :- | பரிசளிப்பு விழா மலர் |
| அச்சுப்பதிப்பு | :- | ஷாம்பவி பதிப்பகம்,<br>இல. 276 B, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>தொ. பே. இல.:- 021 2224143 |
| வெளியீடு | :- | மலர்க்குழு<br>கிளி/ குமுழமுனை அ. த. க .பாடசாலை,<br>குமுழமுனை, பல்லவராயன் கட்டு,<br>பூநகரி, கிளிநொச்சி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே....


| | |
|---|---|
| பங்குத்தந்தை ஆசிச்செய்தி | - I |
| கிளி/ முல்லை கோட்ட முதல்வரின் வாழ்த்துச் செய்தி | - II |
| வலயக்கல்விப் பணியாளரின் வாழ்த்துச் செய்தி | - III |
| பிரதிக்கல்விப் பணியாளரின் வாழ்த்துச்செய்தி | - iv |
| கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி | - v |
| ஒய்வுநிலை அதிபரின் வாழ்த்துச் செய்தி | - vi |
| திரு, தி. இராசநாயகம் அவர்களின் வாழ்த்துச்செய்தி | - viii |
| உதவிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி | - x |
| கிராம அலுலரின் வாழ்த்துச்செயத்தி | - xi |
| ஆசிரிய ஆலோசகரின் வாழ்த்துச்செய்தி | - xii |
| இதழாசிரியரின் இதயத்திலிருந்து | - xiii |
| முதல்வரின் உள்ளத்திலிருந்து | - xvi |
| அதிபரின் வரிசையில் | - xviii |
| பாடசாலை ஆளணியினர் | - xix |
| பாடசாலை வரலாறு | - xx |
| எனது பாடசாலை | - 01 |
| பள்ளிப்பருவம் | - 01 |
| அம்மா | - 02 |
| கிளி | - 03 |
| நட்பு | - 03 |
| சுத்தமே வாழ்வின் மூலதனம் | - 04 |
| அம்மா | - 06 |
| கணனி | - 07 |
| அன்பு | - 09 |
| மாணவர் கடமை | - 10 |
| என் ஆசானை நான் மறவேன் | - 12 |
| தமிழ்மொழி | - 12 |
| நாட்டார் பாடல்கள் | - 13 |
| பாலகன் பிறப்பு | - 15 |
| இலங்கையின் கரையோர வலய முகாமைத்துவம் | - 16 |
| எனது பார்வையில் எனது பாடசாலை | - 17 |
| பொதுநலவாயம் | - 19 |
| பொது அறிவு | - 21 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஏக்கம் - 22
மோசனமானவர்கள் - 24
கல்வியும் பாடசாலைச் சமூகமும் - 27
மீண்டும் வருமா - 30
மானிடரே கேளீர் - 30
விபுலானந்த அடிகள் - 32
கண்ணீர் - 32
எத்தனை தவங்கள் - 33
உடைந்த குடையின் சுயசரிதை - 35
பொது அறிவு - 37
ஏற்றி வைத்த தெய்வத் தாய் - 38
நேரத்தைப் பொன்னாகப் பேணுவோம் - 42
காலநிலை மாற்றம் - 43
எம் வழிகாட்டி - 52
ஆசான்கள் - 52
நான் படிக்கும் பாடசாலை - 53
எனது ஆசை - 54
விஞ்ஞானத்துறையின் இன்றைய நிலை - 55
திருந்திய திருடர்கள் - 58
எங்கள் பாடசாலை - 59
மதியாவின் படிக்கணனி - 60
விடுகதைகள் - 62
எதிர்பார்ப்பின் விளிம்பில் - 64
தமிழ் கலாச்சாரம் - 66
கிராமத்தின் ஒளி - 69
துள்ளித் திரிந்த பள்ளி நினைவுகள் - 71
பாடசாலையில் ஒரு ஆசிரியரின் வகிபங்கு - 73
இறைவனின் கொடை - 75
ஆன்மீகமே வாழ்வின் இயக்காற்றல் - 76
**My Country** - 78
**Oh My Friend** - 78
**Mobile Phones** - 79
**Sir Ponnambalam Arunachalam** - 80
ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம் - 81
முருகைக் கற்பாறையும் கடல்வாழ் சூழல் தொகுதியும் - 83
பரிசு பெறுவோர் விபரம் - 88
உயர் கல்வி கற்றோர் - 94
மன்றங்கள் - 95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

## பல்லவி

வடபாலிலங்கிடும் எழிலார் வன்னியில்
ஓங்கும் கலையகம் வாழ்கவே!
குமுழமுனையின் அரசினர் கலையகம்
அணி பெறு நிலையம் வாழ்கவே!

## சரணம்

கன்னலும் கமுகும், கதலியும் அணிசெய்
இனிய கலையகம் இனிதாய் ஒளிர்கவே
அன்னமிடு வயல் அழகுடன் பசுமை
ஆதாரமாங் கடல் வளங்கள் அமைந்து

ஒன்பது தரம் வரை அழிவுறாக் கல்வி
பைந்தமிழ் கலைகளும் பழகிடும் நிலையம்
நைந்து பல துயர் தாங்கி வரினும்
நம் நலமிகு சிறாரை நலமுடன் அணைத்து

உயர்பணி ஆற்றிடும் முதல்வர் தன்னோடு
ஆசிரியர் குழாம் வாழ்கவே!
சிறந்து கற்றிடும் மாணவர் வாழ்க!
நிறைந்தே நிகருறு குமுழமுனை வாழ்கவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mission

**Know thy self, Serve the Society**

**உன்னை அறிந்து சமூகத்துக்கு**

**சேவை செய்.**

# Vission

**To lean and observe uligious and social disciphines in order to transmit themto the society.**

**ஒழுக்க, சமய சமூக விழுமியங்களையும் நற்பண்புகளையும் பேணி சமூகத்திற்கு அதனைப் பரிமாற்றுதல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல் திருநாடும்
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன் உதரத் துதித் தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலக வழக்கு அழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசியுரை

கிறிஸ்துவின் பணியில்
அருட்தந்தை ஆ. மைக் மயூரன்
குமுழமுனைப்பங்கு,
கிளிநொச்சி.

"தந்தையாம் கடவுளிடமிருந்தும், நம் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் இரக்கமும் அமைதியும் உரித்தாகுக! (1திமோ 1:2)

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்தில் உள்ள குமுழமுனை கிராமத்தில் அமைந்துள்ள கிளி/குமுழமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். 80 ஆண்டு கால நீண்ட ஆயுளைக் கொண்ட பாடசாலை பல கல்விமான்களை, சமூகத்திற்கு ஏற்ற மனிதர்களை உருவாக்கியது மட்டுமல்லாமல் இக் கிராமத்திற்கு அறிவு ஒளியை வழங்கும் அறிவாலயமாகவும் விளங்குகின்றது. இப்பாடசாலைத்தாய் தன் பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு அக்கழித்து கௌரவிக்கும் இந்நன்நாளில் அனைத்து நிகழ்வுகளும் சிறப்புற அமைய இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 80 ஆண்டுகளில் நடைபெறக்கூடிய இம் முதலாவது பரிசளிப்புவிழா தொடர்ந்து வரக்கூடிய பல பரிசளிப்பு நிகழ்வுகளுக்கு முதன்மையானதாக அமையவும் ஆசிக்கின்றோம். இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் கடின உழைப்பு மேலும் இப் பாடசாலையின் தரத்தை உயர்த்தி இக்கிராமத்தின் சிறந்த கல்விச்சாலையாகத் திகழ வாழ்த்துகின்றோம். எமது சமூகத்திற்கு சிறந்த பிரஜையாக நாட்டிற்கு பண்பான குடிமக்களாகவும் உருவாக்க வேண்டுமென ஆசித்து இறையாசீர் கூறுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறைக்கோட்ட முதல்வரின் வாழ்த்துரை

அருட்தந்தை A. J. யாவிஸ்,
மறைக்கோட்ட முதல்வர்,
கிளி/முல்லை மறைக்கோட்டம்,
கிளிநொச்சி.

யாழ் மறை மாவட்டத்தின் கிளி/ முல்லை மறைக்கோட்டத்தின் குமுழமுனைப் பங்கில் அமைந்துள்ள கிளி/குமுழமுனை அ. த. க. பாடசாலை யின் பரிசளிப்புவிழா மலருக்கு வாழ்த்துக்கள் கூறுவதில் புளகாங்கிதம் அடைகின்றோம்.

"வளத்தைப் பெற்று வாழக் கல்" என்ற விருது வாக்கோடு 1935ம் ஆண்டு முதல் படிப்படியாக வளர்ச்சி பெற்று வரும் இப்பாடசாலையின் உயர்வைப் பாராட்டுகின்றோம். ஆரம்பத்தில் தரம் 5 வரையும் பின் தரம் 9வரை பாங்குடன் வளர்ச்சி பெற்று பல்கலைக்கழகத்திற்கும் ஏனைய கல்வி சார்ந்த மற்றும் கல்வி சாரா நிலைகளுக்கு மாணவர்களை இட்டுச்செல்ல அடிப்படை அத்திவாரத்தை இட்ட பெருமை இப் பாடசாலையைச் சாரும்.

30 வருடங்களுக்கு மேலான போரின் ரணங்கள் ஆறாத நிலையிலும் ஒழுங்கமைப்பற்ற நெறிப்படுத்தப்படாத மீளக்குடியமர்வுகளுக்குள் இருந்து கொண்டு இவ்வகைப் பாடசாலைகள் கல்வி கற்றல் செயல்பாடுகளிலும் விளையாட்டு நிகழ்வுகளிலும் வெளிப்படுத்துகின்ற திறனும் அவற்றிற்கான முயற்சிகளும் மெச்சத்தக்கவை.

இப்பாடசாலையில் கல்வி கற்ற ஒருவர் கத்தோலிக்க குருவானவராக வருவதற்கும் இன்னும்சிலர் திருநிலைகளுக்குள் பணியாற்றப் பயிற்சி பெறவும் கருவியாக இருந்ததையிட்டு கத்தோலிக்க திருச்சபையின் சார்பில் வாழ்த்து கின்றோம்.

"உன்னை அறிந்து சமூகத்திற்கு சேவை செய்" எனும் பாடசாலையின் தூர நோக்கை மாணவர்கள் அனைவரும் உணர்ந்து இந்த நவீன உலகின் சடுதியான மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய பிரஜைகளை உருவாக்க வேண்டுமென ஆசிக்கின்றோம்.

இப்பரிசளிப்பு விழா நாளில் இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் பாராட்டுக்களைக் கூறுகின்றோம். நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புடன் நிகழ வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

க. முருகவேல்
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

கிளி/ குமுழமுனை அ. த. க. பாடசாலையின் முதலாவது பரிசளிப்பு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 1935ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது பூநகரிப்பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள தொன்மைச் சிறப்பு மிக்க பாடசாலையாகும். குமுழமுனைப் பிரதேசத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழும் இப்பாடசாலை யானது நாட்டுக்கேற்ற பல நற்பிரஜைகளை உருவாக்கியுள்ளமை யாவரும் அறிந்த உண்மையாகும்.

மாணவர்கள் பாடவிதான செயற்பாடுகளிலும் இணைபாட செயற்பாடு களிலும் சாதனைகளை நிலைநாட்டும்போது அவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்துவது பாடசாலைச் சமூகத்தின் தலையாய கடமையாகும். அந்த வகையில் குமுழமுனை கல்விச்சமூகத்தினரை எல்லாம் வல்ல வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமானின் திருவடிகளை வணங்கி வாழ்த்தி நிற்கின்றேன்.

இச்செயற்பாட்டிற்கு வித்திட்டு செயல்வடிவம் அமைத்த தற்போதைய பாடசாலை அதிபர் திரு. கெனடி அவர்களையும், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றேன். பரிசில் நாள் மாணவர் வாழ்வில் மறக்க முடியாத ஓர் உன்னத நன் நாள். பரிசில்நாளும் பரிசளிப்பு விழா மலரும் ஆண்டுதோறும் வெளிவர வேண்டும் என இறையருளை இறைஞ்சுகின்றேன். அத்தோடு இப்பாடசாலையானது மேலும் தரமுயர்த்தப்பட்டு இப்பிரதேச மாணவர்க்கு கல்வியையும் சமநிலை ஆளுமைமப்பண்புகளையும் வாரிவழங்கும் சமூக நிறுவனமாக மிளிர வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க! வளர்க! வெல்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதிக்கல்வி பணிப்பாளர் (திட்டமிடல்) அவர்களின் வாழ்த்துச் செய்தி


உ. புவனராஜா,
பிரதி கல்விப்பணிப்பாளர் (திட்டமிடல்)
வலய கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.


கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசசெயலர் பிரிவில் உள்ள பழமைவாய்ந்த கிராமங்களில் ஒன்றாக குமுழமுனைக் கிராமம் விளங்குகின்றது. இப்பிரதேசமானது இயற்கை வனப்புக்கள் மிகுந்த பிரதேசமாகும். இங்கு காணப்படும் வயல்வெளிகளும் பனைமரங்களும் சூழ்ந்த பகுதியில் 1935ம் ஆண்டு தரம் 01 முதல் 08 வரையான வகுப்புக்கள் கொண்ட பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு 2014ம் ஆண்டு வகை II பாடசாலையாக தரம் உயர்த்தப் பட்டமை இப்பாடசாலையின் சிறப்பாகும். முதலாவது அதிபராக அமரர் ச. மயில்வாகனம் அவர்களுடன் ஆசிரியர் ஒருவருமாக பாடசாலையில் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது இப் பாடசாலையாது 175 மாணவர்களுடனும் 13 ஆசிரியர் களுடனும் திரு. அ. றொபேட்கெனடி அவர்களை பாடசாலை முதல்வராகக் கொண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்படு கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மிக கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள இப் பாடசாலையின் 2014ம் ஆண்டு பரிசளிப்பு விழாவின் முதலாவது மலர் வெளியீட்டுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ் வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோட்டக்கல்வி அதிகாரியின் இதயத்திலிருந்து

சு. தர்மரத்தினம்,
கோட்டக்கல்வி அதிகாரி,
பூநகரி.

முழங்காவில் பிரதேசத்தில் வளர்ந்துவரும் ஒரு பள்ளியாக கிளி/குமுழமுனை அ. த. க. பாடசாலை விளங்கி வருகின்றது. இப்பள்ளி மாணவர்கள் கல்வியிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறப்பாக தமது திறமைகளை வெளிக்கொணர்ந்துள்ளனர். இப்பிரதேச பாடசாலைகளில் கல்விக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுக்கும் கௌரவம் மிகவும் மகத்தானது. இந்த வகையில் ஊக்கப்படுத்தாத கல்வி மழுங்கிய மரத்தில் அடிக்கும் மழுங்கிய ஆணிக்கு சமமானது இந்த வகையில் ஊக்கப்படும் உத்திகளாக பரிசு பாராட்டு, தண்டனை என்பன விளங்கி வருகின்றது. இந்தவகையில் இப்பள்ளியால் முன்னெடுக்கப்படும் பரிசளிப்பு விழாவிற்கு பின் நின்று உழைக்கும் அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகின்றேன். இந்தவகையில் பரிசுபெறும் மாணவர்களையும் பரிசுபெற வழிகாட்டிய ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன். கல்வியின் வெற்றி பெற்றோர் ஆசிரியர்கள் இணைந்து பணிபுரிவதிலேயே தங்கியுள்ளது. இந்த உயர்ந்த செயற்பாட்டினை இப்பாடசாலையின் 2011ம் ஆண்டு விளையாட்டு விழாவில் நான் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட போது அறிந்து கொள்ள முடிந்தது. இந்தப்பள்ளி பரிசளிப்பு விழா ஊடாக தன்னைத் தங்கள் சமூகத்தில் கொண்டு வந்துள்ளது. எனவே வளர்ந்து வரும் இப்பள்ளி மேலும் வளர்ச்சியடைந்து ஒரு கல்லூரியாக வளர எனது பாராட்டுக்களும் ஆசிகளும் உரித்தாகுக.

இப்பள்ளியிலே தங்களை முழுமனதுடன் அர்ப்பணித்து பணிபுரியும் அதிபர் திரு. அ. றொபேட் கெனடி மற்றும் ஆசிரியர் குழாத்தினருக்கும் எனது இதயபூர்வமான பாராட்டுக்கள் உரித்தாகுக.

வருடாவருடம் பரிசளிப்பு விழா நடைபெறவும் மாணவர்களை ஊக்கப் படுத்தவும் நான் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஓய்வுநிலை அதிபர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

குழந்தை கனகலிங்கம்,
ஓய்வுநிலை அதிபர்,
(பூநகரிக்கோட்டம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்று மிக்க பிரதேசங்களில் ஒன்றான பூநகரிப் பிரதேசத்தில் அமைந்துள்ள குக்கிராமமாகிய குமுழமுனையின் பகுதியில் அமைந்துள்ள கிளி/குமுழமுனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலை 1935ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதை அறியும் போது நான் பிறப்பதற்கு பதினொரு ஆண்டுகளுக்கு முன்பே இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எண்ணித்திகைத்து நிற்கின்றேன். நான் 1982ஆம் ஆண்டு இக்கிராமத்தின் அயற்கிராமமாகிய கரியாலை நாகபடுவான் இல - 02 அ. த. க. பாடசாலைக்கு மாற்றலாகி வந்தேன். அப்போது இப்பிரதேசம் யாழ் மாவட்டமாக இருந்தது. 1984ம் ஆண்டளவில் தான் கிளிநொச்சி மாவட்ட மாகப் பிரிக்கப்பட்டது. பின் பூநகரிப் பிரதேசம் கிளிநொச்சி மாவட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டது.

பல காலமாக இப்பாடசாலை ஒற்றை ஆசிரியரைக் கொண்ட பாடசாலை யாக இருந்து வந்துள்ளது. ஏறக்குறைய முப்பது மாணவர்கள் கல்வி கற்று வந்துள்ளனர். மிகவும் கஷ்டமான பிரதேசந்தான்.

நான் அறிந்தவரை 1984ம் ஆண்டிற்குப்பின் இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பினால் சிறிது சிறிதாக வளர்ந்து வந்து தற்போது 1 - 9 ஆண்டு வரை வகுப்புக்களை உயர்ந்து 175 மாணவர்களைக் கொண்டியங்குவதை அறிந்து மகிழ்கின்றேன்.

அண்மையில் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக இப்பகுதியிலுள்ள பாடசாலைகளின் வரலாற்றுச்சான்றுகள் யாவும் அழிந்து விட்டன. இதனால் இப்பேற்பட்ட மலர் வெளியீடுகளை ஆண்டுதோறும் வெளியிட்டு வருவதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறுகள், சாதனைகள் வளர்ச்சிகள் யாவும் ஆவணப்படுத்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். இது முதலாவதுமலர் ஆதலால் முன்னைய வரலாறுகளை தேடிக் கண்டு பிடித்து ஆவணப்படுத்துவது சுலபமான விடயமல்ல.

எனவே இத்தகைய வெளியீட்டினையும் விழாவினையும் ஒழுங்கு செய்வதற்கு காரணமாய் அமைந்துள்ள கிளி/குமுழமுனை அ. த. க. பாடசாலையின் தற்போதைய அதிபர் அ. றொபேட்கெனடி அவர்களையும் அவரோடு சேர்ந்து இப்பாடலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் எல்லோரையும் மனமாரப்பாராட்டுவதோடு இம் மலரிற்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்து மேலும் ஆண்டு தோறும் இம்மலர் தவறாது வெளிவர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

தி. இராசநாயகம் தலைவர்,
மகாதேவ ஆச்சிரமச் சிறுவர் இல்லம்,
முன்னாள் அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி.

"தூங்காமை கல்வி துணிவுடமை இம் மூன்றும் நீங்கா நிலனாள்பவர்க்கு" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க இலங்கையின் வடபுலத்தின் கல்வியின் கலங்கரை விளக்காக பூநகரி பிரதேச பல்லவராயன்கட்டு கிராமத்தில் குமுழமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மிடுக்குடன் மிளிர்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆரம்ப காலந்தொட்டே (1935) புகழ் பூத்த பூநகரி மண்ணில் உதித்து இன்றுவரை தன் அயராத முயற்சியின் பயனாக வளர்ச்சியடைந்து வருகின்றவேளை இப்பாடசாலையில் முதன் முதலாக பரிசளிப்பு விழா நிகழ்வை நடாத்தி மாணவர்களின் கல்வி ஊக்கத்திற்கு வழிவகுப்பதையிட்டு மகிழ்ச்சி கொள்வதுடன் அரும்பாகி மொட்டாகி மலராக இருக்கும் மலர் வெளியீட்டிற்கும் என் மனம் நிறைந்த வாழ்த்துக்களை என்சார்பாகவும் எம் இல்லக்குழந்தைகள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அற்புதமான எழுச்சி மிக்க மாணவ அணியொன்றின் பரிபூரண வளர்ச்சிக்கான ஒரு திருப்பு முனையாக எமது தன்னம்பிக்கையை அதிகப்படுத்தி வருகின்ற நிலையில் இத்தகைய கல்வி ஊக்கச் செயற்பாடுகளுக்கான விழாக்களை நடாத்துவது மிகவும் பொருத்தமானதொன்றாகும்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் பலனாக அவலங்களும் இழப்புக்களும் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட தற்போதைய நிலையில் ஆக்கத்திற்கான புதிய ஊக்கத்தோடு இன்று இப்பாடசாலையானது இவ் விழாவினைச் செய்வது பாராட்டுக்குரியதாகும்.

"அழிந்ததிலிருந்து ஆக்கத்திற்கு" என்ற அபிவிருத்திச் செயற்பாட்டின் ஊடாக பல்வேறு இன்னல்களை சந்தித்த இம்மண்ணிலே உதித்த மாணவ மணிகளுக்கு இத்தகைய உளப்பக்குவ நிலையேற்படுத்தும் விழாக்களை கட்டாயமாக ஒவ்வொரு பாடசாலைகளும் நடாத்த முனைய வேண்டும். நம்பிக்கை ஒன்றே மனிதனை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லும் என்ற நிலையில் ஒரு சமுதாயத்தின் உறுதியான வளர்ச்சியில் அந்தச் சமுதாயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் அமைந்துள்ள பாடசாலைகள்ஆற்றும் பங்கும் பணியும் அளப்பரியதாகும். உன்னதமானதும் ஒழுக்கநெறிமிக்கதுமான பணிகளை மாறிவரும் உலக ஒழுங்கிற்கு இசைவாக விரைந்து செயற்படக்கூடிய ஒரு சமுதாய அணியைத் தோற்றுவிப்பதில் பாடசாலைகள் ஆற்றிவரும் புனித செயற்றிட்டங்கள் எண்ணிலடங்காதவை. இந்த மகத்தான சேவையில் கிளிநொச்சி பூநகரி குமுழமுனை அ. த. க. பாடசாலை எடுத்துவரும் முயற்சிக்கு வரவேற்பு உண்டு.

ஆரம்ப அத்திவாரமே மேல் வெற்றியின் முதற்படி என்பது போல் ஆரம்ப பிரிவு தொடக்கம் இடைநிலைப்பிரிவு வரையான மாணவர்களை ஒருங்கிணைத்து கல்வி புகட்டி வரும் இப்பாடசாலையானது இன்றைய பல சாதனையாளர்களின் தோற்றுவாய் என்றால் அது மிகையாகாது என்று கூறிக் கொள்வதுடன் மென்மேலும் பல செயற்பாடுகளை சிறப்புடன் நடாத்தி உயர்வடைய என் இதய பூர்வமான வாழ்த்துக்களை என்சார்பாகவும் இல்லக்குழந்தைகள் சார்பாகவும் கூறி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

சி. கணேசலிங்கம்
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

கிளிநொச்சியின் பூநகரிக்கோட்டத்தில் தென்புலத்தில் பாரம்பரியப் பண்புகளுடன் மிளிரும் குமுழமுனை அ. த. க. பாடசாலையின் பரிசில் நாளுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். பண்பாட்டுப் பாரம் பரியங்களை பேணப்படுகின்ற இப்பள்ளி தனக்கெனப் பல பாரம்பரியங்களைத் தொடர்ந்தும் தக்க வைத்துள்ளது. தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்று மாணவர்களின் ஆற்றல்கள் வெளிக் கொணரப்படுகின்றன. நிறைவான அர்ப்பணிப்பும், சீரிய விழுமியங்களும் நிரம்பிய இயல்புநிலை மேலோங்கிட நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

கிராமசேவகர்,
கரியாலை நாகபடுவான்.

கரியாலை நாகபடுவான் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள குமுழமுனை எனும் தொன்மை வாய்ந்த கமவளம், கடல்வளம், நிறைந்த கிராமத்தில் தலைநிமிர்ந்து நின்று இக் கிராம மாணவ மணிகளுக்கு கல்விச் செல்வத்தை வழங்கும் குமுழமுனை அ. த. க. பாடசாலைச் சமூகம் வெளியிடும் பரிசளிப்பு விழா மலருக்கு கிராம அலுவலர் என்ற வகையிலும் இப்பாடசாலை யிலும் பழைய தொண்டர் ஆசிரியர் என்ற வகையிலும் இறைவனை வேண்டி எனது நல்லாசியினைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரிய ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி

ஜெ. நிஷாகர்,
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சமூக விஞ்ஞானம்)
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.

தென்னை இளங்கீற்றில் எழும் தென்றலின் தாலாட்டும் வாழை மரச்சோலையும், மாமரங்களும், பலா மரங்களும் அணி செய்யும் முழங்காவில் பிரதேசத்தில் குமுழமுனை கிராமத்தின் அறிவுக் கண்ணாகத் திகழ்வது கிளி/குமுழமுனை அ. த. க. பாடசாலையாகும். 1935ம் ஆண்டு தொடக்கம் கிராமத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கெடுத்து பெருமையோடு பரிசளிப்பு விழா நடாத்துவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக பலவித சோதனை களைக் கண்ட போதிலும் அவற்றை எல்லாம் சுதாகரித்துக் கொண்டடு இன்று தலை நிமிர்ந்து நிற்பதைக் காணப் பெருமையாக உள்ளது.

பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக உள்ள மதிப்புக் குரிய அதிபர் திரு. அ. றொபேட் கெனடி மற்றும், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என எல்லோரினதும் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

மாணவர்களின் கற்றற் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கு இப்பரிசளிப்பு விழாவும், மலர் வெளியீடும் உந்து சக்தியாக அமைந்துள்ளது. இப் பாடசாலை யின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு எல்லாம் வல்ல முழங்காவில் ஸ்ரீசெல்வ யோக சித்தி விநாயகர் அருள்புரிய வேண்டுமென வேண்டி வாழ்த்துகிறேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து.......

திருமதி சாந்தினிதேவி விக்னேஸ்வரன்
ஆசிரியர்,

அமுதவிழாக்காணும் வரலாற்றைக் கொண்ட எமது வித்தியாலயம் இன்று கன்னிப் பரிசளிப்பு விழா மலரினை முகிழ்கின்றது. தனது சேவைக் காலத்தில் சிறப்பு மிகு பரிசளிப்பு விழாவையும், விழா மலரினையும் வெளியிட வேண்டுமென்ற உயர்சிந்தனையைக் கொண்ட எம் வித்தியாலய முதல்வர் திரு. அ. றொபேட் கெனடியவர்களின் சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுக்க குறுகிய காலப்பகுதிக்குள் அயராது உழைப்பு நல்கிய அன்பான ஆசிரியகுழாத்தின் முயற்சியாலும், தம்பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக அதிபர், ஆசிரியர் எடுக்கும் எந்த முயற்சிக்கும் மறுப்புத் தெரிவிக்காது பாடசாலைச் செயற்பாடு களுக்கு தோள் கொடுக்கும் கசடறக் கற்றுத் தேர்ந்து கற்றவழி நடக்கச் சித்தமாக சிரித்த முகத்துடன் உருவாகும் வித்தியாலயத்தின் வரலாற்றுப் பதிவான இம் முதல் மலரின் "மலராசிரியராக" காலம் எனக்களித்த சந்தர்ப்பத்திற்காக மனமகிழ்வடைகிறேன்.

நவீன கல்வியுலகின் வளர்ச்சி என்பது எங்கோ வளர்ந்துவிட "ஏணி வைத்தாலும் எட்டாது" என்ற அவலநிலைக்கு எங்கள் சிறார்களின் கல்வித்தரம் தொடர்ந்து வந்த எம் இனத்தின் மீதான அடக்கு முறைகளினாலும், வன்முறை களினாலும், போரினாலும், திட்டமிட்டகல்வி, மற்றும் கலாச்சார சீர்குலைப்புக் களினாலும் சென்றுள்ளது. எனினும் இவற்றை எண்ணி நாம் சலித்துக் கொள்வதில் ஆகப்போவது ஒன்றுமில்லை. எமக்குக் கிடைக்கின்ற சிறிய வளத்தைக் கொண்டு எம் சிறார்களின் கல்வித் தரத்தை உலகின் கல்வி வளர்ச்சிக்கு ஒப்பாக உயர்த்துவதற்கான தூரநோக்கோடு கற்ற சமூகம் செயலாற்ற வேண்டும். இதற்காக நாம் எம்மை தியாகம் செய்ய வேண்டும். ஒவ்வொரு பிள்ளையைப் பெற்றெடுத்த தாய் தந்தையருக்கும் தம் பிள்ளைகள் இன்றைய போட்டி மிகு கல்வியுலகின் சவால்களுக்கு முகம்கொடுத்து, சிறப்பாக தம் எதிர்கால வாழ்க்கையை செப்பனிடக்கூடிய கல்வியறிவைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய உயரிய கடப்பாடு இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையின் அயல்கிராமங்களான முழங்காவில் கரியாலை நாகபடுவான், நாச்சிக்குடா போன்றவற்றுடன் ஒப்பிடும் போது காலத்தால் முற்பட்ட வாழ்க்கை வரலாற்றைக் கொண்டமைந்த குமுழமுனைக் கிராமத்தில் அமைந்த எமது பாடசாலையானது பல்வேறு பௌதீகவளப் பற்றாக்குறையோடு தரம் ஒன்பது வரையான வகுப்புக் கொண்ட தரம் இரண்டு வகைப் பாடசாலையாக (வகை 2) அமைந்திருப்பது மனவருத்தத்திற்குரியது. இருப்பினும் இங்கு கல்வியறிவைத் தேடிப் பெறும் நன்மாணாக்கர் சமூகம், அதற்கு நல்லொளி பாய்ச்சும் ஆசிரியர்களும் திகழ்ந்துள்ளார்கள் என்பதை இங்கு உருவாகியுள்ள பட்டதாரிகள், மற்றும் ஆசிரியர்கள், ஏனைய உயர்பதவி வகிப்போர் சான்று பகர்கின்றனர். இருப்பினும் அன்பான பெற்றோரே தெரிந்து கொள்ள வேண்டும் எமது கிராமத்தின் பழமை போன்று எம் கல்வி நிலையும் இன்னும் பன்மடங்கு உயர்ந்து அயல் கிராமத்தவர்களிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ

> *"தந்தைமகற்காற்றும் நன்றி*
> *வையத்து முந்தியிருப்பச் செயல்"*

என்னும் படியாக உங்கள் செயற்பாடுகள் இருக்க வேண்டும். அன்பு மாணவச் செல்வங்களே! நீங்கள் உங்களுக்கு பெற்றோரும், உங்கள் சமூகமும், காலமும் வழங்கியுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி

> *"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை*
> *என்நோற்றான் கொல் எனும் சொல்"*

எனும் படியாக வாழ்ந்து "ஈன்ற பொழுதில் பெரிது உவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்ற பெருமித உணர்வை தாய், தந்தையருக்கே பெற்றுக் கொடுத்து சமூகத்தின் மணி முடிகளாகத் திகழ வேண்டும்.

குமுழமுனை அன்னை ஏறத்தாழ என்பது ஆண்டுகள் புரிந்த அருந் தவத்தின் பேறாக பெற்றெடுக்கும் வரலாற்றுப் பதிவான இப்பரிசளிப்பு விழா மலரினை தொடர்ந்து வெளியிட வேண்டிய பாரிய கடமை குமுழமுனை வாழ் மக்களினதும், கல்விச்சமூகத்தினதும் கைகளில் ஒப்படைக்கப்படுகிறது என்பதினை மறந்து விடக்கூடாது. ஆலயங்கள் அமைத்தல், அன்னமிடு மடங்கள் செய்தல் இவையனைத்தையும் விட புண்ணியம் தருவது கல்விக்குதவுதலாகும் என்பதை அறிவீர்களாகையால் இம்மலர் தொடர்ந்து வெளியாகும் எனக் கருதிக் கொண்டு மலராசிரியராக மாணவச் செல்வங்களின் ஆக்கங்களைத் தொகுத் தவள் என்பதால் ஒன்றைக் கூற விளைகின்றேன். இங்கு பிரசுரமாகும் ஆக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் சிந்தனைத் திறன் வெளிப்பாடுகளே இதனைக் கொண்டே மாணவர்களின் ஆற்றலை நீங்கள் அறிந்து கொண்டு அவர்களுக்கு களம் சமைத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எமது விழா மலர் சிறப்புற அமைய ஆலோசனை தந்து வழிகாட்டிய அனைத்துள்ளங்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் தந்துதவிய பெருந்தகைகளுக்கும் மனப் பூர்வமான நன்றிகளைக் காணிக்கையாக்கி, எம்மாணவர்களின் ஆக்கங்களில் குறை கண்டால் இகழாது அவர்களது வளர்ச்சிக்கு உதவுமாறு பணிகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வரின் உள்ளத்திலிருந்து....

இன்று எமது பாடசாலையில் முதலாவது பரிசளிப்பு விழாவை நடத்துவதில் பெருமகிழ்வடைகின்றது. இப்பரிசளிப்பு விழாவானது எமது பாடசாலையின் கன்னிமுயற்சியாகவும் அமைகின்றது. கிளிநொச்சி வலயத்தின் வகை 2 பாடசாலையாக விளங்கும் இப்பாடசாலையானது தரம் 01 தொடக்கம் தரம் 09 வரை தனது கற்றல், கற்பித்தல் செயற்பாட்டைச் செய்து வருகின்றது.

1935ல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தனது 80வது அகவையில் கால்பதிக்கும் இவ்வேளையில் தனது பரிசளிப்புவிழா மலரையும் வெளியிடுவதில் பேருவகை கொள்கின்றது. ஆரம்ப பாடசாலைக்கட்டடத்தை 1935ல் ஓயாமாரிக் குளத்தை அண்டி நாச்சிக்குடா, குமுழமுனை மக்களின் கல்வியைப் புகட்டு வதற்காக தரம் 1 தொடக்கம் 8 வரை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அயற்கிராமங்களில் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டமையினால் இப்பாடசாலையில் தரம் 5 வரை தரம் குறைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் நடைபெற்று வந்துள்ளது.

மேலும் கடந்த காலங்களில் தரமான கல்வியை வழங்குவதற்காக கடந்த காலங்களில் பணியாற்றிய அதிபர்கள் அயராது பாடுபட்டு உழைத் துள்ளனர். "வளத்தைப் பெற்று வாழக்கல்" எனும் மகுடவாசகத்தைத் தாங்கி மக்களின் நலன்கருதி பாடசாலையினைக் கிராமத்தின் மத்தியில் அமைப்பதற்கு அயராது உழைத்து இவ்விடத்தில் அமைத்துள்ளார்கள். அத்துடன் மட்டுமல்லாது நாட்டின் முதுகெலும்புகளாகத் திகழும் மாணவச் செல்வங்களை நற் பிரஜைகளாக உருவாக்குவதில் அதிபர்கள், ஆசிரியர் குழாம் அரும்பாடுபட்டு வந்துள்ளனர். தற்போது எமது ஆசிரியர் குழாம், மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆளுமை அனைத்திற்கும் களம் அமைத்துக் கொடுக்கின்றனர். அத்துடன் தமது கடமை, கண்ணியம், ஒழுக்கத்துடன் பாடசாலையின் பண்புசார் விருத்தியில் கூடிய அக்கறையுடன் சேவையாற்றி வருகின்றனர். அத்துடன் எனக்கு கிடைத்த ஆசிரியர் குழாமுக்கு மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப் பதில் பெருமகிழ்வடைகின்றேன். அவர்கள் தமது வாண்மையை உயர்த்திக் கொள்ளவும் வாழ்த்து தெரிவிக்கின்றேன்.

கடந்த காலங்களில் தரம் 5 வகுப்புக்களில் கல்வி பயின்ற மாணவர்கள் தமது வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறமுடியாவிட்டாலும் 75% மாணவர்கள் 70 புள்ளிக்கு மேல் வருடாந்தம் பெற்று வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையை என் வாழ்வில் மறக்க முடியாததாகும். ஏனெனில் எனது அதிபர் சேவையின் முதல் பாடசாலை என்ற பெருமையும் இப்பாடசாலையைச் சார்ந்ததாகும். என்னை நிறையவே வளர்ப்பதற்கு ஆசிரியர், பெற்றோர்களின் ஒத்துழைப்புக்கள் என்றும் உள்ளமையினால் எனது சேவையினை மன மகிழ்வுடன் செய்ய முடிகின்றது. எனவே இவர்களை என்சேவையில் உள்ளத்தின் ஆழத்தில் நன்றியுணர்வுடன் நினைக்கின்றேன்.

மாணவச் செல்வங்களில் ஆளுமைவிருத்தி கற்றல் செயற்பாட்டை வெளிக்கொணரும் முகமாக பாடசாலையில் மாணவர் மன்றம், இந்துமன்றம், சமூகமன்றங்கள் உருவாக்கப்பட்டு வழிப்படுத்தப்படுகின்றது. இதனால் எமது மாணவர் அறிவு, திறன், மனப்பாங்கு, ஆளுமை அனைத்திலும் சிறந்தே விளங்குகின்றனர். அத்துடன் இவ்வருடம் புதிய பான்ட் வாத்திய இசைக்குழுவை உருவாக்கி இன்றைய நாளில் இரண்டாவது தடவையாக பயன்படுத்தியுள்ளோம்.

எமது பாடசாலையின் பௌதீக வளங்களைப் பொறுத்த வரை வகுப்பறைகள் போதுமானதாக உள்ள போதும் அவர்களுக்கான நூலகம், செயற்பாட்டு அறைகள், பூங்கா போன்றவை பற்றாக்குறையாகவே காணப்படுகின்றது. மேலும் பாடசாலையில் புதிதாக இணையும் மாணவர்களின் வரவுத் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்ற நிலையில் தற்போது தரம் 9 வரையே வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள மாணவர்கள் தரம் 10 - 11 வகுப்புக்களில் கல்வி கற்பதற்காக 5km தூரத்திலுள்ள பாடசாலைக்கு நடந்தும், சைக்கிளிலும் செல்கின்ற நிலையினைக்காண முடிகின்றது. இதனால் மாணவர்களின் இடைவிலகல் நிலை அதிகமாகவே காணப்படுகின்றது. இந்நிலையில் வகுப்புக்களை மேலும் அதிகரிக்கும் போது மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து கற்பதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கும் என்பதையும் தெரிவித்து நிற்கின்றேன்.

மேலும் எமது மாணவர்கள் விளையாட்டுக்களிலும், சமூக விஞ்ஞானப் போட்டிகளிலும், கோட்ட மட்டம், மாவட்ட மட்டம், மாகாணமட்டம் வரை சென்று வெற்றியீட்டி எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

இன்றைய நாளில் இப்பரிசளிப்பு விழாவினை நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளை நவில்வதுடன் அவர்களது எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய இறையாசீரையும் கூறி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு விழாக்குழு

தலைவர் :- திரு. அ. றொபேட் கெனடி (அதிபர்)

இதழாசிரியர் :- திருமதி சா. விக்னேஸ்வரன்


பொருளாளர் :- திரு. ம. திசறூபன்

## நிர்வாக உறுப்பினர்கள்

திரு. மு. நாகராஜன்
அருட்தந்தை ஆ. மைக்மயூரன்
திரு. கா. தர்மசீலன்
திருமதி. வி. தோமஸ்
திருமதி. வை. அசோகபாலன்
திருமதி. கெ. சரவணபவானந்தன்
அருட்சகோதரி யு. கிருபதர்சினி
செல்வி. யே. பிறின்ஸி
திருமதி. சு. றாஜ்மோகன்
திருமதி. நி. குயின்ஸி
திருமதி. பி. சிவச்செல்வன்
செல்வி. தி. ஜெயரூபி
திருமதி. தி சிந்துஜா
திருமதி. அ. மஹாகிராபாணு

## கல்விசாரா ஊழியர்

திரு . பூ. வினோத்குமார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. அ. றொபேட் கெனடி (முதல்வர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்கள் வரிசையில்

| | | | |
|---|---|---|---|
| 01) | திரு. ச. மயில்வாகனம் | | |
| 02) | திரு. க. முருகேசு | | |
| 03) | திரு. வே. முத்தையா | | |
| 04) | திரு. க. சிற்றம்பலம் | | |
| 05) | திருமதி. அ. பேரின்பநாதன் | | |
| 06) | திரு. மு. லதீப் | | |
| 07) | திரு. ப. மொகமட்கறீம் | | |
| 08) | திரு. ச. கதிர்காமு | | |
| 09) | திரு. கு. தோத்திரலிங்கம் | | |
| 10) | திருமதி. மு. சண்முகலிங்கம் | 01.02.1993 | - 14.02.1996 |
| 11) | திரு. நா. நடேசமூர்த்தி | 14.02.1996 | - 10.01.2003 |
| 12) | திரு. த. பிரபாகரன் | 20.01.2003 | - 10.05.2005 |
| 13) | திரு. அ. றொபேட் கெனடி | 01.11.2005 | - தற்போது வரை |

## சுவாமி விவேகானந்தரின் வீர மொழிகள்



நாம் இப்போது இருக்கும்
நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள்.
நாம் எப்படி எல்லாம்
இருக்கவேண்டும் என்று
விரும்புகின்றோமோ அப்படி
நம்மை அமைத்துக்கொள்ளும்
ஆற்றல் நம்மிடமே இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலையின் ஆளணியினர்

| | | |
|---|---|---|
| 01) | திரு. அ. றொபேட் கெனடி (அதிபர்) | SP tr. So. SLPS - 2 II |
| 02) | திரு. மு. நாகநாதன் | Sp, tr, Pr. SLPS 2-II |
| 03) | அருட்தந்தை ஆ. மைக் மயூரன் | B. Ph, B. Th |
| 04) | திரு. ம. திசரூபன் | Dip. in So, Sc. SLTS, 3 - I |
| 05) | திரு. க. தர்மசீலன் | SP. tr. Pr. SLTS - 2II |
| 06) | திருமதி. வி. தோமஸ் | Sp. tr. Pr, SLTS 3- I |
| 07) | திருமதி. வை. அசோகபாலன் | Sp. tr. Pr. SLTS 3 -I |
| 08) | செல்வி. யே. பிறின்சி | Dip. in. Chr. SLTS 3 -I |
| 09) | அருட்சகோதரி கிருபதர்சினி | Dip. in. Chr. SLTS 3 -I |
| 10) | திருமதி. சா. விக்னேஸ்வரன் | Sp. tr. Tam. SLTS 2 -II |
| 11) | திருமதி. கெ. சரவணபவானந்தன் | Sp. tr. Pr. SLTS 2 -II |
| 12) | திருமதி. சு. ராஜ்மோகன் | உதவி ஆசிரியர் |
| 13) | திருமதி. றி. குயின்சி | உதவி ஆசிரியர் |
| 14) | திருமதி. பி. சிவச்செல்வன் | உதவி ஆசிரியர் |
| 15) | செல்வி. தி. ஜெயரூபி | Dip. in. Mus. SLTS 3-I |
| | பூ. வினோத்குமார் | அலுவலக உதவியாளர் |
| 01. | திருமதி. அ. மஸாஹிராபானு | |
| 02. | செல்வி. எ. றெஜினாசீலி | |
| 03. | திருமதி. சி. திவாகரன் | |

ஏ மனமே! உனக்கு நீயே பந்துவும் பகைவனுமாகிறாய் நண்பனும் பகைவனும் வெளியில் இருப்பதாக நினைத்து ஏமாந்து விடாதே! ஜாக்கிரதை.
ஏ மனமே! ஸங்கல்பத்திலிருந்தே ஆசை பிறக்கிறது.
ஏ மனமே! ஸங்கல்பமற்றால் ஆசையற்று விடும்
ஏ மனமே! பிறப்பும், இறப்பும் உன்னைப் பற்றிக் கொண்டிருக்கும் மிகப் பெரிய நோயாகும், ஜாக்கிரதை.
ஏ மனமே! மக்கள் உன்னை நல்லவன், கெட்டவன் என்று போற்றுவதற்கும், தூற்றுவதற்கும் நீயே தான் காரணம்.
ஏ மனமே! நீ உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் உன்னைத் தூற்றும் பகைவர்கள் அதிகம் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை ஆளணியினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் வரலாறு

தொன்மையான வரலாற்றைக் கொண்ட எமது குமுழமுனை கிராமத்தில் வாழும் சிறார்களிற்கு சிறந்த கல்வியறிவைப் புகட்ட வேண்டுமென்ற அவாக் கொண்டு இரணைதீவு பங்குத் தந்தையாயிருந்த அருட்தந்தை டிலான் அடிகளாரின் பெருமுயற்சியால் தற்போதைய புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் ஓலையால் வேயப்பட்ட கொட்டிலில் எமது பாடசாலை முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. அந்தோனிப்பிள்ளை என்பவர் ஆசிரியராக கடமையாற்றினார். அக்காலத்தில் பல்லவராயன்கட்டு குமுழமுனை, நாச்சிக்குடா போன்ற கிராம மாணவர்களின் வசதி கருதி கார்த்திகேசு குஸ்ன்ரேபு என்பவரால் வழங்கப்பட்ட ஓயாமார் குளத்தை அண்டிய காணியில் அரசாங்க நிதியுதவியுடன் 1933ம் ஆண்டு தற்காலிகமாக கட்டப்பட்ட பாடசாலையில் திரு. முருகேசு தலைமையில் கல்வி தொடரப்பட்டது. இங்கு குமுழமுனை, நாச்சிக்குடா, பல்லவராயன்கட்டு பிரதேசங் களைச் சேர்ந்த மக்களின் பிள்ளைகள் கல்வியைத் தொடர்ந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து 1935.08.10ல் பாடசாலை நிரந்தக் கட்டடமாக அமைக்கப்பட்டு ஆசிரியர்விடுதி, மலசலகூடவசதி, கிணற்று வசதி என்பன ஏற்படுத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் தரம் 08 வரையான வகுப்புக்கள் நடைபெற் வந்தமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து வரும் காலப்பகுதியில் அயல் கிராமங்களில் பாடசாலைகள் நிறுவப்பட்டமையால் எமது பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்கள் குறைவடைய தரம் ஐந்து வரையான வகுப்புக்களாக தரம் குறைக்கப்பட்டது. எமது பாடசாலை வரலாற்றிலே 1997ம் ஆண்டு செல்வி. ச. அகிலா என்ற மாணவி தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு வழிகாட்டியவர் என்ற பெருமைக்குரியவர். திருமதி. ச. செல்வராஜேஸ்வரன் ஆசிரியர் ஆவார். எமது பாடசாலையின் வளர்ச்சிப் படியிலே பாடசாலையானது கிராமத்தின் மத்தியில் அமைக்கப்பட வேண்டும் என்ற முயற்சி செயல்வடிவம் பெற்றமை முக்கியமான விடயமாகும். அந்த வகையில் 2000ம் ஆண்டு தை மாதம் குமுழமுனை விளையாட்டு மைதானத்தில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு புதிய இடத்தில் பாடசாலை நடைபெற்றது. இக்காலத்தில் பாடசாலைக்கான சொந்தக் காணி இல்லாத குறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நீக்கப்பட வேண்டுமென கிராம மக்களும், நலன்விரும்பிகளும், குறிப்பாக அப்போது அதிபராக கடமையாற்றிய திரு. த. பிரபாகரன் அவர்களதும் பங்குத் தந்தையாக கடமையாற்றிய அருட்தந்தை ஞா. பீற்றர் அடிகளாரதும் அரும் பெரும் முயற்சி களினாலும் கல்வித் திணைக்களத்தின் பண உதவிபெற்று குமுழமுனை விளையாட்டு மைதானத்திற்கருகிலுள்ள இரண்டு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தனியாருக்குச் சொந்தமான காணி ரூபா 25000 ற்கு வாங்கப்பட்டு பாடசாலைக்குச் சொந்தமாக்கப்பட்டது.

புதிய காணி சிரமதான முறையில் திருத்தப்பட்டு தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டு வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இக் காலத்தில் 2003ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் எமது பாடசாலை தரம் ஒன்பது வரை தரம் உயர்த்தப் படுவதற்கான அனுமதி கல்வியமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்றதைத் தொடர்ந்து 2004ம் ஆண்டு தரம் ஆறும் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் தரம் ஏழு, தரம் எட்டு வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டன தரம் ஒன்பது வகுப்பு நடத்துவதற்கு வேண்டிய பௌதிக வளமும், ஆசிரியர் வளமும் இன்மையால் அப்போது தரம் ஒன்பது ஆரம்ப்பிக்கப்படவில்லை. மேலும் பாடசாலைக் கட்டட வளத்தைப் பெருக்கிக் கொள்ள அரைநிரந்தரக்கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் கல்வியமைச்சினால் ஏற்படுத்தப்பட்டு அதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அருட்தந்தை ஞா. பீற்றர் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து கிணறு, சிறுவர் விளையாட்டு முற்றம் என்பன அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அடுத்து 2008ம் ஆண்டு ஏற்கனவே கல்வியமைச்சினால் வழங்கப்பட்ட சுற்று நிறுபத்திற்கமைவாக தரம் ஒன்பது வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது இவ்வாறு எமது பாடசாலை வளர்ச்சியுற்று வந்த வேளையில் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக 21.07.2008ல் பாடசாலை வன்னேரிக்குளத்திற்கு இடமாற்றப்பட்டது. தொடர்ச்சியாக நடைபெற்ற யுத்தத்தின் காரணமாக பிரமந்தனாறு பாடசாலைக்கு மாற்றப் பட்டு அங்கு ஏறக்குறைய மூன்று மாதங்கள் கல்விச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு கடுமையான யுத்தத்தின் காரணமாக பாடசாலையினுடைய வளங்கள் ஆவணங்கள் அனைத்தையும் இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகி 10.01.2009இல் அனைத்துக் கல்விச் செயற்பாடுகளும் முற்றாக நிறுத்தப் பட்டது. தொடர்ந்து மீள்குடியேற்றம் செய்யப்பட்டதோடு எமது பாடசாலையும் தனது கல்விச் செயற்பாடுகளை 2009.12.03ம் திகதியன்று அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. அ. றொபேட் கெனடி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலத்தில் எமக்கு வலயக்கல்வித் திணைக்களமும், யுனிசெப் நிறுவனமும் இணைந்து நூறடி அரைநிரந்தரக் கட்டடமும், இந்திய மக்களின் அனுசரனையோடு வகுப்பறை களைக் கொண்ட நிரந்தரக்கட்டடமும் அமைக்கப்பட்டு பன்னிரெண்டு நிரந்தர ஆசிரியர்களும் 175 மாணவர்களையும் கொண்டு மிளிர்வதோடு காலத்திற்கு காலம் சிறந்த கல்விப் பணியின் மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் ஆசிரியர்கள் ஏனைய அரச உத்தியோகத்தவர்கள், அருட்தந்தையர், திருநிலை களுக்குள் பணியாற்ற பயிற்சி பெறுபவர்கள் என பல்வேறுபட்ட துறைசார்ந்த வர்களையும் உருவாக்குவதற்கு அடித்தளம் அமைத்த பெருமைக் குரியது. என்பதோடு இனிவரும் காலங்களில் பல்வேறு சாதனைகளுக்கு தோற்றுவாயாக அமையும் என்பது திண்ணம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பாடசாலை

எனது பாடசாலை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குமுழமுனை என்னும் அழகிய கிராமத்தில் அமைந்துள்ளது. அதன் பெயர் கிளி/குமுழமுனை அ. த. க. பாடசாலை. இங்கு தரம் ஒன்றில் இருந்து தரம் ஒன்பது வரை வகுப்புக்கள் உள்ளன. இங்கு நூற்றுஎழுபத்தைந்து மாணவர்கள் வரையில் கல்வி பயில்கின்றனர்.

எமது பாடசாலை அதிபரின் பெயர் திரு. அ. றொபேட் கெனடி ஆகும். இங்கே பதினாறுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கல்வி புகட்டுகின்றார்கள். இயற்கை அழகும் சிறந்த கல்வியும் ஒழுக்கமும் நிறைந்த பாடசாலை என்பதால் தான் இப்பாடசாலையை மிகவும் நேசிக்கின்றேன்.

**அ. தமிழினி**
**தரம்: 02**

# பள்ளிப்பருவம்

சிட்டுக்குருவி போல் சிறகடிக்கும் பருவம்
குழப்படி என்னும் கடலில் நீச்சல் அடிக்கும் பருவம்
நட்பு என்னும் சொத்தை சம்பாதிக்கும் பருவம்
கல்வி என்னும் இனிய தேனை அருந்தும் பருவம்
பரீட்சைகள் என்னும் சவால்களை எதிர் நோக்கும் பருவம்
ஆசான் எனும் தெய்வத்தின் ஆசி பெறும் பருவம்
எம் கலைகளைக் கலைக்களஞ்சியமாக மாற்றி அமைக்கும் பருவம்
கற்றதன் பயனாக நம் சொந்த உழைப்பில் தலைநிமிர்ந்து நிற்கும் பருவம்
வாழ்வின் சவால்களைப் பற்றி அறிய வைக்கும் பருவம்
மொத்தத்தில் நம்மை யாரென்று உலகிற்கு அறிய வைக்கும் பருவம்
மாணவர்களாகிய நாம் பாடசாலையில் கல்வி கற்கும் பருவம்
இந்தப் பள்ளிப்பருவம் தான்
சக நண்பர்களுடன் சேர்ந்து விளையாடும் பருவம் இந்தப் பள்ளிப் பருவம் தான்.

**ஆக்கம் வி. டனுஜன்**
**தரம்: 08**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

அந்திப் பகலாய் இறைவனை வந்தித்து
தொந்தியிலே எமைதாங்கி பற்பல
வலிகளைப் பொறுத்து அவனியிலே
தவழச்செய்தாள் என்தாய். தன்
உதிரத்தை எமக்கு உணவாக்கி இன்பம் கண்டாள்
கண்ணை இமை காப்பது போல்
துன்பங்கள் எமை அணுகாதவாறு காத்து நின்றாள்
அகரத்தை எம்கரம் பிடித்து கற்றுத் தந்தாள்
கல்வியும் ஒழுக்கமும் எம்மிரு கண்கள் எனப்
போதித்தாள் நம் கண்ட தெய்வமும் அவரே
"ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்
தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்"
என்ற வள்ளுவனின் கூற்றுக்கேற்ப நாளைய
சமுதாயத்தில் நல்ல சான்றோனாக கல்வி
மான்களாக உருவாகி எமை ஈன்ற
தாய்க்கு பெருமை சேர்ப்போம்.

து. துவாரகன்
தரம்: 02

## கிளி

கிளி ஒரு அழகான பறவை
இதன் இறகுகள் பச்சை நிறமானவை
அதன் சொண்டு சிவப்பு நிறமானது
கிளி பழத்தை விரும்பி உண்ணும்
அது அழகாகப் பேசும் பிராணி
அது மரப் பொந்தில் வாழும்
அது கீ கீ என்று கத்திக் கொண்டு உயரப்பறந்து செல்லும்

ஆக்கம்: சி. மதியரசி
தரம்: 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவ முதல்வர்கள்




பான்ட் வாத்திய அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

பிரார்த்தனை செய்யுங்கள்
நல்ல மனம் கிடைக்கும்
நல்ல மனம் உள்ளவர்களுக்கு
நிச்சயம் நல்ல நட்பு கிடைக்கும்

நட்பிற்கு ஆண், பெண் பேதம் கிடையாது
ஒரு வரையறைக்குள் கூற முடியாதது நட்பு
உலகிலும் ஒரு மடங்கு பெரியது நட்பு
உயிர் பிரியும் வரை தொடர்வது நட்பு

நட்பு ஒரு கைக்குழந்தை போல்
யார் அன்புடன் நடந்து கொண்டாலும்
இவர்களோடு ஒட்டி வந்து விடும்
நட்பு சுயநலம் அற்றது

உண்மையுள்ள நட்பு உலகம்
அழியும் வரை நம்பிக்கையுடன் வாழும்
நட்பு அன்பிற்குள் கட்டுப்பட்டது
நட்பிற்குள் உண்மையே உள்ளது.

வெண்ணிலவும் விண்மேகமும்
வெண்புறாவும் மணிமாடமும்
மதுமலரும் நறுமணமும்
போன்ற ஒற்றுமையான அன்பு கொண்டது நட்பு

நட்பு என்பது வெறும் மூன்றெழுத்து
ஆனால் அது வெகு இலகுவில் கிடைக்காது
அப்படி கிடைக்கும் நட்பு
இலகுவில் பிரியாது.

**ஆக்கம்: அ. விதுஷா**
**தரம்: 07**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தமே வாழ்வின் மூலதனம்

நாம் சுகமாக வாழ்வதற்கு சுத்தம் மிக முக்கியமானதாக கொள்ளப் படுகிறது. நாம் சுகமாக வாழ்வதற்கு தூய காற்று, தூயநீர், சுத்தமான நிலம் என்பன அவசியமானதாகும். நாம் உடலைப் பாதுகாப்பாக வைப்பது போல எமது சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். சுற்றுச் சுழலை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டுமானால் நிலம், நீர், காற்று போன்ற காரணிகளைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலமே எமது சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்.

சூழல் மாசடைவதற்கு எதுவாக உள்ள காரணிகளில் முதல்நீர் மாசடையும் வழிகளை நோக்குவோமானால் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவுப் பொருட்களை நீரினுள் கொட்டுதல், நச்சுப்பதார்த்தங்கள் நீருடன் கலத்தல் இறந்த பிராணிகளுடைய உடல் நீருடன் சேர்தல் போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் நீர்மாசடைகிறது.

அடுத்து நிலம் மாசடைவது பற்றி பார்த்தால் வீட்டுப்பாவனை கழிவுப் பொருட்கள் தொழிற்சாலைக் கழிவுப்பொருட்கள் போன்றவற்றை நிலத்தில் கொட்டுதல் மற்றும் பல்வேறுபட்ட மனித நடவடிக்கைகள் காரணமாகவும் நிலம் மாசடைகிறது.

அடுத்து நாம் சுவாசிப்பதற்கு மிக அத்தியவசியமாகியது உயிர்கள் வாழ் வதற்கு அவசியமானதுமான வளிமாசடையும் வழிகளை நோக்குவோ மானால் வளியானது வாகனங்களிலிருந்து வரும் புகைகள் தொழிற்சாலை களிலிருந்து வெளிவரும் நச்சுவாயுக்கள் மூலமாகவும் எமது சுற்றுப்புறச் சூழல் அதிகளவில் பாதிக்கப்படுகிறது. இவ்வாறாக நடைபெறும் செயற்பாடு களைத் தவிர்பதன் மூலம் நாம் எமது வீட்டையும் சுத்தமாக வைத்திருக்கலாம்.

வீட்டில் உள்ள மலசலகூடத்தை சுத்தமாக பேணுவதோடு மலசல கூடத்திற்கு செல்லும் போது பாதணிகளுடன் செல்லுதல், கைகளுக்குச் சவர்க்காரமிட்டு தூய்மையாக கழுவுதல் போன்ற நற்பண்புகளை நாம் கடைப் பிடிப்பதன் மூலமாகவும் நாம்சுகமாக வாழமுடியும். சிறந்த முறையில் உணவுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கவழக்கங்களை கடைப் பிடித்து கீரைவகைகள், முட்டை பால் போன்ற நிறையுள்ள உணவுகளை அதிகளவில் உண்ணுதல் வேண்டும். நாம் எமது சூழலை பேணிப்பாதுகாத்தல் வேண்டும் சூழலில் காணப்படும் பேணிகள், சிரட்டைகள், கோம்பைகள் போன்ற பொருட்களில் நீர் தேங்கி நிற்பதன் மூலம் நுளம்பு பெருக்கமடைந்து மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் உண்டாகின்றன அவற்றை அழித்து அனைவரும் சுத்தத்தை சிறந்த முறையில் பேணி நல்வாழ்வு வாழ வேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்" கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்ற பழமொழக்கேற்ப சூழலை சுத்தமாக வைத்திருந்து நலத்துடன் வாழ்வோம்.

அ. தமிழவன்
தரம்:- 06



**நோக்கம் எதுவென்பதை முதலில் தீர்மானி.**
**அதுவே இலக்கு என்பதை உறுதி செய்து கொள்**
**கையில் பணமில்லையே..உடலில் வலுவில்லையே**
**உதவி செய்ய நண்பர்கள் இல்லையே ...**
**என்றெல்லாம் யோசித்து நேரத்தை வீணாக்காதே**
**எதற்கும் பயப்படாதே... தயங்காதே... !**
**இலக்கை நோக்கி அடியெடுத்து வை.**
**தொடர்ந்து முன்னேறு.**
**சோதனைகள் விலகும். பாதை தெளிவாகும்.**
**நோக்கத்தை அடைந்தே தீருவாய்.**
**அதை யாராலும் தடுக்க முடியாது.**

***சுவாமி விவேகானந்தர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

பத்து மாதம் உன் கருப்பையில்
என்னை அடைகாத்து வந்தாய்
அனுதினமும் என் நலனில் நீ மிகவும்
அக்கறையாகவும் அவதானமாகவும் இருந்தாய்

நில மங்கையின் கையில் நான் தவழ
நித்தமும் தவம் செய்து கொண்டாய்
கண்ணை இமை காப்பது போல்
என்றும் கவனத்துடன் என்னை வளர்த்தாய்

தன்னலமே இல்லாத தாயாக - இந்த
தரணியிலே நீ இருந்தாய்
எண்ணெழுத்தும் கவனத்துடன் கற்க வைத்தாய்
உலகில் எல்லோரும் மதிக்க வைத்தாய்

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் உன்னை
போல் ஒரு இனிய நல் உறவை
இந்த ஜென்மத்திலும் எட்டிப்பிடிக்க முடியாது
இறைவனை விட ஒருபடி கூட அம்மா என்னும் உறவு

அம்மா நீ எந்தன் - உயிர்
மூச்சு என்றே தான் சொல்வேன் - அம்மா
எனக்கு இன்னொரு பிறவி என்று இருந்தால்
அதுவும் உனக்கு மகளாக வேண்டும்.

**ஆக்கம்:– த. தர்சினி**
**பழைய மாணவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 01 மாணவர்கள்



தரம் - 02 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனி

மனிதனது தேவைகளை நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்டது கணனியாகும். இது ஒரு மின்னணுச் சாதனம். இது கட்டளைகளுக்கு ஏற்பவே செயற்படும். மனிதர்களுக்குத் துணைபுரியும் கணனி இன்று கல்வித்துறையில் முக்கிய பங்காற்றுகின்றது. எங்களது வேகத்துக்குத் தகுந்தபடி மெதுவாகவும், துரிதமாகவும் கற்றுக்கொள்ளலாம். ஆரம்பகாலங்களில் கணனி பல்கலைக் கழகங்களிலும், விஞ்ஞன ஆராய்ச்சிக்கூடங்களிலுமே பயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்று கணனி நுழையாத துறைகளே இல்லை என்று கூறும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

ஓவியம் வரைதல், இசை மெட்டுக்கள் அமைத்தல் போன்ற மனிதனுக் குரிய செயல்களிற் கூட கணனி தனது திறமையை நிரூபித்து நிலைநாட்டி வருகின்றது. விந்தை புரியும் கணனியின் தோற்றத்திற்கு வித்திட்டவர் சாள்ஸ் பபேக் ஆவார். இவர் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் கணனித்துறைப் பேராசிரியராவார். இவரே கணனியின் தந்தை என அழைக்கப்படுகின்றார். உலகின் முதலாவது தானியங்கிக் கணனி பமார்க் ஆகும். இக் கணனி 1944ம் ஆண்டு உருவாக்கப்பட்டது முதன் முதலாக விலைக்கு விற்கப்பட்டது. இது எளிதில் கையாளக் கூடியது.

கணனி பயன்பாட்டிற்கு வந்த போது வேலையில்லாத பிரச்சினை உருவாகும். எனக்கருதினார் ஆனால் இன்று பலருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குகின்றது. கணனியில் ஒவ்வொரு இசைவையும் மனிதனே நிர்ணயிக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு செயலைச் செய்வதற்கு மனிதன் தெளிவாக விளக்கம் கொடுக்க வேண்டியுள்ளது. கணனியால் எதனையும் சுயமாகச் செய்ய முடியாது இதனால் தான் அறிஞர்கள் கணனியை "இலத்திரனியல் முட்டாள்" என அழைக்கின்றார்கள்.

கணனி வருகையால் உலகம் முழுவதும் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பு எமக்கு கிடைக்கின்றது. இணையத் தொடர்பை கணனிக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்ற போது கணனியின் பயன்பன்மடங்காகின்றது கணனி பற்றிய அடிப்படைச் செய்திகளை அறிந்து கொள்ளாதோர் மற்றும் கணனியை இயக்கத் தெரியாதோர்களால் கணனி ஒதுக்கப்பட்டுள்ள சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நமக்கு நவீன உலகில் கணனி பற்றிய அறிவு இன்றியமையாத ஒன்றாக காணப்படுவதால் நாம் கணனியறிவை தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டியவர் களாக உள்ளோம். ஆகவே இன்றைய நவீன காலத்தில் நடைபயிலும் நாம் கணனி பற்றி கட்டாயம் அறிந்திருக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். உலகத்தையே உள்ளங்கையால் அடக்கிப் பாரக்குமளவிற்கு விஸ்தரித்திருக்கும் இந்த உலகு எதிர்வரும் காலங்களில் முழுவதும் கணனி யுகமாக மாறாது என்று கூறுவதில் நியாயப்பாடில்லை.

"இலத்திரனியல் முட்டாள்" என்று கணினியை கூறிய போதும் கணினி இல்லாவிட்டால் எம் வாழ்வில் வேலைகளும் சுலபமில்லை என்றளவிற்கு கணினியின் முக்கியத்துவம் வளர்ந்து விட்டது என்றே கூறலாம். கணினியுகத்தில் வாழும் நாம் கணினியின் தேவைகளைக் கருத்திற்கொண்டு எம்மை நாமே வளப்படுத்துவோம் வலுப்பெறுவோம்.

**ஆக்கம்:- ந. திஷாளினி**

**தரம்:- 08**

ஏ மனமே! நான் யார் என்று மனத்தை விசாரித்தால் மனம் மாய்ந்து போகும்.
நேரான ஞானமார்க்கம் இதுவேயாகும். மறந்துவிடாதே.
உனக்குள்ளிருக்கும் மன சாந்தியைத் தோழனாக்கிக் கொண்டு
அவன் சொல்லுகிற படி கேள்.
பணிவிடை இல்லாது ஒருநாளும் கழியலாகாது. மறந்துவிடாதே.
சஞ்சலமுள்ளவன் மனம் நரகவேதனையை அனுபவித்துக்
கொண்டேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

என்னைச் சுமந்த
அம்மா நீ
தேய்ந்து வளரும் நிலவுமல்ல
தேயாத கோளுமல்ல

கற்பக விருட்சமாய்
கருணை வழங்கும்
நிலவைப் போல என்னை
தொட

உலகிலுள்ள உன்னதமான
வாழ்க்கைக்கு
உரமானவளே உள்ளே உந்தன் கொடி பற்றி
இருந்தேன் கருவறையில்

உன்மடியில் இருந்து
அழுதுண்ட என்னை
ஏணியாக உயர்த்தியது
உன் அன்பு தான்

உன் தூய்மையான அன்பின்
மகத்துவத்தை வார்த்தைகளில்
அடங்கி விடமுடியாது
அம்மா.

**ஆக்கம்:- சு. கீரன்**
**தரம்:- 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கடமை

இன்றைய மாணவர்களே நாட்டின் நாளைய பிரஜைகள். பிரஜைகள் மட்டுமல்ல வருங்காலத் தலைவர்கள் என்றே கூறலாம். நாட்டுக்கு ஏற்ற நல்ல குடி மக்களாக, நாட்டை ஆளும் தகுதி படைத்த நல்ல தலைவர்களாக அவர்கள் திகழ வேண்டும். அதற்கேற்ற மனநிலை இன்றைய மாணவர்களிடையே உருவாக வேண்டும். பாடசாலைகளில் கற்கும் காலத்திலேயே மாணவர்களிடையே நல்ல குறிக்கோள், சமூகநோக்கு, நாட்டுப்பற்று என்பன முளை கொள்ள வேண்டும். இன்றைய மாணவர்கள் தமக்கும் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் பயனுள்ள வர்களாக உருவாதல் அவசியமாகும். இவை மாணவர் தம் கடமை என்பதை உணர வேண்டும்.

**மாணவர் யார்?**

கல்வி கற்போர் மாணவர் எனப் பொதுவாகக் கூறுவர். ஆனால் அச்சொல் ஆழ்ந்த கருத்துடையது. மாண்பினை ஆக்குவோம் அல்லது மாண்பினை உடையவர்கள் என்பது இதன் உட்பொருளாகும். "மாண்பு" என்ற சொல் கல்வி மாண்பை மட்டும் குறிக்கவில்லை. இதனையே வள்ளுவர்

"கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக என்கிறார்"

கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்பதோடு மட்டும் நின்றுவிடாது கற்றபடி வாழ வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். கற்றபடி வாழ்தலின் மூலம் மற்றவர்களையும் அறநெறிப்படுத்திச் சமூகத்தில் மாண்பினை உருவாக்க வேண்டும். இத்தகையதொரு பொருள் கொண்டதே மாண்பு என்ற சொல்லாகும். இத்தகைய மாண்பு கொண்டவரே மாணவர் எனலாம்.

**இன்றைய மாணவர் நிலை:-**

முற்கால மாணவர்கள் அறிவுச் செல்வத்தைத் தேடிக் கொள்வதே தம் தலையாய நோக்கமெனக் கருதினர். அதனால் தேன் உள்ள இடத்தைத் தேடிச் செல்லும் தேனீக்கள் போலக் கல்விச் செல்வம் உள்ள இடத்தைத் தேடிச் சென்று கற்றனர் ஆனால் இன்றைய மாணவர் தம் நிலை என்ன?

ஒருசிலர் அறிவை நாடி அதைப் பெற்றுக்கொள்ள முயல்கின்றனர். ஆனால் பெரும்பான்மையோர் பரீட்சைகளில் அதிக மதிப்பெண்கள் பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்னும் குறிக்கோளுடன் செயற்படுகின்றனர். வேறுசிலர் பரீட்சையில் தேர்ச்சி பெற்றால் போதும் என்று நினைக்கின்றார்கள். மற்றும் சிலர் தொழில் வாய்ப்பினை தேடிக் கொள்ளும் நோக்குடன் கற்கின்றனர்.

கல்வி என்பது மாணவர் வாழ்க்கைக்கு உதவுவதாக அமைய வேண்டும். "ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது" என்ற முதுமொழிக்கு ஒப்ப வெறும் ஏட்டுக்கல்வியை பயில்வதால் மட்டும் மாணவர் திருப்தி கொள்ளக் கூடாது. தாம் பெறும் கல்வி தமக்கும் சமூதாயத்திற்கும், நாட்டுக்கும் பயன் தருவதாக அமைதல் வேண்டும் என்பதை மாணவர்களாகிய நாம் நன்கு உணர்தல் வேண்டும்.

**தொண்டு மனப்பான்மை**

மாணவர் கல்வியைக் கற்றால் மட்டும் போதாது தாம் கற்ற கல்வியால் தாம் வாழும் சமூகத்துக்கும் பயன்கிட்ட வேண்டும் என உணர்தல் வேண்டும். தொண்டாற்றும் மனப்பாண்பினை பெற வேண்டும். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்றார் அப்பர் பணிபுரி பயனை எதிர்பாராதே என்றார் கிருஷ்ணர் உன்னைப் போல் உன் அயலவனையும் நேசி என்றார் இயேசு. இவர்களது அருளுரைகள் எல்லாம் நமக்கு எதைப் போதிக்கின்றன? நாம் உள்ளத்தாலும் உடலாலும் பிறர்க்கு உதவ வேண்டும் என்ற உன்னத குறிக்கோளையே உணர்த்துகின்றன.

மாணவர்களிடையே தொண்டாற்றும் மனப்பண்பு உருவாக வேண்டும். சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச்சங்கம், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் போன்ற சமூக நல இயக்கங்களில் மாணவர் பங்கு கொள்ள வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் உள்ளங்களில் சமூக நலனோம்பும் பண்பு உருவாகும் தொண்டாற்றும் ஆர்வம் துளிர்விடும். அதன் மூலம் சமூகம் பயன்பெறும்.

சுருங்கக் கூறின் வருங்காலத்தைச் சிருட்டிக்கும் சிற்பிகள் இன்றைய மாணவர்களே. அவர்களின் ஆக்கமும் அழிவும் சமூகத்தின் ஆக்கமும் அழிவுமாகும். இதனை நன்குணர்ந்து மாணவர்களை நல்ல வழியில் இட்டுச் செல்ல ஆசிரியர்களும் அரசும் வழிகோல வேண்டும். நல்ல கல்வியைப் பெறும் மாணவர்களால் அவர்களும் சமூகமும் நல்ல பயனைப் பெற்றிட முடியும். மாண்புடையோர் மாணவர் என்ற சொல் நிலைக்கும் வண்ணம் மாணவர்களாகிய நாம் செயற்படுவோமாக!

**ஆக்கம்:- சி. சிஜானி**
**தரம்:- 09**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆசானை நான் மறவேன்

குற்றங்கள் பல களைந்து
குறையுள்ள எனை நிறைவுள்ளவனாக்கி
குவலயத்தில் நான் வாழ பல்லறிவு ஊட்டிய
ஆசானே! உனை நான்
என் உயிர் உள்ளவரை மறவேன்.

ஏச்சுக்கள் பல ஏசிவிடினும் அவையாவும்
ஏற்றங்கள் நான் பெறவே என்பதை உணர்வேன்
ஏணிபோல் நின்று எனை ஏற்றிவிட்டிடும்
ஆசானே உனை நான்
என் மூச்சு உள்ளவரை மறவேன்.

**ஆக்கம்:- றோ. றோமில்டன்**
**தரம்:-**

# தமிழ்மொழி

தமிழ் எங்கள் தாய்மொழி
அது இனிமையான சிறந்த மொழி
தமிழ் உலக மொழிகளுள் ஒன்று
தமிழ்மொழி பேசுவோர் உலகெங்கும் உள்ளனர்
தமிழ்மொழி எங்கள் உயிர் போன்றது
தமிழ்மொழிக்கு அமுது என்று பெயர்
தமிழ்மொழியைக் கற்பது நமது கடமை
தமிழ் வளர நாம் வளர்வோம்
தமிழை வளர்த்திட நாம் முயல்வோம்
தமிழராக நாம் என்றும் வாழ்வோம்.

**ஆக்கம்:- சு. சபின்சலா**
**தரம்:- 05**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டார் பாடல்கள்

இப்பரந்த பாரினிலே விரிந்த நிலப்பரப்பினிலே தெளிந்த நீரோடை போன்று உறவுச் சங்கமமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனித இனம் நாகரிகம் எனும் விஞ்ஞான விளிம்பைத் தொட்டிருக்கும் இக்காலப்பகுதியிலே நாட்டார் பாடல்கள் எனும் தலைப்பில் கட்டுரையினை ஆராய்வோமாயின் நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள், இலக்கியங்கள் என்பன பற்றி ஆராயும் இயல் "நாட்டுப்புறவியல்" எனப்படும் இது இலக்கியம் கலை என இரு பிரிவினுள் அடங்கும்.

நாட்டார் இலக்கியமானது பாடல்கள், கதைகள், விடுகதைகள், கதைப் பாடல்கள் என பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. நாட்டார் பாடல்கள் நாடோடிப் பாடல், கிராமியப்பாடல், வாய்மொழிப்பாடல் எனப்பல பெயர்களால் அழைக்கப்படும் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வுகள் இப்பாடல்களின் பொருள்களாக அமைந்திருப்பதைக் காணலாம்.

நாட்டார் பாடல்களின் வகைகளில் தாலாட்டுப்பாடல், தொழிற்பாடல், கதைப்பாடல், ஒப்பாரிப்பாடல்கள், மலையகப்பாடல்கள், நலங்குப்பாடல் என்பன அடங்குகின்றன. அழுகின்ற குழந்தையைத் தேற்றுவதற்காக தாய்பாடும் பாடலை தாலாட்டு என்கிறோம்.

உதாரணமாக:-

முத்தே பவளமே – என்
முக்கனியே சக்கரையே
கொத்துமரிக் கொழுந்தே – என்
கோமளமே கண் மலர்வாய்.

இப்பாடல்கள் மூலம் தாயின் பாச உணர்வுகள் வெளிப்படுத்தப் படுகின்றன. தொழிற்பாடல்களை எடுத்துக் கொண்டால் தங்களுடைய வேலைகளை இலகுவாக மேற்கொள்வதறக்காகவும் பொழுதை சிறந்த முறையில் கழிப்பதற்காகவும் மகிழ்ச்சிகரமாக ஆடிப்படி தொழில் செய்வதற் காகவும் பாடப்பட்டன.

உதாரணமாக:-

வரம்போ தலகாணி – செல்லனுக்கு
வாய்க்காலோ பஞ்சுமெத்தை

எனும் வரிகளை குறிப்பிட்டுக் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப்பாடல்களை எடுத்துக் கொண்டால் படித்தவர்கள் மட்டுமல்ல பாமரமக்களும் விளங்கிக்கொள்ளும் வகையில் கதைகளைப் பாடல் வடிவிலே தொகுத்து மிகவும் சுவாரசியமான முறையில் பாடி மகிழ்வதே கதைப்பாடல்கள் ஆகும்.

திருமண வைபவத்திலே கலந்து கொள்கின்ற அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தி அவர்களின் களைப்பைப் போக்கி திருமண வைபவத்தில் திருமண தம்பதியினர் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு பாடப்படும் பாடல்களே நலுங்குப்பாடல்கள் எனப்படும்.

அடுத்து ஒப்பாரிப்பாடல்களை எடுத்து நோக்கினால் இறந்தவர் வீட்டிலே அவர்களின் வாழ்நிலை உணர்வுகளையும், மனவேதனைகளையும் வெளிப் படுத்தி இறந்தவர்களின் சேவை சொல்லி பாடப்படுகின்ற பாடல்கள் ஒப்பாரிப் பாடல்கள் எனப்படும்.

இவை தவிர மீனவப்பாடல், மருத்துவிச்சிப்பாடல், மலையகப்பாடல், ஏர்ப்பாடல் எனும் பல்வேறுபட்ட இதர பாடல்வகைகளும் ஆங்காங்கே அமைந்து காணப்படுகின்றன. இவை அனைத்தும் நாட்டுப்புறமக்களின் கிராமிய மண்வாசனையையும் தொழிற்தகைமையும் மனித உணர்வின் வெளிப்பாடு களையும் வெளிக் கொணர்ந்து பொழுது போக்கிற்காகவும் மனமகிழ்விற்காகவும் வேலையை எளிதாக்கவும் பாடப்படும் பாடல்களே நாட்டார் பாடல்கள் என்றால் அது மிகையாகாது.

**ஆக்கம்: ர. தங்கா,**
**தரம்:- 09**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 03 மாணவர்கள்



தரம் - 04 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலகன் பிறப்பு

ஏழைகள் எம் நடுவில்
வந்து உதித்த பாலகனாம்
பலஸ்தீன நாட்டிலே
ஜெரு சலேம் நகரத்திலே

பெத்தலகேம் எனும் ஊரில்
மாட்டுத் தொட்டிலிலே
ஏழைக்கோலமாக பிறந்தாரே
எங்கள் இயேசு பாலகன்.

மார்கழி மாதம் என்றால்
எம் எல்லோரிற்கும் மகிழ்ச்சியாம்
25 ஆம் திகதி என்றால்
எம் உள்ளம் பூக்கள் போல்

மலர்ந்திடுமாம் நத்தார்
நாள் என் றாலே ஏழைகள்
வீட்டிற்கு சென்று அவர்களிற்கு
கிறிஸ்து பற்றி சொல்லுதல்

அவர்களை மகிழ்ச்சி ஊட்டுவதன்
மூலம் அவர்கள் சந்தோசப்பட்டு
மகிழ்வடைவார்கள் / இயேசு
கிறிஸ்து என்றாலே நமக்கு சந்தோசம்.

சு. விதுர்ஷா
தரம் 09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கரையோர வலய முகாமைத்துவம்

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் முக்கியத்துவம் தற்காலத்தில் அதிகரித்து வருகின்றது. கடந்த பல தசாப்தங்களாக ஏற்பட்டு வரும் சனத்தொகை அதிகரிப்பே இதற்கான காரணமாகும். சனத்தொகை வளர்ச்சியால் கரையோர வலய வளங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதுடன் கரையோர சூழலின் மீது தாக்கத்தினையும் ஏற்படுத்தி வருகின்றது. இலங்கையின் கரையோர வலயத்தில் பல்வேறு வகையான சூழற் பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. கரையோரம் அரித்தல், மணல் அகழ்வு, சுண்ணக்கற்களின் அகழ்வு, கைத்தொழில் மாசாக்கி களின் வெளியேற்றம் இயந்திரப் படகுகளில் இருந்தும் பாரிய கப்பல் களிலிருந்தும் வெளியேறும் எண்ணெய்க்கசிவுகள், குறிப்பிட்ட மீனினங்களை அளவுக்கதிகமாக பிடித்தல், கரையோர இயற்கைத் தாவரங்களை வெட்டுதல் போன்ற காரணங்களால் இலங்கையின் கரையோரம் பாதிப்பிற் குள்ளாகின்றது.

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்டுவரும் சூழலியல் பிரச்சினைகள் 1970களிலேயே ஆரம்பமாகியிருந்தன கரையோர அபிவிருத்திகள் ஏற்பட தொடங்கிய போதே அதனுடன் தொடர்பான பிரச்சினைகளும் ஆரம்பித்தன. கரையோரத்தினை பாதுகாப்பதற்கான பல்வேறு நடவடிக்கை களும் முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1971இல் கொழும்பு துறைமுக ஆணைக்குழுவின் கரையோர பாதுகாப்பு பிரிவினால் முகாமைத்துவ அணுகுமுறை பரிந்துரை செய்யப்பட்டது. 1978 இல் கரையோர பாதுகாப்புக்கள் மீன்பிடி அமைச்சுக்கு மாற்றப்பட்டு கரையோர பாதுகாப்பு பிரிவு உருவாக்கப் பட்டது. 1981இல் கரையோர பாதுகாப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது இச்சட்டம் கரையோர பாதுகாப்பு என்ற விடயத்திற்கு பதிலாக கரையோர வலய முகாமைத்துவத்திற்கு அதிக அழுத்தம் கொடுத்தது. இவ்வாறான நடவடிக் கைகள் மூலம் கரையோர வலயம் முகாமை செய்யப்பட்டு வருகின்றது.

இலங்கையின் கரையோர வலயத்தினை பேணிப்பாதுகாப்பதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும். அதாவது கரையோர அரித்தல் நடவடிக்கைகளிலிருந்து கரையோரத்தை பாதுகாப்பதற்கு தடுப்பு அணைகள் அமைத்தல் வேண்டும். அத்துடன் கரையோர தாவரங்களை வெட்டாது அவற்றை பாதுகாத்தல் வேண்டும் அதனையும் மீறி தாவரங்களை வெட்டுவோருக்கு எதிராக கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். மீன்பிடித்தொழிலில் உள்ளவர்களும் ஏனையோரும் கரையோர வளங்களை பாதுகாப்பதில் அக்கறையுடையவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் மக்களின் பங்கு பற்றுகையும் விழிப்புணர்வும் மிக அவசியமானது. ஆகவே எமது நாட்டின் கரை யோர வலயத்தினை பாதுகாப்பது எம் எல்லோரினதும் தார்மீக கடமையாகும்.

**ஆக்கம்:- சு. விதுர்ஷா**

**தரம்:- 09**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பார்வையில் எனது பாடசாலை

உலகுக்கெல்லாம் உணவூட்டும் தொழில்களிலே மேன்மையான தொழிலாகக் கருதப்படும். உழுதுண்டு வாழும் மக்களைக் கொண்டது குமுழமுனைக் கிராமம் இக்கிராமத்தின் கல்வியறிவை பெருக்கும் கலைக்கூடமாக விளங்குவது கிளி/குமுழமுனை அ. த. க. பாடசாலை ஆகும். இப்பாடசாலை 1935ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை ஆரம்பத்தில் இக்கிராம மக்களுக்கு மாத்திரமல்ல பல்லவராயன்கட்டு, கரியாலை நாகபடுவான் நாச்சிக்குடா ஆகிய கிராம மக்களின் பிள்ளைகளும் இப் பாடசாலையிலே கல்வி பயின்றார்கள்.

அந்தவகையில் நானும் 1973ம் ஆண்டு சின்னஞ்சிறு பாலகியாக தரம் - 01இல் காலடி பதித்தேன் அப்போது இப்பாடசாலையில் யாழ் நவாலி என்னும் இடத்தை சொந்த இடமாகக் கொண்ட திருமதி பேரின்பநாதன் அன்னபூரணம் என்பவர் அதிபராகக் கடமையாற்றினார். அவர் என்னை இன்முகத்துடன் வரவேற்றமை கல்வியில் விருப்பம் கொண்டு கற்பதற்கு எனக்குத் தூண்டு கோலாக இருந்தமை இன்றும் எனது மனதை விட்டு அகலாத நிகழ்ச்சியாகப் பதிந்துள்ளது. தொடர்ந்து அங்கு தரம் - 05 வரை இவ் அதிபரின் கீழ் கல்வியைக் கற்றேன். பின்பு இடைநிலைக் கல்வியினை கிளி/ நாச்சிக்குடா அ. மு.க. பாடசாலையிலும் எனது உயர் கல்வியினை யாழ்/ இளவாலை திருக்குடும்ப பாடசாலையிலும் கற்றேன்.

எனது இடைநிலை, உயர்கல்வி இவற்றை இலகுவாகக் கற்று சித்தி பெறுவதற்கு வித்திட்டது எனது ஆரம்ப பாடசாலையாகிய குமுழமுனைப் பாடசாலை எனக்கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

பின்பு 1979ம் ஆண்டு தை மாதத்தில் சேவை அடிப்படையில் தொண்டர் ஆசிரியராக கடமையாற்ற ஆரம்பித்து 1997ம் ஆண்டு வரையிலும் இச்சேவையினை இப் பாடசாலைக்கு நிறைவாக வழங்கினேன். இக்காலத்தில் நான் நல்முறையில் பிள்ளைகளுக்கு கல்வி ஊட்டுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய கிளிநொச்சி மாவட்ட கல்வி அதிகாரியும், கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விக்கு வித்திட்டவருமான உயர்திரு பொன் சபாபதிஐயா அவர்களையும் நன்றியோடு நினைவு கூர்ந்து அவரின் ஆத்மா இறைவனோடு சங்கமிக்க இந்நேரத்தில் வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இப்பாடசாலையின் அதிபராக நியமனம் பெற்ற திருமதி சண்முகலிங்கம் காலத்திலும் திரு. ந. நடேசமூர்த்தி ஆகியோரின் காலத்திலும் சேவையாற்றினேன். பின்னர் 2006.02.06 அன்று மீண்டும் அரச நியமன ஆசிரியராக கற்பிக்க வந்தேன். இன்று 04 வருடங்களை பூர்த்தி செய்யும் வேளையில் இப்பாடசாலையின் பழைய மாணவி என்ற வகையிலும் ஆரம்பக்கல்வி ஆசிரியர் என்ற வகையிலும் இந்தப் பாடலைக்கு உதவிய கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் என் உள்ளத்தில் நினைத்து மகிழ்வதோடு இப் பரிசளிப்பு நிகழ்வையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

**திருமதி விக்ரோறியா தோமஸ்,**
**ஆரம்பக்கல்வி ஆசிரியரும்,**
**பழைய மாணவியும்.**

**சர்வதேச தொலைத் தொடர்பு தினம்:-**

- ❖ வருடாந்தம் மே 17இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- ❖ 2013ம் ஆண்டு இத்தினத்தின் தொணிப்பொருள் "தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் வீதி பாதுகாப்பினை மேம்படுத்தல் என்பதாகும்.
- ❖ உலகம் முழுவதும் முக்கியமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஏற்படும் வீதி விபத்துக்களில் வருடாந்தம் சுமார் 1.3 மில்லியன் மக்கள் உயிரிழப்பதுடன் மேலும் 30 - 50 மில்லியன் மக்கள் காயமடைகின்றனர்.
- ❖ 1969 முதல் சர்வதேச தொலைத்தொடர்பு தினம் அனுஸ்டிக்கப்படுவது 1965 முதலாவது சர்வதேச தொலைபேசி மாநாடு நடாத்தப்பட்டது.
- ❖ இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆனைக்குழுவின் தலைவர் திரு. லலித் வீரதுங்க ஆவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாயம்

பிரித்தானிய குடியேற்ற ஆட்சியிலிருந்து விடுதலையடைந்த நாடுகள் பிரித்தானியாவை தலைமை நாடாக கொண்டு தமது பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காண்பதற்கென 1944ல் உருவாக்கப்பட்டதே பொதுநலவாய நாடுகள் ஒன்றியமாகும் இதில் 54 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. இலங்கை 1948ல் சுதந்திரம் பெற்றது முதல் பொதுநலவாய அங்கத்துவநாடு எனும் அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது. பொதுநலவாயமானது தற்போது 19 ஆபிரிக்க நாடுகளும் 11 தென்பசுபிக் நாடுகளும் 10 கரீபியன் நாடுகளும் 8 ஆசிய நாடுகளும் 3 அமெரிக்க நாடுகளும் 3 ஐரோப்பிய நாடுகளும் அங்கத்துவம் பெற்றுள்ளன.

உலக பரப்பளவில் 29958 050 சதுர கிலோமீற்றரினை தன்னகத்தே உள்ளடக்கியிருக்கின்ற பொதுநலவாயமானது 2245 மில்லியன் சனத்தொகை யையும் கொண்டியங்குகின்றது. ஐரோப்பாவில் ஐரோப்பிய யூனியன் இயங்குவது போல் பொதுநலவாய யூனியன் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்று பொதுநலவாய உறுப்பு நாடுகள் சில விரும்புகின்றன. இதன்போது இந்த யூனியனுக்குள்ள விஸா இன்றி பயணம் செய்தல், சுதந்திர வர்த்தகம், பொதுவான வெளியுறவுக் கொள்கை என்பனவும் உருவாக்கப்பட வேண்டும் எனவும் விரும்புகின்றன.

பொதுநலவாய நாடுகளின் முக்கிய குறிக்கோள் ஜனநாயகத்திற்கு வலுவூட்டல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல் நல்லாட்சியை ஏற்படுத்தல், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தல் தனிமனித உரிமைகளைப் பாதுகாத்தல் மனித சமூக சமத்துவம் பேணுதல், தாராள வர்த்தகம் நடத்துதல் உலக சமாதானத்தை நிலை நிறுத்த துணைபுரிதல் போன்றனவாகும் பொதுநலவாய உறுப்பு நாடுகள் எதிர்கொள்ளும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் மற்றும் தற்கால நிகழ்வுகள் என்பன பொதுநலவாய மாநாடுகளில் ஆராயப்படுவதுடன் சில வேளைகளில் உறுப்பு நாடுகள் உச்சிமாநாட்டில் பொதுத்தீர்வு ஒன்றை எட்டி அதனை கூட்டறிக்கை மூலம் வெளியிடுகின்றன.

பொதுநலவாய மாநாட்டின் முதலாவது மாநாடு 1971ல் சிங்கப்பூரிலும் 23வது மாநாடு 2013 நவம்பரில் இலங்கையிலும் நடைபெற்றது. இம்மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்வமைப்பின் உறுப்பு நாடு ஒன்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறுகின்றது. பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ்சர்மா ஆவார். நம் எலிசபேத் மகாராணி பொதுநலவாயத்தின் தலைவியாக இருக்கின்றார். அத்துடன் இதன் தலைமையகம் லண்டனில் மார்லப்ரோ ஹவுசில் அமைந்துள்ளது. பொதுநலவாய மாநாட்டின் தற்போதைய தலைவராக எமது நாட்டின் ஜனாதிபதி அதிமேதகு மஹிந்த ராஜபக்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார் இவர் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு தலைவராக செயற்படுவார்.

பொதுநலவாயநாடுகளின் அமைப்பு பலதுறைகளிலும் தனது செயற் பாட்டை வி ஸ்தரித்துள்ளது. அந்த வகையில் பல துணை நிறுவனங்களை உள்ளடக்கி செயற்பட்டு வருகின்றது. பொதுநலவாய நாட்டுடன் வர்த்தக மன்றம் இளைஞர் மன்றம், பொதுநலவாய மக்கள் மன்றம் போன்றவற்றின் மூலம் பொதுநலவாயத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றி வருகின்றன என்பது குறிப்படத்தக்கதாகும்.

**திரு. ம. திசறூபன்**
**ஆசிரியர்**

## இலங்கை நனோ தொழில் நுட்ப நிறுவனம்

- 2013 ஒக்டோபரில் நெரோ தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானபூங்கா மற்றும் நெறோ தொழில்நுட்ப தனிச்சிறப்பு நிலையம் திறக்கப்பட்டுள்ளது.
- ஹோமாகமவில் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்நிறுவனம் 2008 இல் நிறுவப்பட்டதன் பின் 2004 முதல் இலங்கைத் தொழில் நிறுவனங்கள் உலக சந்தையில் சிறந்த போட்டியாளராக திகழும். இலங்கையின் இயற்கை வளங்களுக்கு மேலும் மதிப்பு சேர்ப்பதை பிரதான குறிக்கோளாக வைத்து தமது ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்ததுடன் விவசாயத்துறை, நீர் சுத்திகரிப்பு மற்றும் சுகாதார துறையில் உள்ள சர்வதே பிரச்சினைள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு மூலோபாய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 05 மாணவர்கள்



தரம் - 06 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01) இலங்கையின் முதலாவது பெண்கள் பாடசாலை
உடுவில் மகளிர் கல்லூரி

02) இலங்கையில் வெளியாகிய முதல் தமிழ்ப் பத்திரிகை
உதய தாரகை

03) மிகவேகமாகச் செல்லக்கூடிய பாலூட்டி விலங்கு
சிறுத்தைப்புலி

04) இலவச பாடநூல் விநியோகம்
1980ம் ஆண்டு

05) இலவச சீருடை விநியோகம்
1993ஆம் ஆண்டு

06) உலகின் முதலாவது பெண் பிரதமர்
ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா

07) மனித உடலில் வளர்ச்சி அடைந்த எலும்புகள்
206

08) பின்நோக்கி பறக்கக்கூடிய பறவை
ஹம்பிங்போட்

09) மனித உடலில் இறுக்கமான பகுதி
பல்மிளிரி

10) மனித உடலின் மென்மையான பகுதி
மூளை

**ஆக்கம்:- சூ. தமிழ்நிலா**
**தரம்:- 02**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஏக்கம்

*அன்று அன்னையின் கருவறையில் காத்திருந்தேன்*
*வெளி உலகைக்கான*
*இன்று என் பாடசாலை மடி சாய்ந்து ஏங்கும் என்*
*ஏக்கங்கள் தான் இவை*

மாறிவரும் மாற்றங்கள் எல்லாம்
மாணவர் நம் மனதை மாற்றதோ?
என ஏங்குகின்றேன் நிதமும்
பாதுகாப்பற்ற இந்த பாசமற்ற உலகிலே
பாலூட்டிய தாய்கூட பராமரிக்க மறுக்கும்
இந்த பரிதாப நிலை புரிகின்றதா? தெரிகின்றதா?

பட்டதாரியாக்கும் என் பெற்றோர் என்னை
வாழ்வின் பட்டதாரியாக்க மாட்டார்களா?
என ஒலிக்கும் மாணவர் குரல்
வேகத்தோடு வாழ கற்றுக் கொள்ளும் நாம்
விவேகத்துடன் வாழ வழி கேட்டு ஏங்குகின்றோம்.

இழப்புக்கள் தான் எம் வாழ்வின் இறுதிநியதி என
எண்ணி இருப்பதை இழக்கின்றோமே ஆனால்
இழந்து விடா நம் கல்வி இறுதிவரை
தலை நிமிர வைக்க வேண்டுமென ஏங்குகின்றோம்

விலையேற்றம் பெற்ற நம் விலைவாசி வாழ்வு
நம் மாணவர் சமூகத்தை விற்று விடுமோ என ஏங்குகின்றோம்
வாழப் பிறந்த நாம் வாழ வழி கேட்கின்றோம்
வரமதனை வல்ல தேவன் வழங்குவார் என நம்புகின்றோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைக்கப்பட்ட மனிதத்தன்மையை
மாணவர் நாம் மதித்திடுவோம்
விதைத்திடுவோம் மனித மாண்புகளை
எழுந்திடுவோம் புது உலகுதனை படைத்திடவே

பசித்திருக்கும் பாலக சமூகமாக
விடுதலை தேடும் மாணவ சமூககமாக
இலட்சியத்தை நாடும் இளைஞர் சமூகமாக
நல் மதிப்பை நாடும் பெற்றோர் சமூகமாக
கல்வியில் நம் ஏக்கங்களை விதைத்திடுவோம்.

தெரியாத பயணங்கள் எல்லாம்
அறியாத மனிதர்கள் எல்லாம்
புரியாத மாற்றங்கள் எல்லாம்
நமக்கு தடையல்ல முன்னேறுவோம் - நாம்
முன்னேறுவோம் முழுமூச்சோடு முன்னேறுவோம்

ஆக்கம்:- ப. பாலசுதன்
தரம் - 09

**இலங்கையின் தேசிய பாடசாலைகள்**

- 2013 ஓகஸ்டில் வடமாகாணத்தில் 7 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
- இதன் பிரகாரம் தற்போது 350 தேசிய பாடசாலைகள் உள்ளன.
- 1987ம் ஆண்டு தேசிய பாடசாலைகள் உருவாக்கும் நடைமுறை ஆரம்பமானது.

**நனோ தொழில்நுட்ப பூங்கா**

- இலங்கையில் நிர்மானிக்கப்பட்டு வரும் நனோ தொழில்நுட்ப பூங்கா 2013 ஒக்டோபரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- இப்பூங்கா ஹோமாகவில் நிர்மாணிக்கப்பட்டு உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமானவர்கள்!

இழிநீரில் உருவெடுத்து உயிர்ப்பிண்டமான மனித இனத்தை அமைதியான நேரங்களில் எண்ணிப் பார்ப்பேன்! ச்சீ.... மனிதர்களா இவர்கள்....? வெளியே சிரிப்பு........ உள்ளே வஞ்சகம்...... மனக்கயிறு இழுக்கும் எல்லா திசைகளிலும் நுழையும் மனிதனின் குணம்..... மனிதனுக்கு மட்டுமே இறைவன் வைத்தவை பொய் கலந்த மனிதன் எங்கெல்லாம் உலவுகிறானோ அங்கெல்லாம் ஏமாற்றப்படுவர் அப்பாவி மனிதர்கள். மிருகங்கள், பறவைகள் உருவங்களிலும் குணங்களினதும் ஒன்றாய் இருப்பதைக் போல் மனிதன் இல்லையே! பன்றி பன்றிதான் கரடி கரடிதான் நாய் நாய் தான் ஆனால் மனிதன் குணங்களில் மாறுபட்ட இந்த மகங்களை ஏதோ ஒரு காரணத்திற்காக இறைவன் படைத்திருக்கின்றான் போலும் மிருகங்களை காயப்படுத்தும் மனிதர்கள் மிருகங்களை விடக் கொடியவர்கள் அங்கே ஒரு பூனை அழுக்குக்குப்பை யிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தது அது என்னை பார்ப்பது போல இருந்தது மெதுவாக பதுங்கி வேறிடத்துக்கு சென்று கொண்டிருந்த அதன் செவிப்பகுதி காயப்பட்டிருந்தது.

எவனோ ஒரு மனிதன் வீசிய கல் அதன் செவிப்பகுதியில் ஊடுருவியிருக்க வேண்டும் இரத்தமும் அதில் சிறிது சிறிதாக கசிந்து கொண்டிருந்தது வேதனை தாங்காமல் மியாவ்..... என தன் குரலை உயர்த்தியது வலிகளைச் சொல்ல அவற்றுக்கு வாயில்லையே காயமுற்ற அப்பூனை ஒரு வாகனத்தின் அடிப் பகுதியில் ஒதுங்கியுள்ளது. மறுநாள் அப்பூனை இறந்த படி ஒரு குப்பைமேட்டில் கிடந்தது அதன்விதி முடிந்தது காணுகின்ற மிருகங்களிடமெல்லாம் பழகிப் பார்க்கத் துணியும் என் மனநிலை மற்றவர் முன் சிலவேளை என்னை பைத்தியக் காரனாய் சித்திரிக்கும்.

மனிதன் மனிதர்கள் முன் கேலிப்பொருள்தான். எங்கள் வீட்டின் பின் முற்றத்தை ஒருநாள் சுத்தம் செய்து கொண்டிருந்தேன் என் நண்பர் ரம்ஸியும் பற்றைகளை வெட்டி சுத்தம் செய்து கொண்டிருந்தார் டெங்கு ஒழிப்பு பரிசோதகர்கள் திடீரென்று வந்து விட்டால்.... அதற்கே சுத்த ஏற்பாடு பற்றையை அகற்றும் போது பாம்பொன்று நெளிந்தபடி வேறொரு பகுதிக்குச் ஓடிக் கொண்டிருந்தது.

நண்பர் பாம்பை கொல்ல முற்பட்டார் நான் தடுத்தேன் அது ஒன்றும் செய்யாது சாரைப்பாம்பு.... ஓடிப்போகட்டும் அதைக்கொல்ல வேண்டாம்...! என்று நான் சொல்லியும் கேட்காத நண்பர் பாம்பை தான் வைத்திருந்த மண்வெட்டியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாக்கினார் சுருண்டு சுருண்டு செத்துப்போனது நமக்குத் தீங்கு செய்யாத ஒன்றை ஏன் கொல்ல வேண்டும்? என்னை நானே கேட்டுக் கொண்டு சமாதானமானேன் வெட்டியவர் வீறாப்புடன் பல் இளித்தார். மனித உணவுக்காக சில உயிர்கள் கொல்லப்படுகின்றன தான் அவை மனிதனுக்காக இறைவன் படைத்ததாகும் கடல்நிறைய மீன்கள் இல்லையென்றால் மீனவர்களுக்கு ஏது வேலை......? மிருக வதையில் மீறல்கள் கூடாது இதை மனிதன் உணர்வானா?

"மாடு வந்தால் முட்டும் என்பது தெரியும்" "மனுஷன் வந்தால் என்ன செய்வான் என்றே தெரியாது" நடிகர் நாகேஷ் ஒரு பழைய படத்தில் பேசிய வசனம் ஞாபகத்தில் வந்தது. மனிதர்களில் எல்லோரும் நண்பர்களா? எல்லோரும் பகைவர்களா? பிரித்தறிய முடியவில்லை பொறாமை என்ற கொடிய விஷம் ஒரு மனிதனிலிருந்து இன்னொரு மனிதனுக்கு ஏறிச்செல்வதால் வாழ்வு கெட்டுப் போகிறது. மிருகங்கள், பறவைகளுக்கு பொறாமை என்ற மொழி தெரியாது எங்கள் வீட்டுப்பகுதியில் பூனைகள் அதிகம்.

பலபல நிறங்களில் அழகழகாய்ச் சுற்றிக் கொண்டிருக்கும் அதன் கண்கள் இரவில் மின்னும் அழகே தனி அழகு சத்தமின்றி நடக்கும் சாதுவான மிருகம் எலியை பொறுத்தமட்டில் அது வில்லன்பட்டம் வாங்கிய மிருகம் மற்றபடி மனிதர்களோடு அவர்கள் வீடுகளின் முற்றங்களிலும் சுற்றித்திரியும் நல்ல மிருகம்.

வழமையாக இரவில் வீடு வந்து நான் சாப்பிடுகின்ற வேளை ஒரு பிடியாவது பூனைக்கு வைக்கத் தவறுவதில்லை. தவறிய நேரங்கள் மிகக்குறைவு உணவு திகட்டும் வரை ஒட்டிய வயிறுகளுடன் காணப்படும் இந்தப் பூனைகளைப் பற்றி யார் சிந்திப்பார்கள்......? எவராவது மிச்சம் மிகுதி போட்டால் தானே அவைகளுக்கு அது உணவாகும்.

காத்திருக்கும் பூனைகளுக்கு கதவு திறந்தது எவரும் உணவு வைப்பது இல்லையே, "பசி" என்பது மனிதனுக்கு மட்டும் வைக்கப்பட்ட வார்த்யைல்ல அன்று காலைப்பொழுது மீன்காரன் தனது சைக்கிளில் மீன்களை விற்பதற்காக எமது பகுதிக்கு வருகிறான் அவன் வருவதை எங்கிருந்தோ அறிந்த இரண்டு பூனைகள் அவன் சைக்கிளுக்குப் பின்னாலேயே ஓடி வருகிறது. அந்தப் பூனைகள் மிகவும் அழகானவை. மீன் விற்பவன் சைக்கிளை நிறுத்தினான் பூனைகள் இரண்டும் எதையோ எதிர்பார்த்து நின்றது மீன் வாங்காமல் திரும்பிய வாடிக்கையாளர்களால் மீன்காரன் ஏமாற்றமானான்! பூனைகளோ அவன் கால்களை சுற்றிக் கொண்டிருந்தன அவன் இருந்த ஆத்திரத்தில் பூனைகளுக்கு உதைவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவும் அவன் காலடியில் அப்பூனைகள் வந்து நின்றன சைக்கிளில் கட்டியிருந்த மீன் பெட்டிக்குல் தாவமுனைந்தன மீன்காரனோ அப்பூனைகளின் செய்கைகளைக் கண்டு கொள்ளவில்லை. அவன் மீன் விற்காத கவலையில் இருந்தான் அடிக்கடி தொப்பியை தன் தலையில் இருந்து கழற்றிப் போட்டுக் கொண்டிருந்தான். பெரிய மீசை சிங்கள இனத்தவன் தமிழில் நன்றாக பேசுவான் அவனிடம் மீன்வாங்க வந்த பெண்கள் மீன் பிடிக்காது சென்று விட்டனர். சிலர் விலை அதிகமென்றனர். பூனைகளோ வெட்டப்படும் மீனின் கழிவுத் துண்டு களுக்காகத் தவம் இருந்தன.

எனக்குள்ளிருந்த உணர்வு எதையோ உத்தரவிட்டது எனது கை என்மேல் சட்டைப் பொக்கட்டைத் துலாவியது நாற்பது ரூபாய் தான் இருக்கிறது அதை மீன் காரனிடம் நீட்டினேன் இரண்டு சிறிய மீன்களை கேட்டேன் தரமுடியாது என்ற முக பாவத்தில் அவன் இருந்தாலும் அன்று விற்பனை இல்லாத நிலையில் இருந்தால் மீன்களைத் தர முன் வந்தான். அவன் சிரித்தபடி என்னை அதிசயமாக நிமிர்ந்து பார்த்தான் நான் பூனைகள் உண்பதைப் பார்த்துக் கொண்டிருந்தேன் அவனுக்கு அர்த்தம் புரிந்தன.

**ஆக்கம்:- ம. மதிநிலா**
**தரம்:- 08**

**புதிய FM வானொலி அலைவரிசை திட்டம்**

புதிய FM வானொலி அலைவரிசைத் திட்டம் 2012 நவப்பரில் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது 45FM வானொலி சேவை நிலையங்கள் 87.5 - 108 MHZ வரிசையில் இயங்கி வருகின்றன. இப்புதிய வானொலி அலைவரிசை திட்டத்தின் கீழ் 2 வானொலிச் சேவை அலைவரிசைகளுக்கு இடையே 300KHZ இடைவெளி காணப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 07 மாணவர்கள்



தரம் - 08 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் பாடசாலைச் சமூகமும்

*"அறிவுப்பசிக்கு ஆத்ம திருப்தியாம் – கல்விதனை
புசித்துப் பார்த்தால் ஈடாக யாதுமுண்டோ?*

ஆம் ஒவ்வொரு மனிதனுக்கும் அறிவுப்பசி என்பது உண்டு அந்தப்பசியை நீக்குவதற்கு கல்வி ஒன்றே மருந்தாகும். நல்ல உணவாகும் அந்தக்கல்விக்கு ஈடாக நாம் எதையும் இவ்வுலகில் பெற்றுக்கொள்ள முடியாது. ஒரு முழு மனிதனாக நாம் வாழ்வதற்கு கல்வியும், ஒழுக்கமும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

"கற்றவனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற ஔவையார் வாக்கிற்கு இணங்க கல்வியின் முக்கியத்துவத்தையும் "மேற்பிறந்தாராயினும் கல்லாதார் கீழ்பிறந் ததும் கற்றார் அனைத்திலர் பாடு" எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க கல்லாதவர் மேல் குடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்த குடியில் பிறந்து கல்வி கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவர் என கல்லாமையின் நிலையினைத் தெளிவாக உணர முடிகிறதல்லவா?

தாயின் கருவறையில் நாம் வசித்திருந்த காலம் முதல் கல்வி கற்கத் தொடங்கி விட்டோம் அங்கு மௌனித்து காது கொடுத்து கற்கத் தொடங்கும் குழந்தை வெளியுலகில் தாயானவள் தன்னைப்பிரசரித்தவுடன் முதல் சொல்லும் வார்த்தை "அம்மா" என்பதே அங்கேயே எம் கல்வி கற்றல் உதயமாகின்றது.

நாம் கற்கும் கல்வியை முறைசார்ந்த கல்வி முறைசாராக் கல்வியெனப் பிரித்து நோக்க முடியும் முறைசார்ந்த கல்வியானாது பாடசாலைகளில் ஓர் ஒழுங்கு முறைகளை வகுத்து அதன் ஒழுங்கில் கற்பிக்கப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் குரு சீடன் என்ற முறையில் குருகுலக்கல்வி முறையே போதிக்கப் பட்டு வந்தது. படிப்படியாக காலவோட்டத்தில் வளர்ச்சியெனும் பாதையில் பயணித்த நவீன உலகில் புதுப்புது மாற்றங்களைக் கொண்டு முறைசாராக் கல்வி முறையும் உருவாகத் தொடங்கியது.

ஒரு மாணவன் பாடசாலையில் ஆறுமணித்தியாலங்கள் செலவிடு கின்றான். ஆனால் மீதி நேரத்தை வீட்டில் பெற்றோருடனேயே செலவு செய்கின்றான். இவ்வாறான நிலையில் நல்லதொரு கல்விச் சமூகத்தை உருவாக்கும் அரியபணி ஆசிரியரிடமும், பெற்றோரிடமுமே தங்கியுள்ளது என்பதை யாவரும் மறுத்திட முடியாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாடசாலை" என்பது தனியாக அறிவினை மட்டும் போதிப்பதல்ல மாறாக கலை, ஒழுக்கம், பண்பாடு, விளையாட்டு என்பவற்றை இணைப்பாட விதானச் செயற்பாடுகள் ஊடாக பல்துறை சார்ந்த விடயங்கள் கற்பிக்கப்படுகின்றது. இச்செயற்பாட்டின் மூலம் மாணவனின் மனப்பாங்கு விருத்தி, விழுமியங்கள் போன்றனவும் வளர்க்கப்படுகின்றது.

பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர் ஒன்றிணைந்த ஓர் நல்ல குடும்பமாகும். இந்த உறவில் எப்போதும் தளர்வு நிலை உண்டாகிவிடக் கூடாது உண்டாகவும் மாட்டாது. காரணம் மாணவப்பருவம் என்பது மீண்டும் நினைத் தால் வந்துவிட மாட்டாது. அந்தப் பசுமை நிறை வாழ்வினைத் தொலைத்தால் நாம் எம்மையே இழந்தவர்களாகின்றோம். அத்தோடு ஆசிரியப்பணி என்பது ஓர் புனிதமான உன்னத பணியாகும். அந்தப்பணிக் காகவே பல மாந்தர்கள் ஏங்கிய விழிகளுடன் காத்திருந்த காலங்களுமுண்டு.

பாடசாலை வாழ்வினை முடித்தவர்கள் கூட அந்தப் பசுமை நிறை நாட்களை எண்ணிக் கண்ணீர் விடுகின்ற நிலையினை இன்றும் கண்ணூடாகக் காண முடிகின்றது. கவலையை விடுங்கள் கண்ணீரைத் துடையுங்கள் காரணம் கல்விக் கடலுக்கு கரையில்லை.... நாம் கல்வி கற்பதற்கு வயதெல்லை கிடையாது. நம் இறப்புவரை கல்வியினைத் தொடர்ந்து கற்கலாம். எம் அறிவுத்தேடல்கள் வியாபித்துக் கொண்டே செல்லலாம். தடைபோடுவதற்கு யாருக்கும் அருகதையில்லை.

கல்வியைப் பாடசாலையில் பயிலாது காலத்தைத் தொலைத்துவிட்டோமே என்றில்லாது முறைசாராக் கல்வி முறையினைத் தொடர்ந்து கற்க முற்படுவோம். கணினி, தையல், தச்சுத்தொழில், மின்னிணைப்பு, பன்னவேலை என நீண்டு கொண்டே செல்லும். இம் முறைசாராக் கல்வியானது தற்போது விரிவடைந்து சென்றாலும் ஓர் பக்கம் வியாபாரப் பொருளாகி விட்டது. காரணம் பணமுள்ளவன் விரைவில் அதனைப் பெற்றுக் கொள்கின்றான். இல்லாதவன் ஏங்குகின்றான். இருந்தும் சமுதாயத்தில் பல நிறுவனங்கள் இலவசமாகக் கூட இம் முறைசாரக் கல்வியினை வழங்கி வருகின்றது. அவற்றைக் கற்பதற்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. சந்தர்ப்பங்களைத் தவறவிடாது பயன்படுத்த முன் செல்ல வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்படாது*
*வெந்தணலிலும் வேகாது*
*கள்வரால் கவர்ந்து செல்ல முடியாது.*

எக்காலத்திலும் அழிவில்லாத இத்தகைய பெருமைகளைக் கொண்டதும் அள்ள அள்ளக்குறையாத அறிவைத்தரும் மகாசக்தி இக்கல்விக்கே உண்டென் பதை யாவரும் மறுத்திட முடியாது.

ஒரு கல்விக்கூடம் திறக்கப்படும் போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றது என அறிஞர் ஒருவர் கூறியுள்ளார். ஏனெனில் பல அறிவாளி களை உருவாக்கும் பெருமை பாடசாலைக்கே உண்டு. ஆசு நீக்கி அறிவைத் தரும் ஆசிரியப் பெருந்தகைளை நாம் எத்தனைபேர் நன்றியுணர்வுடன் நினைத்து வாழ்கின்றோம். பல கனவுகளை மாணவராக நெஞ்சில் சுமந்தாலும் அதை நனவாகச் செய்யும் எம் ஆசான்களை நாட்டில் நற்பிரஜைகளைச் செதுக்கி விடுகின்ற சிற்பிகளை காலமெல்லாம் போற்றிப் புகழ்வது எம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும். ஆகவே கல்வி என்பதை நாம் தனியாக கற்றுவிட முடியாது. பாடசாலைச் சமூகத்தில் அதிபர், ஆசிரியர், மாணவராக ஒன்றிணைந்து சிறந்த கல்விச் சமுதாயத்தை எம்நாட்டில் உருவாக்க வழி சமைப்போம்.

*கல்வியும் ஒழுக்கமும் இருகண்கள்*
*கற்றிடச் செல்வோம் கல்விச் சாலையிலே*

**தொகுப்பு:- ந. குயின்ஸி (ஆசிரியர்)**

எவன் ஒருவன் தன்னுடைய கடமையை உணர்ந்து
செயலாற்ற நினைக்கின்றானோ அவன் தான்
உண்மையான வாழ்வு வாழ்கிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் வருமா....?

சின்னஞ்சிறு வயதினிலே
சிறுவர்கள் நாம் ஒன்றாய்
நெஞ்சத்தில் நஞ்சின்றி
கல்வி பயின்ற காலமது

நட்புக்காய் எதையும் செய்தோம்
ஆசானுக்களித்ததோ கௌரவமும் நன்மதிப்பும்
உள்ளம் மகிழ்ந்து வந்த பள்ளிகாலங்கள் - தாம்
மீண்டும் வராத நாள்களவை

கற்றகல்வி கொண்ட நட்பு பெற்ற பெருமையென
அனைத்துமே நெஞ்சமதில் பசுமரத்தாணியாய்
மீண்டும் கிட்டிடுமா அழகான
இந்தப் பள்ளிப் பருவவாழ்வு.

**ஆக்கம்:- பழைய மாணவி**
**தவயோகினி கதிரேசன்**

## மானிடரே கேளீர்

காக்கையினம் நாம்
கா... கா.. என்று கூவியழைத்து
கூழானாலும் நாங்கள்
கூடி உண்டிடுவோம்
உயர்வு தாழ்வு பார்த்ததில்லை
உயர் கல்வி கற்றதில்லை
ஐந்தறிவு எங்களுக்கு
ஆறறிவு உங்களுக்கு

ஓரறிவு கூடத்தான்
ஒற்றுமையை காணவில்லை
ஏன் இந்த நிலை
எல்லோர் உதிரமும் சிவப்பாமே
இரண்டு கால் இரண்டு கை
பேசுவது தமிழ் வேதமோ நூறு
நாளைய சமுதாயம் நல்லதாக
பேதமதை மறந்திடுங்கள்.

**ஆக்கம்:- பிரசன்**
**பழைய மாணவன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபுலானந்த அடிகள்

விபுலானந்த அடிகள் தமிழுக்கும் சைவத்திற்கும் தொண்டாற்றியவர்களுள் ஒருவராவார். இவர் மீன்பாடும் தேன்னாடாம் மட்டக்களப்பிலே காரைதீவு என்னும் ஊரில் பிறந்தார். இவரின் தாய் கண்ணம்மையார் தந்தை சாமித்தம்பி இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் மயில்வாகனன் ஆகும். அடிகளார் தமிழ் ஆரியம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் புலமையும் இலத்தீன் மலையாளம், சிங்களம் ஆகிய மொழிகளில் அறிவும் பெற்றிருந்தார் அத்துடன் பயிற்சி பெற்ற ஆசிரியராகவும் விஞ்ஞான டிப்ளோமா பட்டதாரியாகவும் தமிழ் பண்டிதராகவும் விளங்கினார்.

விபுலானந்த அடிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தலைமையாசிரியராகவும் கடமையாற்றினார். மற்றும் தென்னிந்தியாவில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அடிகளார் எழுதிய நூல்களுள் யாழ்நூல், நாச்சியார் நான்மணிக்கோவை என்பன சிறந்தவையாகும். அடிகளார் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். அவை மதுரை தமிழ்ச்சங்க இதழான தமிழ்மொழி, இராமகிருஸ்ண சங்க இதழான ஸ்ரீராம கிருஸ்ண விஜயம், கலைமகள், செந்தமிழ்ச்செல்வி முதலிய சஞ்சிகைகளில் வெளிவந்தன கருமயோகம், ஞானயோகம், விவேகானந்தர் சம்பாசனைகள், விவேகானந்தர் ஞானதீபம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை என்பன அடிகளார் மொழி பெயர்த்த நூல்களாகும்.

இவற்றைவிட வங்கக்கவிஞர் ரவீந்திரநாத்தாகூரின் "கார்டனர்" என்னும் நூலிலுள்ள பாடல்களைப் பூஞ்சோலைக் காவலன் என்ற பெயரில் அழகு தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அடிகளார் ஆற்றிய பணிகளுள் இசைத்தமிழ் நூலாகிய "யாழ்நூலை" ஆக்கி அளித்தமையே உயர்ந்து சிறந்ததாகக் திகழ்கின்றது. இது தமிழ் இசைக்கலை நுட்பங்களை ஆராய்ந்து விளக்கும் சிறந்த நூலாகும். யாழ் நூலானது பழந்தமிழ் சைவ மரபிற்கும் புத்துயிர் அளிக்கும் அரிய நூலாக விளங்குகின்றது. நாடகத்தமிழ் வளர்ச்சிக்கு அடிகளார் தமது பங்களிப்பைச் செய்துள்ளார். ஆங்கிலம், ஆரியம் போன்ற மொழிகளில் அடிகளார் கொண்டிருந்த புலமை மதங்க சூளாமணி என்னும் நாடகத் தமிழ் நூலின் ஆக்கத்திற்குப் பெரிதும் உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் சமயத்தினை வளர்க்கும் முகமாகப் பல மடங்களை நிறுவிச் சமயத்தை வளர்த்தார். 1922ஆம் ஆண்டு துறவு பூண்டு 1924ம் ஆண்டு சித்திரை பௌர்ணமியில் குரு தீட்சை பெற்றுத் துறவியானார். அதன் பின்பே சுவாமி விபுலானந்தர் தமது வாழ்நாள் முழுவதையும் தமிழுக்கும் சமயத்துக்கும் அயராது தொண்டாற்றி இந்து மதத்தை மேலோங்கச் செய்தார். இவர் 1949ம் ஆண்டு ஆடிமாதம் 19ம்நாள் இறைவனடி சேர்ந்தார்.

ஆக்கம்:- றா. மரியபியோறினா
தரம்:- 08

# கவிதை துளிகள்

## "கண்ணீர்"

"கவலையெனும் மை கொண்டு
கண் எழுதும் மை கூட கவிதை"

"கண்ணீர் விட்டென்னை காயப்படுத்தாதே உனை எண்ணி
உள்ளம் ரணமாக உருவெடுக்கிறது"

"உன்நினைவுகள் பூக்கும் போது
என் கண்களில் கண்ணீரும் சுமைதான்...."

"எனக்கு நீ தந்து விட்டுச் சென்ற
பரிசு மழை கண்ணீர்"

""இதயத்தின் இயலாமை
இரு விழிகளின் ஓரம் துளிகளாய்"

உன் பிரிவால் என் கருவிழி
கார்மேகமாயிற்று"

ஆக்கம்:- யே. றாகினி
பழைய மாணவி
B. A. பட்டதாரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை தவங்கள்

தன்னை உருக்கி
என்னை உருவாக்கி
உயிர் தந்தவளே
என் உயிர் அம்மா.

பத்து நீங்கள் கருவினில் சுமந்து
மண் மீது நடமாட வைத்த
அன்புத் தெய்வம் அன்னையவள்
அகர முதலெழுத்துப் போன்று
அம்மா என்று முதல் வார்த்தையை
அமுத வாயால் பொழிய
வைத்தவளும் அன்னையே!

ஏழைக்குடிசையில் நாம் பிறந்தாலும்
கூழையே பருகினாலும்
அன்னையவள் ஊட்டி விட்டால்
அருமையிலும் அருமை
நமக்கு அதை விட வேறென்ன பெருமை.

நான் உறங்கவென நீ விழித்திருந்தாய்
நான் பசியாற உன் இரத்தத்தை பாலாக்கினாய்
அன்னையே உனை நான் எப்படி பாராட்டுவேன்
என் சிறு பராயத்தில் உன் துணை இழுத்தாய்
ஆன போதிலும் நான் வாழ்வில் உயர்ந்திட
செல்லக் கால் சிதறி நடக்க வண்ணக்கால்
வருத்தி நடந்து எனக்காய் அயராது உழைத்தாய்
அன்னையே உனை போற்ற வார்த்தைகள் இல்லை.

என் நன்மைக்கென எப்போதும் புத்தி
உரைத்தாய் உன் சிந்தனையில் எப்போதும்
என்னை மட்டும் ஏற்பாய் அன்னையே
உன்னை எப்படி வாழ்த்துவேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரினிலே எனக்கு எதுவும் வேண்டாம்
தாயே உங்கள் அன்பு ஒன்றே போதும்
தன்னலம் கருதாது என் நலத்துக்காக
அயராது உழைத்த உங்களை எப்படி
போற்றுவதம்மா!

என்றும் உன் பிள்ளை உன் கடன்காரியே
என்றும் மறவேன் உன்னையே
ஏழு ஜென்மங்கள் இருந்தாலும்
என்றும் உன்பிள்ளையாய் வரம் எடுப்பேன்
இத்தனை தவங்கள் எனக்காக
செய்த உன்னை நான்
என் உயிரின் மூச்சாக
என் இறுதி மூச்சு வரை சுவாசிப்பேன்.

ஆசிரியர்
திருமதி அ. மஸாஹிறா பானு

**உலக சுற்றுலா தினம்:-**

- உலக சுற்றுலா தினம் வருடாந்தம் செப்ரெம்பர் 27இல் கொண்டாடப் படுகின்றது. சுற்றுலா எனப்படுவது "வழமையான சுற்றுச் சுழலை விட்டு வேற்று இடத்துக்கு ஓய்வு அலுவல் மற்றும் ஏனைய நோக்குடன் மேற் கொள்ளும் பயணம்.
- ஒரு வருட காலத்துள் அமையவேண்டும்.
- மேலும் இப் பயணத்தின் மூலம் பயணி பயணிக்கப்பட்ட இடத்தில் இருந்து ஊதியம் பெறக்கூடாது உலகின் மிகப்பெரிய துறையாக விளங்குவது சுற்றுலா துறையாகும்.
- உலக சுற்றுலா தினம் 2007இல் இலங்கையில் கொண்டாடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்த குடையின் சுயசரிதை

ஒரு நாள் நான் பாடசாலை விட்டு வீடு சென்று கொண்டிருந்த போது வேகமான காற்றுடனும் இடி மின்னலுடனும் மழை பெய்யத் தொடங்கியது. நான் ஓடிப்போய் ஒரு மரத்தின் கீழ் நின்று கொண்டேன். நான் நின்ற மரத்தின் பக்கத்தில் வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது அந்த வெள்ளத்தினுள் ஒரு உடைந்த குடை மிதந்து வந்து கொண்டிருந்தது. நான் அதை எடுத்துப் பார்த்த போது குடை பேசத் தொடங்கியது.

தம்பி ஓடிக்கொண்டிருந்த இந்த வெள்ளத்தினுள் இருந்து என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி என்று கூறியது குடை. நான் பயந்து கொண்டு நின்றேன். குடை இப்படிப் பேசுமா என்று. தம்பி நான் எல்லோராலும் கைவிடப்பட்டு உடைந்து சின்னாபின்னமாகி தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்ட ஒரு உடைந்த குடை தான் நான் என்றது. நான் முதலில் பயந்து கொண்டு நின்றேன் பின்னர் அதன் பக்கத்தில் வந்து அதன் கதையைக் கேட்க ஆர்வமாக இருந்தேன்.

அதன் பின் தன் கதையைச் சொல்லத் தொடங்கியது. என்னை துபார ரெஸ்ரையில் கொம்பனியில் வேலை செய்யும் ஆட்கள் பல கம்பீரமான கம்பிகளை எடுத்து அதனை ஒன்றாக பொருத்தி அத்துடன் பல வர்ண நிறத் துணிகளையும் பொருத்தி அதைப் பிடிப்பதற்கான ஒரு அழகான கைப்பிடியும் வைத்து பூட்டி ஓர் பெறுமதி மிக்க அழகான வண்ணக் குடையாக உற்பத்தி செய்தனர். யாழ்ப்பாண மது ரெக்ஸ் ரைலில் நான் எல்லாக் குடைகளுடனும் தொங்கவிடப்பட்டிருந்தேன். அந்தக் குடைகளில் நான் மிகவும் அழகாகவும் பல வர்ண நிறங்களிலும் காட்சியளித்துக் கொண்டிருந்தேன். அங்கு வந்தவர்கள் எல்லோரும் என்னைப் பார்த்து ஆசைப்பட்டார்கள் ஆனால் அதிக விலை என்பதனால் வாங்காமல் சென்று விட்டார்கள். ஒரு நாள் அங்கு அப்பாவும், மகனும் கடைக்கு வந்தார்கள். இருவரும் பல பொருட்கள் வாங்கிக் கொண்டு வெளியே வந்தார்கள். அங்கு தொங்கவிடப்பட்ட எங்களை அந்த சிறுவன் பார்த்தான். அதில் நான் மிகவும் அழகாக உள்ளதால் என்னை வாங்கித் தருமாறு அவன் தனது அப்பாவிடம் அழுதான். அவரும் மறுக்காது என்னை வாங்கிக் கொண்டு வீடு சென்றார்கள். அந்தக் காலம் மார்கழி மாதம் மழை பெய்ய ஆரம்பித்தது. அந்தச் சிறுவன் என்னை முதன் முதலில் விரித்து தான் நனையாமல் பிடித்த போது மழைத்துளிகள் எல்லாம் என்மேல் விழுந்ததனால் எனது உடலெல்லாம் குளிர்ந்தது. இப்படியே அவன் மழை பெய்யும் நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வெளியே செல்லும் போது மழையில் நனைத்து எனக்குப் பழகி விட்டது. ஒரு நாள் அவன் கடைக்குச் சென்று கொண்டிருந்த போது வேகமான காற்றுடனும் இடி மின்னலுடனும் மழை பெய்யத் தொடங்கியது. அதனால் அந்தச் சிறுவன் என்னை எடுத்து விரித்துப் பிடித்துக் கொண்டு நடந்தான். வேகமாக காற்று வீசியதால் அந்த சிறுவனால் என்னை இறுக்கமாகப் பிடிக்க முடியவில்லை. இதனால் காற்றினால் நான் சின்னா பின்னமாக உடைக்கப்பட்டு தரையில் விழுத் தப்பட்டேன். மழைபெய்ததினால் வெள்ளம் பாய்ந்தது. அந்த வெள்ளத்தினுள் நான் அடித்து வரப்பட்டேன். நீ என்னை இந்த வெள்ளத்தினுள் தான் காப்பாற்றினாய் என்று கூறிய குடை இனிமேலும் என்னைப் போன்ற நண்பர்களை உங்கள் அப்பா அம்மா அல்லது சகோதரர்கள் வாங்கி வந்தால் என்னை பயன்படுத்தியது போல் பயன்படுத்தாது நன்றாகப் பயன்படுத்தினால் தான் எங்களுடைய சிறிய உள்ளங்களும் சந்தோஷமாக இருக்கும் என்று கூறி அழுது புலம்பி மன வருத்தத்துடன் தனது கதையை நிறைவு செய்தது நானும் குடையின் சிந்தனையுடன் கண்ணீர் சிந்தியபடி வீட்டை நோக்கி என் கால்கள் பயணித்தன.

**வே. பிரசாந்தினி**
**தரம்:- -09**

### உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் – IAAF

- 14வது உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் 2013 ஒகஸ்டில் நடைபெற்றது.
- இலங்கையில் 8 வீத வீராங்கனை பங்கேற்றனர்.
- 1வது தடகளப் போட்டிகள் 1983ல் பின்லாந்து நாட்டில் நடைபெற்றது.
- இப்போட்டியில் 206 நாடுகள் 26 போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

### கப்பல் கட்டுதல் திருத்துதல் நிலையம்

- கப்பல் கட்டுதல் மற்றும் திருத்துதல் தொடர்பான இலங்கையின் இரண்டாவது நிலையம் காலி துறைமுகத்தில் நிர்மாணிக்கப்பட்ட உள்ளது.
- இரு நிர்மான பணிகள் சவூதி அரேபிய முதலீட்டுடன் இடம்பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரம் - 09 மாணவர்கள்

## புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றோர்



2010



2011



2012



2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01) உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் எங்கு உள்ளது?
ஜெனிவா

02) உலகில் அதிகமாக பரப்பளவு கொண்ட நகரம் எது?
லண்டன்

03) உலகில் அதிகமாக பயிரிடப்படும் பழம் எது?
அப்பிள்

04) உலகில் தனிமைத்தீவு என்று அழைக்கப்படும் தீவு எது?
டிரிஸ்டன்டாருன்ஹா

05) உலகில் மிக அதிகமாகப் பத்திரிகைகள் வெளியிடும் நாடு எது?
இந்தியா

06) உலகின் மிக ஆழமான குகைகள் எந்த நாட்டில் உள்ளது?
பிரான்ஸ்

07) உலகிலே மிகப் பெரிய விரிகுடா எது?
ஹட்லன் விரிகுடா

08) உலக கிரிக்கெட் கிண்ணத்தை மூன்று முறை வென்ற நாடு எது?
அவுஸ்திரேலியா

09) ஐரோப்பியாவின் மிகப்பெரிய நதி எது?
வல்காநதி

10) ஸ்பெயின் நாட்டின் தேசிய மிருகம் எது?
கழுதை

11) நேபாளத்தின் தேசிய மிருகம் எது?
பசு

12) ஒட்டகப்பறவை என்று அழைக்கப்படும் பறவை எது?
நெருப்புக்கோழி

தொகுப்பு:– ப. பாலசுதன்
தரம்:– 09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றி வைத்த தெய்வத்தாய் (சிறுகதை)

இன்றைய நாள் பெறுமதியானது பல விதமான கஸ்டங்களையும், தடைகளையும் தாண்டி வந்து வெற்றிக்கனி பெறும் நாளிது. ஆயிரம் பேருக்கு ஆயிரம் காரண, காரியங்கள் வாழ்க்கையில் வந்து போகும். ஒவ்வொரு காரணத் துக்குள்ளும் ஒவ்வொரு உந்துவிசை இருக்கும். விசையால் உந்தப்பட்டவன் வெல்கிறான். தள்ளப்பட்டவன் சாய்கிறான். கடவுளின் மீது நம்பிக்கை கொண்டவன் உண்மையில் உயர்த்தப்படுகிறான், வெல்கிறான் பிரியாவும் கடவுளின் ஆசிர்வாதம் நிரம்பப் பெற்றவள். அவள் பெயருக்கேற்ப அனைவரிடமும் பிரியமுள்ளவளாக நடந்து கொள்வாள் அவளுக்கு சிறுவயதில் தாய், தந்தையை இழக்கும் துர்பாக்கிய நிலை, கருணையுள்ளங்களின் உதவியால் ஒரு தனியார் அநாதை விடுதி அவளுக்கு அடைக்கலம் கொடுத்தது. அந்த விடுதியை அநாதை விடுதியென அவள் நினைத்ததில்லை. பலநூறு சகோதரர்களையும், உறவுகளையும் தந்த புனிதமான இடமாக அவள் கருதினாள் அந்த அருமையான இடத்தின் நிர்வாகியம்மாவும் பெறுமதியானவர்.

அதிகாலையிலே சீக்கிரமாக எழுந்து காலைக்கடமைகளை முடித்துச் சேலை ஒன்றைச் சீராக உடுத்து முடித்துப் பொட்டிட்டு, நிலைக் கண்ணாடியில் தன்னுருவத்தைக் கண்டு சிலிர்த்துக் கொண்டாள். தோழிகளின் கிண்டலும், பாராட்டுக்களும் மனமகிழ்வைத்தர பல்கலைக்கழக வளாகத்தில் காலடியை எடுத்து வைக்கிறாள். மண்டபம் நிரம்பி வழிகிறது. பத்திரிகையாளர்கள், பேராசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், அறிஞர்கள் அவையில் அவளுக்கும் ஓர் இடம். கடவுளே இந்த அற்புதமான நிகழ்வைக் காண என்னுடைய வளர்ப்புத் தாய் கூட அருகிலில்லையே என பிரியா ஒரு தடவை ஏங்கினாள். அவளுடைய பெயர் வாசிக்கப்படுகிறது. செல்வி கந்தசாமி பிரியா (டிப்ளோமா பட்டதாரி) மெல்ல எழுந்து சென்று அந்த மரியாதையை ஏற்றுக் கொள்கிறாள். தன்னுடைய முழுவளர்ச்சிக்கும் காரணமான தன் விடுதி நிர்வாகியம்மாவை நெஞ்சம் நிறைய நினைத்த பொழுதும் தன் முன்னேற்ற வளர்ச்சிக்கு உந்துதல் கொடுத்த ஆசான்களையும் நினைத்த பொழுதும் கண்ணீர் பூக்கள் மாலையாகி கைக் குட்டைக்குள் அடைக்கலமாயின. நினைவுகள் சுழன்றன. அவளுக்கு பன்னிரண்டு வயதிருக்கும். அந்த தனியார் பாடசாலையில் இருந்து பல பாடசாலைக் கிடையிலான தேசிய போட்டி ஒன்றுக்கு பிரியாவினுடைய பெயரும் தெரிவாகி யிருந்தது. பல்வேறுபட்ட மாணவர்களும் பல்வேறு திறனுடைய வர்களாக மிளிர்ந்த அந்தப் பாடசாலையில் அவள் ஒரு பண்பான, அடக்கமான பிள்ளை யாகத் திகழ்ந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடத்துள் மறைக்கப்பட்ட விளக்குப் போலிருந்த பிரியாவை தட்டி மேலிட ஒளிர வைத்த திவ்யா ஆசிரியர் மீது அவளுக்கு அளவிட முடியாத அன்பு. "உங்களால் முடியும் நீர் வெல்லுவீர் என ஆசிரியர் கூறி வழிபடுத்தியது அவளுக்கு ஒருவித உற்சாகத்தை ஏற்படுத்தியது. அவள் உற்சாகமாகவும், ஆழ்ந்துணர்ந்தும் கற்றாள். போட்டியில் தோற்றினாள். அதன் பெறுபேறுகள் நாளிதழ் ஒன்றில் வந்த போது அவளால் நம்பவே முடியவில்லை. அவள் தான் தேசிய மட்டத்தில் தன்னுடைய வயதுப்பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி என்ற போது அவள் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அந்த நிகழ்வு ஒருவித சிலிர்ப் பையும், பலரது பாராட்டுக்களையும் தோற்றுவித்தது.

முதன்மையான அரங்கமொன்றில் மதிப்பிற்குரிய தலைவர் ஒருவரால் பிரியா "தங்கப்பதக்கம்" சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டாள். அவள் தனக்கு உற்சாக மூட்டிய திவ்யா ஆசிரியரை நன்றியோடு நினைத்தாள். சாதனைக்குப் பின்னர் பல சோதனைகள் அவளைச் சூழத் தொடங்கின. எதிர்பார்த்த மாணவர்கள் எந்தவொரு பரிசும் பெறாமல் எதிர்பாராத ஒருத்தி தங்கப்பதக்கம் பெற்றதைச் சில புத்தி ஜீவிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதன் வெளிப்பாடாக பலவிதமான இடைஞ்சல்களை ஏற்படுத்தினார்கள். ஒரு நாள் அவளது பாதணிகளைக் காணவில்லை. மழைகாலம் என்பதால் சப்பாத்து அணியாமல் செருப்புடன் நடமாடச் சொல்லியிருக்கிறார்கள். துரதிஸ்டம் அதனைக் காணவில்லை யாரும் மாறியும் போடவில்லை. என்ன மாயமோ? பிரியா ஒரு நாள் முழுதும் தேடினாள் கிடைக்கவில்லை. பாதணி தொலைந்ததில் ஏதோ மர்மம் இருக்கிறது பாதணிகள் இல்லாமல் பாடசாலை போக முடியாதே! இதன் காரணமாக அடுத்தநாள் பிரியா பாடாசலை போகாமல் கவலையுடன் இருந்தாள். இதனையறிந்த விடுதி நிர்வாகியம்மா உடனே புதுப்பாதணிகள் வாங்கி வந்து பிரியாவிடம் கொடுத்து உடனே பாடசாலை புறப்படும்மா எனக் கூறினார். பிரியாவும் கண்ணீர் மல்க நன்றியுடன் அதனை ஏற்றாள். உடனே பாடசாலை புறப்பட்டுச் சென்றாள். அவளுக்குத் தேவை "கல்வி" அதில் மூச்சாக இருந்தாள். அவள் படிப்பிலே கண்ணும் கருத்துமாக கற்றாள். கல்வியிலே சிறந்து விளங்கினாள் அவளது புகழ் மேலோங்கியது.

பாடசாலை விடுமுறை நாள் எல்லா மாணவர்களும் தங்களுடைய தேர்ச்சியறிக்கைகளை விடுதி மேற்பார்வையாளரிடம் கொடுத்தனர். பிரியாவும் தனது தேர்ச்சியறிக்கையை அவரிடம் கொடுத்தாள். பின்னர் பாடசாலை ஆரம்பமானது. சகல மாணவர்களது தேர்ச்சியறிக்கைகளும் கொடுக்கப்பட்டன. பிரியாவிற்கு மட்டும் கொடுக்கப்படவில்லை. அவள் தனது தேர்ச்சியற்றிக்கையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிடம் தரவேயில்லையென மேற்பார்வையாளர் கூறியதை சக மாணவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. கேள்வி கேட்டால் தண்டனைக்குள்ளாகுவீர்கள் என ஏனைய மாணவர்களுக்கு அச்சுறுத்தல் ஒன்றை மேற்பார்வையாளர் விடுத்த போது சக மாணவர்கள் பேசாமல் நின்றனர். "ஒரு தடவை உங்கட அலுமாரியை நன்றாகத் தடவிப் பாருங்கள்" என பிரியா கெஞ்சினாள். இறுதியில் ஆசிரியரிடம் அடி, அதிபரிடம் அடி, அவளது கைகள் சிவந்து தடித்தன. சக தோழியரும் கண்ணீர் விட்டனர். அதனால் பிரியா தன்னை ஆளாக்கிய விடுதியின் புகழைக் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

"அதிபர் உங்களை வரட்டாம்" என்ற அறிவிப்பைக் கேட்டவுடன் மிக அச்சத்துடன் அலுவலகம் நுழைந்தாள். உன்னுடைய தேர்ச்சியறிக்கை எங்கே எனக் கேட்டு அதிபர் அடித்தார். தற்காலிகமாக ஆசிரியர்களால் பூரணப்படுத்தப் பட்ட தேர்ச்சியறிக்கையை அதிபரே கிழித்தார். பின்னர் பிரியா கிழித்ததாக பழிசுமத்தினார். அடி, வேதனை தாங்கமுடியாமல் பிரியா கதறினாள். தேர்ச்சியறிக்கையைக் கிழித்தது தவறு அதனால் பிரியா பகிரங்கமாக மேடையேறி பொது மன்னிப்பு கேட்க வேண்டும் கேட்காவிட்டால் இவ் விடுதியில் தங்க முடியாது. படிக்க முடியாது வேறிடம் மாற்றப்படும் என விடுதி நிர்வாகியம்மா கண்டிப்பாக உத்தரவிட்டார். இவ் உத்தரவு அவளுக்கு அச்சத்தை உண்டாக் கியது. அவள் பொறுமையுடன் கடவுளிடம் தன் துன்பத்தை கூறி அழுதாள்.

"பொதுமன்னிப்பு எதுவும் வேண்டாம்" பிரியாவை வேறிடம் மாற்றுங்கள் என நிர்வாகியம்மாவிடம் பிடிவாதமாக அதிபரும், மேற்பார்வையாளரும் கூறினார்கள். ஏனோ அவர்களின் பிடிவாதம் விடுதி நிர்வாகியம்மாவிற்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. எல்லாப் பிள்ளைகளையும் பாடசாலை அனுப்பி விட்டு பிரியாவை மட்டும் தன் அறைக்குள் அழைத்தார் நிர்வாகியம்மா. பிரியாவை விசாரித்து உண்மை நிலையை அறிந்தார் அந்த அன்னை. விடுதி மேற்பார்வையாளரின் அலுமாரியை சக ஊழியரின் உதவியால் சோதனையிட்ட போது பிரியாவின் தேர்ச்சியறிக்கை சில புத்தகங்களுக்கிடையில் அங்கு மறைக்கப்பட்டிருந்தது. அதனை பக்குவமாக எடுத்து வைத்தார் அந்த அன்னை மற்றும் அலுமாரி மேற்தட்டிலே அவளது பாதணிகள் கிடைக்கப்பெற்றன. நிர்வாகியம்மாவின் கண்கள் கலங்கின.

பிரியா பாடசாலை புறப்பட்டாள் அனைவரும் ஒன்று கூடல் திடலில் நிற்கிறார்கள். பகிரங்கமான மன்னிப்பு எதுவித குற்றமும் செய்யாமல் மன்னிப்பு கேட்க வேண்டுமா? சக மாணவர்கள் "கேள், மன்னிப்புக்கேள்" எனக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெஞ்சினார்கள் அவர்கள் அவளை இழக்க விரும்பவில்லை. பிரியா சிலையாக நின்றாள் பொறுமையுடன் விடுதி மேற்பார்வையாளரும், அதிபரும் வந்து நின்று கூத்துப் பார்க்கிறார்கள். உறுக்குகிறார்கள், மிரட்டுகிறார்கள், அவள் கண்களில் இருந்து கண்ணீராறு பாய்கிறது. திவ்யா ஆசிரியர் அருகில் வந்து பிரியா நீர் படிக்கக்கூடிய பிள்ளை நீர் ஒரு குற்றமும் செய்யவில்லை ஆனாலும் உம்முடைய எதிர்காலத்திற்காக மன்னிப்பு கேளம்மா! என ஆசிரியரின் நா தழுதழுத்தது. பிரியா மேடையில் ஏறினாள். சுற்றும் முற்றும் பார்த்தாள் தன் நண்பிகள், அக்காமார், அன்பான ஆசிரியர்கள் யாரையுமே அவள் இழக்கத் தயாரில்லை ஆனாலும் செய்யாத குற்றத்திற்காக ஏன் மன்னிப்பு? ஒருவித துணிவு எப்படி வந்ததோ தெரியவில்லை "நான் தேர்ச்சியறிக்கையை கிழிக்கவில்லை. எனது தேர்ச்சியறிக்கை காணாமற் போகவும் இல்லை. ஆனாலும் கிழித்ததாக நினைத்து மன்னிப்பு கேட்கிறேன்" எனக்கூறிமேடையை விட்டு இறங்கினாள். இனி என்ன நடக்கப்போகிறது என எல்லோரும் திகைத்து நின்ற வேளை ஒரு கைதட்டும் ஓசை இடைவிடாது ஒலித்தது. அதிபர் மேற்பார்வையாளர் ஏன்! அனைவருமே திகைத்தனர்.

என்னுடைய நிர்வாகத்தில் ஏற்பட்ட குளறுபடிக்கு வருந்துகிறேன். இன்றிலிருந்து பிரியா தான் எமது பாடசாலையின் தலைவி என முன்மொழிந்தார். அந்த விடுதி நிர்வாகியம்மா. பிள்ளையைப் பாதிப்படைய வைத்தவர்களை நான் சும்மா விடப் போவதில்லை. தனது கருத்தை தெளிவாகக் கூறிய மாணவியை நான் பாராட்டுகிறேன் என பிரியாவைப் பார்த்து அணைத்துத் தழுவினார். அந்த அன்னை. கரகோஷங்கள் வானைப் பிளந்தன. பிரியாவின் இன்றைய கால கட்டத்தில் அவளது சகல முன்னேற்றங்களுக்கும் காரணமான அந்த அன்னை புற்றுநோயின் காரணமாக இறந்து போனாலும் அவளது சகல முன்னேற்றத் திற்கும் காரணமான ஏற்றி வைத்த அந்த தெய்வத் தாய்க்கு தன் கல்வியைக் காணிக்கையாக்கி அன்னையின் பணியை நெஞ்சில் சுமந்து பயணிக்கிறாள் பிரியா.

**பழைய மாணவி**

**சுதர்சினி தயானந்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தைப் பொன்னாகப் பேணுவோம்

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் எண்ணற்ற வேலைகள் குவிந்து கிடக்கின்றன. எனினும் அவற்றையெல்லாம் செய்து முடிப்பதற்கு அவனுக்குப் போதியளவு நேரம் கிடைப்பதில்லை. காரணம் எமது வேலைகள் பெருகுவது போல நேரம் அதிகரிப்பதில்லை. எனவே வரையறுக்கப்பட்ட கால எல்லைக்குள் எல்லா வேலைகளையும் செய்து முடிப்பது இயலாத காரியம். எனவே நாம் அவசியமாகச் செய்ய வேண்டிய வேலைகளை முதலில் வரையறுத்துக் கொள்ளல் வேண்டும்.

அப்போது தான் நாம் எமது வேலைகளை திருப்திகரமாக நிறைவேற்ற முடியும். அத்தோடு நாம் எந்த ஒரு வேலையையும் ஒத்தி வைக்கக் கூடாது. உடனுக்குடன் நிறைவேற்றிவிடுவதன் மூலம் வேலைப்பழுவைக் குறைக்க முடிகிறது. நேரத்தையும் சிக்கனமாகக் கையாள முடிகிறது. நம்மில் பலர் எந்த ஒரு வேலையையும் நாளை நாளையென்று ஒத்தி வைப்பதையும் பார்த்திருக் கிறோமல்லவா இவர்கள் கடைசியில் எந்த வேலையையும் முடிக்க முடியாமல் திணறுவதை எம்மால் காணமுடிகிறது. பின்னர் அவை பற்றிய ஒரு சுய மதிப்பீட்டைச் செய்து கொள்வதன் மூலம் தனது நேரத்தை பயனுள்ள வகையில் போக்கியுள்ளேன் என்பதை அறிந்து கொள்ள வழி வகை ஏற்படும். எனவே மாணவர்களாகிய நாம் எமது நேரத்தை மேற்கண்ட வகையிலே முறையாகப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேறுவோம்.

**ஆக்கம்:- சு. மகிழினி**
**தரம்:- 04**

அறிவாள் தேர்ந்தெடுப்பது அடக்கத்தைத்தான்
ஒருவன் எப்படிப்பட்டவன் என்பதை அவன் நண்பன் மூலம் மட்டுமல்ல அவன் பகைவன் மூலமும் அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைநிலை மாணவர் மன்றம்



ஆங்கில மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றம் (Climate Change)

**அறிமுகம்:-**

அண்மைக்காலத்தில் காலநிலையாளர்களால் மட்டுமன்றி, அனைத்து தரப்பினராலும் பேசப்படும் ஒரு விடயம் காலநிலை மாற்றமாகும். காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பல்வேறு பாதிப்புக்கள் பூமியின் மனித இருப்பை கேள்விக்குறியாக்கியமையே இதற்கான பிரதான காரணமாகும். அண்மைக் காலத்தில் உலகம் முழுவதும் ஏற்பட்ட தானிய நெருக்கடி, பூகோள காலநிலை மாற்றத்தின் ஒருவிளைவு எனப்பலரும் குறிப்பிடுகின்றனர். இதனால் எதிர்காலத்தில் காலநிலை மாற்றத்தின் விளைவுகள் மோசமாக இருக்கும் என்பதனால் காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வும், அக்கறையும் உலக சமூகங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது எனினும் இவை இன்னமும் பல சமூகங்களுக்கு எட்டாத ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.

காலநிலை மாற்றம் என்பது உடலின் மிக முக்கியமான சுற்றுச்சூழல் சவால்களில் ஒன்றாகியுள்ளது. வானிலை அம்சங்களான மழைவீழ்ச்சி, வெப்பநிலை, அமுக்கம், ஈரப்பதன், காற்று போன்ற வளிமண்டல மூலங்களில் ஏற்படும் மாற்றம் வானிலை மாற்றம் (Weother Change) என்று அழைக்கப்படும். இவை ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறுகிய சில காலப்பகுதியில் ஏற்படும்.

ஆனால் காலநிலை மாற்றம் என்பது இக்காரணிகளின் நீண்ட கால மாற்றத்தினைக் குறிக்கும் மேற்குறித்த வானிலை அம்சங்களில் ஏதாவது ஒன்றின் அதிகரிப்போ அல்லது குறைவடைதலோ இன்னொன்றினது அதிகரிப்புக்கோ அல்லது வீழ்ச்சிக்கோ காரணமாக அமையலாம். ஏனெனில் இவை ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன.

வளிமண்டத்திலுள்ள சில வாயுக்கள், வெப்பநிலை, மழைவீழ்ச்சி என்பன அண்மைக்காலத்திலேயே மாற்றமடைந்து வருகின்றன. இவ்வாறான வானிலை அம்சங்களின் ஒட்டுமொத்தமான மாற்றம் காலநிலை மாற்றம் என அழைக் கப்படுகின்றது.

**காலநிலை மாற்றக் காரணிகள்:-**

காலநிலை மாற்றத்தினை பல்வேறு காரணிகள் தூண்டியுள்ளன. குறிப்பாக கைத்தொழில் புரட்சியின் பின்னர் மனித சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு மாற்றங்கள் காலநிலை மாற்றத்தினைத் தூண்டியுள்ளன. அந்த வகையில் பின்வரும் காரணிகள் காலநிலை மாற்றத்திற்கு பிரதான பங்கினை வகிக்கின்றன.

**கைத்தொழில் நடவடிக்கைகள்:-**

1750களின் பின்னர் ஏற்பட்ட பாரிய நடுத்தரக் கைத்தொழில்களின் வளர்ச்சி மனித சமூகத்திற்கு பல்வேறு நன்மைகளைத் தந்தாலும், சில தீமைகளையும் பெற்றுத்தர தவறவில்லை. இத்தீமைகளில் காலநிலை மாற்றம் முக்கியமான தாகக் காணப்படுகின்றது.

கைத்தொழில் நடவடிக்கைகளின் விளைவாக வளிமண்டலத்தில் சேர்க்கப்படும் பச்சை வீட்டு வாயுக்கள் காலநிலை மாற்றத்திற்கு குறிப்பாக வெப்பநிலை அதிகரிப்பிற்கு பிரதான காரணிகளாகக் காணப்படுகின்றன. இந்த வகையில் காபனீரொட்சைட்டு, நைதரசன், நீராவி, நைட்ரஜன், ஒட்சைட், குளோரோ புளோரோக் காபன் (CFE) போன்ற சில வாயுக்கள் பச்சைவீட்டு வாயுக்களாக காணப்படுகின்றன.

தொழிற்புரட்சிக்கு பின்னரே பசுமையில்ல வாயுக்கள் அதிகரித்து 1750 ஆம் ஆண்டு முதல் தொழிற்புரட்சியின் தாக்கம் அதிகரித்ததைக் கருத்தில் கொண்டு பார்த்தால் காபனீரொட்சைட் ஆனது 31% மாகவும், மெதேன் 149% மாகவும் அதிகரித்துள்ளதாகக் கருதப்படுகின்றது. இந்நிகழ்வு கடந்த 650000 ஆண்டுகளில் இடம் பெறாத ஒன்று பனிப்பாறைகளை துளையிட்டு ஆய்வு செய்ததன் மூலம் இவை கண்டு பிடிக்கப்பட்டன.

இத்தகைய வாயுக்களின் அதிகரிப்பானது வளிமண்டலத்தில் அதிகரிப்ப தனால்அவை உறிஞ்சி வைத்திருக்கும் வளிமண்டல வெப்பநிலையும் அதிகரிக் கின்றது இதன் காரணமாக பூமியில் வெப்பநிலை அதிகரிப்பு ஏற்பட்டு ஏனைய வானிலை மூலங்களான அமுக்கம், ஈரப்பதன் என்பவற்றிலும் அதிகமான பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. இதனால் அண்மைக்கால காலநிலை மாற்றத்திற்கான பிரதான காரணியாக பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப் பினைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Industrial Processes<br>(கைத்தொழிலி நடவடிக்கைகள்) | 16.8% |
| Transportation Fuels<br>(போக்குவரத்து நடவடிக்கைகள்) | 14.0 |
| Agricultural Products<br>(விவசாய உற்பத்தி) | 12.5% |
| Fossil Fuel retrieval Processing and distribution<br>(உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் தரம் பிரித்தல் மற்றும் விநியோகித்தல்) | 11.3% |
| Residential Commercial and other Socrces<br>(வதிவிட வர்த்தக மற்றும் ஏனைய மூலகங்கள்) | 10.3% |
| Land use and biomass burning<br>(நிலப்பயன்பாடு மற்றும் உயிர்த் திணிவுகள் எரிதல்) | 10.% |
| Maste disposal and treratment<br>(கழிவகற்றல் நடவடிக்கை) | 3.4% |
| Power stotions<br>(வலு நிலையங்கள்) | 21.3% |
| மூலம் Howrok 2002 | |

**நடவடிக்கைகள்:-**

சூழ்நிலையைக் கருத்தில் கொள்ளாத விவசாய நடவடிக்கைகளும், காலநிலை மாற்றத்திற்கு காரணமாகக் கொள்ளலாம். குறிப்பாக இரசாயன உரங்கள், கிருமிநாசினி, களைநாசினி என்பவற்றின் பாவனையாலும் அவற்றினைப் பயன்படுத்தும் உபகாரணங்களாலும் வளிமண்டலத்தில் சிலவாயுக்கள் சேர்வதன் காரணமாக வளிமண்டல வெப்பநிலை அதிகரித்து வருகின்றது. முக்கியமாக மெதன் வாயுவின் அதிகரிப்பிற்கு விவசாய நடவடிக்கை பிரதானமான காரணியாகும். மெதன் வாயு வளிமண்டல வெப்பநிலையை அதிகரிக்கச் செய்து காலநிலை மாற்றத்தினைத் தூண்டுகின்றது.

**உயிர்ச்சுவட்டு எரிபொருடகளின் பாவனை:-**

உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனை அண்மைக்காலத்தில் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், இயற்கைவாயு, நிலக்கரி போன்றவற்றின் அதிகரித்த பாவனை காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளிமண்டலத்துக்கு வெளியிடப்படும் காபனீரொட்சைட்டு, கந்தகவீரொட்சைட்டு போன்ற பச்சைவீட்டு வாயுக்களின் காரணமாக வளிமண்டலம் வெப்பமடைந்து அதன் காரணமாக காலநிலை மாற்றம் உருவாகின்றதெனலாம். ஒவ்வொரு வாயுக்களும் அவற்றின் எரிதலின் போது அதிகளவான காபனீர்ரொட்சைட்டை வெளிவிடுகின்றன.

**கால்நடை வளர்ப்பு:-**

கால்நடை வளர்ப்பு காலநிலை மாற்றத்திற்கு ஒரு காரணம் எனலாம். ஐநாவின் அறிக்கையின்படி 2006ம் ஆண்டு 18% மான பச்சைவீட்டு வாயுக்கள் கால்நடை வளர்ப்பின் மூலம் வெளியேற்றப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப் படுகின்றது. குறிப்பாக மெதேன், நைத்ரேட், ஒட்சைட் என்பன கால்நடை வளர்ப்பின் மூலம் வெளிவிடப்படுகின்றது. இவை வளிமண்டலத்தில் சேர்த்து வளிமண்டலத்தின் பச்சைவீட்டு வாயுக்களை அதிகரிக்கச் செய்வதன் காரணமாக வளிமண்டல வெப்பநிலையை அதிகதிக்கின்றது எனலாம். வளிமண்டல வெப்பநிலை மாற்றம் காலநிலை மாற்றத்தினைத் தூண்டுகின்றது.

**சீமெந்து தயாரிப்பு:-**

காலநிலை மாற்றத்தினை தூண்டும் இன்னுமொரு காரணி சீமெந்து உற்பத்தியின் காரணமாக வெளியிடப்படும் $Co_2$ வளிமண்டலத்தின் $Co_2$ வினை அதிகரிக்கச் செய்கின்றது. மனிதனால் வெளியிடப்படும் $Co_2$2 வில் 5% மானது சீமெந்து உற்பத்தியின் மூலம் வெளிவிடப்படுகின்றது.

**சூரியக்கதிர் வீசலின் வேறுபாடு:-**

பூமியின் மிகப்பெரிய சக்தி மூலாதாரம் சூரியன். இதனை விட சந்திரனின் ஈர்ப்பு விசையும் சக்தியை வழங்குகின்றது. (Grovity of the moon) புவி வெப்பமும் (Grothermal) புவிக்கு சக்தியை வழங்குகின்றது. ஆனால் சூரியனின் கதிர்வீசலானது அடிக்கடி மாற்றடைகின்றது கோட்பாடொன்றின்படி ஆரம்ப காலத்தில் சூரியன் கடும் குளிராக காணப்பட்டதென்றும் இதுவே பூமிக்கு நீரினை வழங்கியது எனவும் கூறப்படுகின்றது. இதனால் சூரியனின் கதிர்வீசலின் வாயு வேறுபடுகின்றது என்றும் கூறப்படுகின்றது. கடந்த 50 ஆண்டுகால வரலாற்றில் சூரியனின் கதிர் வீசலின் அளவு வேறுபடுகின்றது. என்றும் கூறப்படு கின்றது.சில சமயங்களில் முனைவுப் பகுதிக்கு அதன் கதிர்வீசலின் சராசரி அளவை விட அதிகமாகக் காணப்பட்டது எனவும் கூறப்படுகின்றது. இத்தகைய சூரியக்கதிர் வீசலின் வேறுபாடும் காலநிலை மாற்றத்தினை தூண்டுகின்றது எனவும் குறிப்பாக தாழமுக்க உயரமுக்க நிலைமைகளில் இது செல்வாக்குச் செலுத்து கின்றது எனவும் அறியப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிமலை வெடிப்பு:-

எரிமலை வெடிப்புச் செயற்பாடானது காலநிலை மாற்றத்தினை அதிகரிக்கும் எரிமலை வெடிப்பின் போது புவியின் ஆழ்பகுதிகளில் காணப்படும் பொருட்கள் புவிமேற்பரப்புக்குக் கொண்டு வரப்படுகின்றது. புவியின் ஆழ் பகுதியில் காணப்படும் அதீத வெப்பம் காரணமாக அதன் கீழ்ப்பகுதிகளில் காணப்படும் பொருட்கள் உருகிய திரவநிலையிலேயே காணப்படும். இதனால் எரிமலை வெடிப்பின் போது வெளியிடப்படும் பொருட்கள் வெப்பமாகவே காணப்படும். அத்துடன் எரிமலை வெடிப்பின் போது வெளியிடப்படும் வாயுக்களும் வளிமண்டலத்தில் சேர்ந்து வாயுக்களின் சமநிலையில் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது வாயுக்கள் நைதரன், கந்தகவீர்ஒட்சைட் என்பன முக்கியமானவை. அத்துடன் எரிமலை வெடிப்புச் செயற்பாட்டின் போது உடனடியாகவே அவ்வப்பிரதேச காலநிலையில் மாற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. 1912ம் ஆண்டு நொறருப்டா (Norarupta) எரிமலை வெடிப்பின் போதும் 1991ம் ஆண்டு மொன்ற் பினருபோ (Mount Pinatubo) வெடிப்பின் போதும் அப்பிரதேச வானிலை நிலைமைகள் உடனடியாகவே மாற்றமடைந்து நீண்ட காலத்துக்கு அவை அவ்வாறிருந்தன. என்பது குறிப்பிடத்தக்கது எனவே காலநிலை மாற்றத்துக்கான காரணிகளில் எரிமலை வெடிப்பும் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

## காடழிப்பு

காடழிப்பு நடவடிக்கை காலநிலை மாற்றத்துக்கு காரணமாக உள்ளன. 1950ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது உலகக்காடுகளில் 39% மானவை தற்போது அழிக்கப்பட்டுள்ளன. இதனைவிட அயனமண்டல மழைக்காடுகளில் 60% மான காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இத்தகைய காடழிப்பு நடவடிக்கையானது கைத்தொழில் தேவைளுக்காகவும் குடியிருப்புக்கள் மற்றும் கட்டுமானத் தேவைகளுக்காகவும் அழிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய காடழிப்பு நடவடிக்கையானது புவியின் பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்புக்கு அடிப்படையாக அமைகின்றது. இதனால் புவி வெப்பமடைதல் ஏற்படுவதுடன் அதன் மூலம் காலநிலை மாற்றமும் உருவாகின்றது.

## காலநிலை மாற்ற பாதிப்புக்கள்

காலநிலை மாற்றத்தின் காரணமாகப் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படக்கூடுமென காலநிலையாளர்கள் குறிப்பிடுகின்றனர். அந்த வகையில் பின்வரும் பாதிப்புக்கள் ஏற்படுமென அறியப்பட்டுள்ளது. இப்பாதிப்புக்கள் பௌதீக ரீதியான பாதிப்புக்கள், பொருளாதார ரீதியான பாதிப்புக்கள், சமூக ரீதியான பாதிப்புக்கள் என வகைப்படுத்தி நோக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### பௌதீக ரீதியான பாதிப்புக்கள்

பௌதீக ரீதியான பாதிப்புக்களில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுவதற் கான வாய்ப்புள்ளதாக கூறப்படுகின்றது. அந்தவகையில் பின்வரும் பாதிப்புக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை வெப்பநிலை உயர்வு, கடல்மட்ட உயர்வு, வெள்ளப்பெருக்கு, பனிமலைகள் உருகுதல், வரட்சி, பவளப்பாறைகள் அழிதல், வானிலைகளில் மாற்றம் ஏற்படுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

#### வெப்பநிலை உயர்வு

காலநிலை மாற்றத்தினால் ஏற்படுகின்ற பிரதான பாதிப்பாக வெப்பநிலை உயர்வைக் குறிப்பிடலாம். இதுவே ஏனைய அனைத்துப் பாதிப்புக்களுக்கும் காரணமாகவும் விளங்குகின்றது. காலநிலை மாற்றத்தினால் புவியின் வளிமண்டல வெப்பநிலை அதிகரிக்கின்றது. வெப்பநிலை அதிகரிப்பதால் மனிதன் மட்டுமன்றி ஏனைய உயிரின வாழ்க்கையும் எதிர்காலத்தில் கேள்விக்குறியாகி விடும். இந்த நூற்றாண்டின் இறுதியில் ஆசியாவின் வெப்பநிலை 5 - 4° C இனால் அதிகரிக்கும் என கூறப்படுகின்றது. அத்துடன் ஆவியாக்கலும், ஆவியுயிர்ப்பும் அதிகரிக்கும் இதனால் பல இடங்கள் உயிரின வாழ்க்கைக்கு உவப்பவற்ற பகுதியாகி விடும்.

#### கடல் மட்ட உயர்வு

காலநிலை மாற்றத்தினால் கடல்மட்ட உயர்வு ஏற்படும் ஏனெனில் பனி உருகுவதனால் கடல் நீர் வெப்பமடைந்து விரிவடைவதாலும் கடல்மட்டம் உயரும். அடுத்த நூற்றாண்டில் கடற்கரைப்பகுதிகள் பல கிலோ மீற்றர் தூரம் கடலினால் காவு கொள்ளப்படலாம். உலகின் 10 கோடிமக்கள் சராசரி கடல் மட்டத்திலிருந்து 3 அடி உயரத்துக்குள்ளேயே வாழ்கின்றனர். பசுபிக் சமுத்திரத் தில் உள்ள "துவாளு" என்னும் தீவு தொடர்ச்சியான ஒன்பது பவளத்தீவுகளால் அமைந்த நாடு இந்த தீவுகளின் அதிகபட்ச உயரம் 16 அடி ஆகும். இன்னும் 50 ஆண்டுகளில் இந்தீவு மூழ்கிவிடும். எனக்கூறுகின்றனர். இதனால் அருகில் உள்ள அயல்நாடுகளான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளிடம் சுற்றுக் சூழல் அகதிகளுக்கான புகலிடக் கோரிக்கையை அந்நாடு முன் வைத்துள்ளது.

#### வெள்ளப் பெருக்கு

காலநிலை மாற்றத்தினால் கடல்மட்ட உயர்வு மட்டுமன்றி ஏரிகள், நதிகள் போன்றவற்றிலும் நீர்மட்ட உயர்வு அதிகரிக்கும். இதனால் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படும். இதனைவிட காலநிலை மாற்றத்தினால் மழைப்பொழிவும் சில வேளைகளில் ஏற்படும். இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அதிகளவான மக்கள் இறக்க நேரிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வரட்சி

உலகில் பலபகுதிகளில் கடுமையான வரட்சி ஏற்பட்டு பாலை பரவுதல் அதிகரித்து விடும். பல பகுதிகள் மழையின்றி கடுமையான வரட்சிக்கு உட்பட்டிருப்பதனால் அவை வரண்டு பாலைவனமாகும். அத்துடன் அதிக வெப்பநிலை நிலவுவதனால் ஆறுகள் ஏரிகள் போன்ற நீர் நிலைகள் வற்றி விடும். இதனால் உலகின் பல பகுதிகளில் புதிய பாலைவனப் பகுதிகள் தோற்றம் பெறும் அத்துடன் ஏற்கெனவே உள்ள பாலைவனப் பகுதிகள் விரிவாக்கம் பெற்று வருகின்றன. ஐ. பி. சி. சி இன் அறிக்கைப்படி 2050ம் ஆண்டு உலகின் பாலை வனம் பகுதிகள் 07% அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

### பவளப்பாறைகள் அழிவு

காலநிலை மாற்றத்தினால் கடலிலுள்ள பவளப்பாறைகள் அழிவடையும். பவளப் பாறைகள் வளிமண்டல வெப்பம் அதிகரிப்பதன் காரணமாகவும், கடல் நீரின் வெப்பம் அதிகரிப்பதன் காரணமாகவும் வெளிறி அழிவடைகின்றன. கடலின் மழைக்காடுகள் என அழைக்கப்படும் பவளப்பாறைகளில் 88% மானவை ஆசியாவில் அழிவடையும் எனக்கருதப்படுகின்றது. இதனால் ஆசியாவின் கடல் உயிர்ச்சூழல் சமநிலை குழப்பப்படும்.

### தாவரங்கள் அழிவடைதல்

தாவரங்களின் வகையிலும் அவற்றின் பரம்பல்களிலும் பல மாற்றங்கள் ஏற்படும் பல தாவரங்கள் புதிய காலநிலை மாற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அழிவடையும். அத்துடன் அவற்றின் வளர்ச்சி ஒளித்தொகுப்பு என்பன பாதிக்கப்படும். பூமியின் தாவரப் போர்வை குறைவடையும் இதனால் பூமியின் வெப்பநிலை அதிகரிக்கும். எனவே வெப்பநிலை அதிகரிப்புக்கு காரணமாகத் தோன்றும் காலநிலை மாற்றம் தாவரங்களை அழிப்பதனால் அவை மீண்டும் வெப்பநிலை அதிகரிப்புக்கு காரணமாக அமைந்து விடும்.

### பொருளாதாரப் பாதிப்புக்கள்

காலநிலை மாற்றத்தினால் பல பொருளாதாரப் பாதிப்புக்கள் ஏற்படும் எனக் கூறப்படுகிறது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் இயற்றை அழிவுகளால் பயிர்கள் பாதிக்கப்படும் இதனால் கோதுமை, சோளம், நெல் போன்ற பிரதானப் பயிர்கள் அதிக வெப்பநிலையைதாங்கமுடியாமல் இருக்கும் இதனால் பயிர்களின் வளர்ச்சியை பாதிக்கும் இதனால் உலகில் தானிய நெருக்கடி ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ கடல் உயிர்கள் அழிவடைந்து கடற்சூழல் குழப்புவதனால் மீன்பிடித்தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படும்.

- ❖ விலங்கு வளர்ப்பு சவாலான ஒன்றாகிவிடும் பல விலங்குப் பண்ணைகள் அழிவடைய நேரிடும். புதிய காலநிலை மாற்றத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் நோய்களினால் இறந்து விடும்.

- ❖ விவசாய நிலங்கள் தரிசு நிலங்களால் மாற்றம் பெறும் விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசன வளிகள் அற்றுப் போகும். இதற்கு காலநிலை மாற்றமே பிரதான காரணம் எனக் கூறப்படுகிறது.

## சமூக ரீதியான பாதிப்புக்கள்

காலநிலை மாற்றத்தினால் மனித சமூகத்திற்கு புதிய வகையான நோய்கள் தோன்றும் வாய்ப்புண்டு. மனிதனுக்கு தோல், கண் மற்றும் உளவியல் சார்ந்த நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு இதனால் மனித ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

- ❖ உலகின் சில பகுதிகளில் வரட்சி அதிகரிப்பதனால் அங்கிருந்து அதிகள வான மக்கள் இடம்பெயர நேரிடும்.

- ❖ சமுத்திரங்களின் நடுவில் அமைந்துள்ள தீவுகள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்படும்.

- ❖ அங்கவீனக் குழந்தைகள் பிறப்பு அதிகரிக்கும்.

## இலங்கையின் செயற்பாடுகள்

1) இலங்கை வளிமண்டலவியற் திணைக்களம் காலநிலை மாற்றத்துக்கான நிலையம் (Center for the Climote Chonge) ஒன்றினை நிறுவி அதன் மூலம் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

2) பிளனெற் அக்சன் (Planet Action) எனும் அமைப்பு காலநிலை மாற்றத்துக்கு எதிரான செயற்றிட்டம் ஒன்றினை இலங்கை வளிமண்டலவியல் திணைக் களத்துடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது.

3) ஐநாவின் UNDP யும், இலங்கை இயற்கை வளங்கள் சுற்றாடல் அமைச்சும் இணைந்து காலநிலை மாற்றத்திற்கு எதிரான செயற்றிட்டம் ஒன்றினை செயற்படுத்தி வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்காலத்தில் செய்ய வேண்டியவை

1) உலக நாடுகள் காலநிலை மாற்றத்திற்கெதிரான மாநாடுகள் நடத்துவதனையும், அறிக்கைகள் வெளியிடுவதனையும் மட்டும் செய்யாமல் சூழக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத பச்சை வீட்டு வாயுக்களை வெளியிடாத புதிய தொழில்நுட்ப கைத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2) உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனைகளைக் குறைத்து, சுழலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத சூரியசக்தி, கடல்அலை, காற்று, புவிவெப்பம் போன்றவற்றைப் பயன்படுத்துதல் வேண்டும்.

3) காடு அழித்தல் நடவடிக்கைகளை தவிர்த்து உலகநாடுகளின் பரப்பளவை அதிகரித்தல் வேண்டும்.

4) அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டுமன்றி தனிமனிதர்களும் இதில் அக்கறை செலுத்தல் வேண்டும்.

5) இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும்.

6) மரநடுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தல்.

## உசாத்துணை நூல்கள்


1) Bardon K. (1999) Physical Gegraphy. Londan Lot And Co

2) Howrok S. (2002) Veather And Climate London Mesond Publishing

3) யாழ்ப்பாணம் புவியியலாளன், இதழ் 20



யே. றாகினி (BA)

பழைய மாணவி


அழிவுக்கு முந்தியது அகந்தை
வீழ்ச்சிக்கு முந்தியது வீண் பெருமை.

உயர்வான மனிதர்கள் வார்த்தைகளை வெளியிடுவதில் நிதானமாகவும் நடத்தையில் உறுதியாகவும் இருக்க விரும்புவார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்வழி காட்டி

பள்ளிப்பருவத்தில் எமக்கு
எழுத்தைக் கற்றுத் தந்த ஆசானே
படிப்பின் வழி நின்று
பாசம் சொல்லும் ஆசானே
நாம் வாழ்வில் சிறந்து ஓங்க
இத்தரணியில் கால் வைத்த ஆசானே
எம் வாழ்வில் ஒளிரும் விளக்காய் இருந்து
வழியைக் காட்டிடும் ஆசானே
"ஆ" எனும் சொல்லில்
உம் அன்பைக் காட்டிடுவீர்
எமை உம் செல்வங்களாக நினைத்தீர்
என்றும் எம் வழிகாட்டி நீரே.

ஆக்கம்:– சூ. கிதுஜனா
தரம்:– 08

## ஆசான்கள்

எழுத்தை நமக்கு கற்றுத்தந்த
எழுதப் பழகச் சொல்லித் தந்த ஆசானே
அனுபவம் தான் வாழ்க்கை என்று
அடிமனதில் நினைத்து விட்டு
அதே இடத்தில் நின்று
அடுத்த தலைமுறை வளர
ஆயுள் வரை கற்பிற்கும் ஆசானே
உன்னை நாமும் வாழ்த்துவதில்
பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

கே. மசாந்தினி
தரம்:– 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆக்கம்: சி. மதியரசி
தரம் - 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் படிக்கும் பாடசாலை

நான் படிக்கும் பாடசாலை
நல்லதொரு பாடசாலை
இங்கு தரம் ஒன்பது வரை
இருக்கின்றது வகுப்புக்கள்
அன்பு கொண்ட அதிபர்
அறிவுள்ள ஆசிரியர் குழாம்
அறிவைப் பெற்றுக் கொள்ளும் மாணவ மணிகள்
இத்தனையும் நிறைந்து
இருக்கின்றதாம் குமுழமுனை கிராமத்தில்
என்ன அறிவுப் பொக்கிசம்
எங்கள் பாடசாலை
அழகிற்கு அழகு சேர்க்க
ஆர்வமுடன் கற்றிடுவோம்
சாதனைகள் படைத்திடுவோம்
சரித்திரத்தில் உயர்ந்திடுவோம்
வென்றிடுவோம் பரீட்சையிலே.

**ஆக்கம்:– ர. தனுசா**

**தரம்:– 08**

கோபம், பேராண்மை, பொறாமை, பகைமையின்மை, அமைதியின் பகைவர்கள், தன்னம்பிக்கை, கூட்டுறவு, கருணை, பழிவாங்காமை, ஆகிய நற்பண்புகள்
(சுவாமி விவேகானந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஆசை

எல்லோராலும் போற்றப்பட
என்றும் நான் உயர
அதிபர் ஆசிரியர்கள் வாழ்த்தி நிற்க
சுற்றமது போற்றி நிற்க
பெற்றவர்கள் கட்டியணைக்க
பரீட்சையில் வெற்றி பெற்று
பல்கலைக்கழகம் சென்று
பலகலைகள் தான் கற்று
ஆசானாக நான் உயர்ந்து
அறிவுரைகள் பல கூறி
கல்வி மானாக நான்
கல்வியறிவு பெற்று
மாபெரும் சபையினிலே
மாலைகள் பல பெற்று
மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும்
என்பது எனது ஆசை

ஆக்கம்:- ர. தமிழ்நிலா
தரம்:- 04

நீ உன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால் உன்னுடைய கால்களால் நடந்துபோ மற்றவர்களின் முதுகில் ஏறிப்போக விரும்பாதே அது உனக்கு ஆபத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்துறையின் இன்றைய நிலை

இன்றைய உலகின் விஞ்ஞானத்தின் அதிவேக வளர்ச்சியின் காரணமாக உலகம் ஒரு கையில் அடங்குமளவிற்கு சுருங்கி விட்டது. நாள்தோறும் புதுப்புது விஞ்ஞான அற்புதங்கள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. நாம் காலையில் எழுவது முதல் இரவு உறங்குவது வரை எத்தனையோ வகையான விஞ்ஞான உற்பத்திப் பொருட்களை உபயோகித்து வருகின்றோம். ஒவ்வொரு மனிதனும் மிக ஆழமான சிந்தனைகளில் ஈடுபடுவதன் மூலம் பற்பல விஞ்ஞான உபகரணங்களைக் கண்டுபிடிக்கின்றான். அறிவால் முடியாதது எதுவுமில்லை. அறிவுக்கு அடித்தளமாக தேவைப்படுவது ஆற்றல். மனித மூளையின் சிந்தனைத்திறன் கொண்டு அது பலவாறாக பரிணமிக்கிறது. இவ்வாறு உருவாக் கப்படும் விஞ்ஞான கண்டுபிடிப்புக்களினால் எமக்கு பல நன்மைகள் கிடைத் தாலும் அதேவேளை சில தீமைகளும் ஏற்படுகின்றன.

உழவன் சேற்றில் கைவைத்தால் தான் நாம் சோற்றில் கைவைக்க முடியும். ஒரு நாட்டின் செல்வம் அந்நாட்டின் விளைபொருள்களிலேயே தங்கியுள்ளது. அதனால் தான் உழுது பயிரிடும் விவசாயிகளை உலகம் பெரிதும் மதிக்கிறது. இன்று உழவர்கள் விஞ்ஞான பயிர்ச்செய்கை முறைகளைப் பயன்படுத்தி பெரும் விளைச்சலைப் பெறுகின்றார்கள் பண்டைக்காலத்தில் ஏர் மூலம் உழுது விவசாயம் செய்த விவசாயிகள் தற்காலத்தில் உழுது இயந்திரம், அறுவடைஇயந்திரம் என பல இயந்திரங்களைப் பயன்படுத்தி பல மணித்தி யாலங்களில் செய்ய வேண்டிய வேலையை ஒரு சில நிமிடங்களில் செய்து முடிக்கின்றனர். இது இன்றைய உலகில் விஞ்ஞானம் கலக்காத துறைகளே இல்லை என்பதனை பறைசாற்றுகின்றது.

இன்றைய விஞ்ஞான யுகத்தில் நோய்களைக் கண்டு பிடிக்கும் விஞ்ஞான உபகரணங்களும் இயந்திரங்களும் உருவாகியுள்ளன. தற்பொழுது பரவிவரும் குணப்படுத்த முடியாத நோய்களுக்குக் கூட மனிதன் தனது விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தி மருந்துகளை கண்டுபிடித்துள்ளான். முற்காலத்தில் மனிதன் பல வேலைகளைச் செய்வதன் மூலம் நோய்களற்று இருந்தான். இந்நவீன யுகத்தில் இயந்திரங்களின் வருகையால் மனிதர்கள் வேலையற்று சோம்போறிகளாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றார்கள். இந்நோய்களைத் தடுப்பதற்கும் தற்பொழுது மருந்துகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. வானிலை முதல் மனநிலை வரை அறிய உதவும் கருவிகள் பல உள்ளன. அறுவைச்சிகிச்சை இயந்திரங்கள், எக்ஸ்ரே உபகரணம், ஸ்கானிங் உபகரணம் போன்ற பல மருத்துவம் உபகரணங்களின் வருகையால் பலநோய்கள் முற்றாக அழிக்கப்படுகின்றன. இது விஞ்ஞான வளர்ச்சி வேகத்தையே குறிக்கின்றது.

இன்றைய விஞ்ஞானத்தின் வேகம் நம்மைப் பிரமிக்க வைக்கிறது கணனியின் வரவால் கருமங்கள் யாவும் இலகுவில் செய்து முடிக்கப்படுகின்றன. இன்று மாணவர்களும் கையிலே கொண்டு செல்லக்கூடிய வகையில் அதி தொழிநுட்பம் கூடிய மடிக்கணனிகள் பல உருவாக்கப்பட்டுள்ளன. விஞ்ஞானத் தின் பரிணாம வளர்ச்சியின் பிரதிபலிப்புத்தான் உரோபோக்கள் எனப்படும் இயந்திர மனிதர்கள் இன்று ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் உரோபோக்கள் மனிதர்கள் செய்யும் அத்தனை வேலைகளையும் செய்யும் ஆற்றல் படைத்தனவாக காணப்படுகின்றன. இந்த இயந்திர மனிதர்களின் வருகையால் உலகமே வியப்படைந்துள்ளது. இவற்றின் உற்பத்திப் பெருக்கத் தால் நாளடைவில் மனிதர்களுக்கே வேலை இல்லாமல் போகுமோ? என அச்சப் பட்ட வேண்டியுள்ளது.

மனிதன் விஞ்ஞானத்தை கடைப்பிடிப்பதனால் ஏற்படும் நன்மைகளை மட்டும் கருத்தில் கொள்ளாது தீமைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். தற்காலத்தில் மனிதன் பேராசையால் அதிகளவு செயற்கை உரங்களைப் பயன்படுத்தி பயிர்களை அழிவடையச் செய்கின்றான். இதனால் மண்வளம் பாதிக்கப்படுவதோடு "விவசாயிகளின் நண்பன்" எனப்படும் மண்புழுக்களும் பயிர்களுக்கு நன்மை தரும் உயிரினங்களும் அழிகின்றன. அத்தோடு குளிர் சாதனப்பெட்டி வளிப்பதனமாக்கி என்பனவற்றிலிருந்து வெளியாகும் நச்சு வாயுக்களினால் ஓசோன்படை அழிவுறும் அபாயம் உருவாகியுள்ளது. இவ்வாறு இயந்திரங்களிலிருந்து வெளியாகும் காபன் புகைகள் வளிமண்டலத்தில் சேர்வதனால் வளி மாசடைகிறது. இதனால் மனிதன் சுவாசிப்பதற்கு தூயகாற்றின்றி நோய்கள் பல ஏற்படுகின்றன. எனவே விஞ்ஞான இயந்திரங்களை கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகள் சூழல் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு இயந்திரங்களை உருவாக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வீட்டு உபயோகப் பொருட்கள் முதல் நாட்டின் நிருவாகத்துறை வரை எல்லாமே மின்னணுமயம், மண்ணில் இருந்தபடி விண்ணில் ஆராய்ச்சி நடைபெறுகிறது. செவ்வாயக்கிரகத்தில் இறங்கி நிலவில் கால்பதித்து வாழ முடியுமா என ஆராய்ச்சி நடைபெறுகிறது. உலகில் நாளுக்கு நாள் பல மாற்றங் கள் உருவாகின்றன. இம்மாற்றங்களுக்கேற்ப நம்மை மாற்றுவது காலத்தின் கட்டாயம். இன்று தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் நேரமும் பொருளா தாரமும் பெரிதும் சேமிக்கப்படுகிறது. கணனி இல்லாத இடமே இல்லை என்று கூறும் நிலை ஏற்பட்டுள்ளது எனவே விஞ்ஞான மாற்றங்களை நாமும் கடைப் பிடித்து சூழலுக்கு ஏற்ற வகையில் உபகரணங்களை பயன்படுத்தி நாமும் வாழ்ந்து சூழலையும் பாதுகாப்போம்.

**ஆக்கம் யோ. மேரிஜெனிஸ்ரா**
**பழைய மாணவி**

### மகிந்த ராஜபக்ஷ தேசிய ரெலி சினிமா பூங்கா

- அமைந்துள்ள இடம் ரண்மிஹிதென்ன
- இலங்கையின் திரைப்பட துறையை முன்னேற்றுவதற்காக அமைக்கப்பட்ட தாகும்.

### உலக உணவு தினம்

- உலக உணவு தினம் வருடாந்தம் ஒக்டோபர் 16இல் அனுஷ்டிக்கப்படுகிறது.
- 2013ம் ஆண்டுக்கான உலக உணவு தின தொனிப்பொருள் போஷாக்கும் உணவு பாதுகாப்புக்குமான நிலையான உணவு முறைமைகள் என்பதாகும்.
- இத்தினம் 1979ம் ஆண்டு உணவு அமையத்தினால் ஆரம்பிக்கப்பட்டது.
- உலகில் 1:8 மக்கள் என்ற வீதத்தில் இரவில் பசியுடன் படுக்கைக்கு செல்வதாக கணக்கிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்திய திருடர்கள்

ஒரு ஊரிலே யானைச் சிந்து வாழ்ந்து வந்தது. அதற்கு மேகலா என்ற மனைவியும் இந்திரன் என்ற பிள்ளையும் இருந்தது. யானைச் சிந்து தனது கடின உழைப்பால் தனது பண்ணையில் வாழை, கரும்பு, நெல், கத்தரி, பயிற்றை என நிறைய வளர்த்து செல்வந்தனாக வாழ்ந்து வந்தது.

அயலூரில் சிங்கமும் புலியும் குரங்கும் நண்பர்கள் ஆவார். அவர்கள் யானை சிந்துவின் செல்வத்தை திருட திட்டமிட்டார்கள். ஒரு நாள் இரவு யானையை விரட்டி விட்டு திருடி உண்பதற்கு திட்டமிட்டன.

யானைக்கு காவலாளியாக கழுதை இருந்தது. கழுதை கத்துவதை உணந்து யானைச்சிந்து திருடர் வருவதை உணர்ந்தது. யானையும் கழுதையும் திருடனைப் பிடிப்பதற்கு திட்டமிட்டது. யானையின் பண்ணைக்குச் செல்வ தென்றால் வாயில் கதவுகளிலே செல்ல வேண்டும். சிங்கம், புலி, குரங்கு வாயில் வழியே உள்ளே சென்றது. யானை சிந்து பின்கதவை இறுக்கப்பூட்டியது கழுதை முன் கதவை இறுகப் பூட்டியது. சிங்கமும், புலியும், குரங்கும் வகையாக மாட்டிக் கொண்டான் யானை சிந்து தனது அயலவர்களை சத்தமிட்டு அழைத்தது.

யானைகள் எல்லாம் யானைச் சிந்துவின் வீட்டிற்கு வந்தன. கழுதை கதவைத்திறக்க யானைகள் திருடர்கள் ஓட முடியாது சுற்றி வளைத்தன. யானைகள் கொல்லப்படப் போவதாக அச்சுறுத்தினர். யானைச் சிந்து சிங்கத்துக்கும், புலிக்கும் குரங்குக்கும் உழைத்து வாழ வேண்டும் திருடுவது துன்பத்தையும் துயரத்தையும் தரும் என்று புத்தி புகட்டியது. சிங்கமும் புலியும் குரங்கும் நாம் திருடமாட்டோம் உழைத்து வாழ்வோம் எங்களை விட்டு விடுமாறு இரந்து கேட்டன. சிந்து யானை அவற்றை விடுவித்தது.

சிந்து யானை தனது செல்வத்தால் வரும் தீமையை உணர்ந்து தனது ஆடு, மாடுகளையும் பயிர்செய்யும் விலங்குகளையும் அயலவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து அறப்பணி செய்து சுகமாக வாழ்ந்து வந்தது.

ம. கிருஸ்ரிகா

தரம்:- 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணித விஞ்ஞான மன்றம்



சுகாதார மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாடசாலை

இனிய நம் தாய் நாடாம்
இலங்கை தனிலே
வளங்கள் நிறைந்து காணப்படும்
கிளிநொச்சி மாவட்டத்திலே

இயற்கை அழகும் செழிப்பும் நிறைந்த
குமுழமுனை கிராமத்திலே
கடலில் முத்து போன்றது கிடைத்த
எம் குமுழமுனைப் பாடசாலை

பதினான்கு ஆசிரியர்களையும்
நூற்றுக்கணக்கான மாணவர்களையும்
கொண்டு சிறப்போடு விளங்கும்
பாடசாலையே குமுழமுனைப் பாடசாலை

மூன்று கட்டங்களை வைத்தே
முழுவரது அன்பினையும் பெற்று
ஆதரவினையும் பெற்று சிறப்புற்ற
பாடசாலை எம் குமுழமுனைப் பாடசாலை

பேதைகளான எம்மை மேதைகளாக
மாற்றும் ஆசிரியர்களைத்
தன்வசம் கொண்டுள்ள அழகுப்
பாடசாலையே குமுழமுனைப் பாடசாலை

குமுழமுனைப் பாடசாலை அன்னையே
உன்புகழ் பென்மேலும் உயர்ந்து சிறப்புற்று
உன்பணி பல்லாண்டு காலம் தொடர
உனை வாழ்த்துகிறேன்.

**ஆக்கம்:- அ. அனுஸ்ரா**
**பழைய மாணவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதியாவின் மடிக்கணனி




குப்பை இல்லை குறையவில்லை கட்டடங்கள்
உப்பா உறைப்பா உண்பதில் நம்மவர்கள்
எப்பா! எல்லாமே அங்கே தான் உற்பத்தி
ஜப்பான் என்ற சப்பை மூக்கர் வாழும் நாடு!

தயாரிப்பு தரம் தகுதி மிக்கவே உள்ள
உயரிய சொனி (Sony) எனும் புகழ் பெற்ற நிறுவனத்தினால்
பையவே நானும் பிறந்தேன் மடிக்கணினியாய்
வையோ (Vaio) எனும் பெயரிட்டு வாழ்த்தினர்

எண்ணற்ற சகோதரம் எனக்கு அதில் நான் கறுப்பு
கண் கொள்ளா அழகாய் நானும் அதில் வெப்கமரா ஒரு உறுப்பு
வின்டோசு 7அம் அதில் வின்டோஸ் 13 இயங்கும் பொறுப்பு
வன்தட்டு 320 ஞாபகம் 4GB கூட DVD றைட்டு!

எல்லோரும் பிரிந்தோம் வெவ்வேறு ஊருக்கு
நல்லதாய் இருந்தோம் நன்றிகள் நம்மிடை பகிர்ந்தோம்
நல்லவர் கைகளில் சேர்வதே நமது ஒரே நாட்டம்
நன்றாய் நானும் பறந்தேன் இலங்கை மணி திரு நாட்டுக்கு!

கடல் கடந்து கொழும்பு வந்தேன் கொழுத்தும் வெயிலில்
கடைக் கண்ணாடி பின் கம்பீரமாய் இருந்தேன்
கண்டவரை கவர்ந்தேன் கனவுக் காட்டில் மிதந்தேன்
கதை பேசி விலைபேசி பலர் கேட்டனர்! சிலர் தொட்டனர்!

மகளுக்கு நான் பரிசாம் மதியாவாம் அவர் பெயர்
மயில்வாகனம் வாங்கினான் ஏறினார் வன்னிமண் நோக்கி
பயணிக்கும் வாகனத்தில்
மனமின்றி பிரிந்தேன் புதுமனை நாடி பயணம் தொடர்ந்தேன்
மாங்குளம் கடக்கையில் நடந்தது சம்பவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொறி ஒன்று வந்தது மோதியது சென்ற வாகனத்தில்
ஐயோ என கேட்டது கணப்பொழுதில் சத்தம்
மாண்டார் மயில்வாகனம் மண்ணில் பறந்தது அவர் உயிர் வானில்
என்கதை முடிந்தது மாங்குளத்தில் போதும் போதும் இன்றுடன் என்வாழ்க்கை

## சொல்விளக்கம்

| | |
|---|---|
| வெப்கமரா | - Web Camera |
| வன்தட்டு | - Hard disk |
| ஞாபகம் | - Memory Ram |
| சொணி | - Sony |
| வையோ | - Vaio |
| றைட்டு | - DVD Writer |
| விண்டோசு 7 | - Windows 7 |
| இன்ரெல் 13 | - Intel 13 Processor |

**By. N. Quintas**
**ICI Instructor**

நூற்றுக்கணக்கான சாத்தியமற்ற சூழ்நிலைகளில் நெப்பொலியன் தமது வாய்ப்புக்களால் உருவாக்கியது போல நீங்களும் செயற்படுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

01) ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் ஆரவாரம் இராது அவர்கள் யார்?
எறும்பு

02) இரத்தத்தில் வளர்வது ஆனால் இரத்தம் இல்லாதது அது என்ன?
நுளம்பு

03) நாக்கு இல்லாதவன் ஆனால் நல்லது சொல்வான் அவன் யார்?
வானொலி

04) அழகு அழகு வெள்ளரிக்காய் அடுக்கி வைத்த வெள்ளரிக்காய் அது என்ன?
பல்வரிசை

05) இரவு பகல் வீட்டைப் பாதுகாக்கும் ஊதியமில்லாத வேலைக்காரன் அவன் யார்? நாய்

06) நிற்காமல் ஓடுபவன் துரத்தப் பிடிக்க ஆளில்லை அவன் யார்?
காற்று

07) தீக்குளித்து சாகிறவன் காற்று குளித்தும் சாவான் அவன் யார்?
தீக்குச்சி

**ஆக்கம்:– நா. நாகப்பிரியன்**
**தரம்:– 05**

# விடுகதைகள்

01) சீருடை இல்லாத காவலாளி சம்பளம் கேட்காத காவலாளி அவன் யார்?
நாய்

02) சின்ன வாயில் ஊட்டிவிடும் உணவை ஜீரணம் செய்யாமல் வைத்திருப்பவன் அவன் யார்?
உண்டியல்

03) இரண்டு கால்கள் இருப்பவனை விழாமல் பிடித்துக் கொள்ள வேண்டும் அவன் யார்? ஏணி

04) மழைகாலம் வந்து விட்டால் மகராசி பாட்டெடுப்பாள் அவள் யார்?
தவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05) கொண்டை அணிந்த ஆண்பிள்ளை கூவி அழைத்தால் ஊரே விழித்து எழும் அது என்ன? சேவல்

06) ஒரு விளக்கை ஏற்றி வைத்தல் ஊரெல்லாம் வெளிச்சம் அது என்ன?
சந்திரன்

07) சுண்டி விட்டால் இரத்தம் வராது ஆனால் வெற்றி தோல்வி வரும் அது என்ன?
ரூபாய் நாணயம்

08) வட்டமாய் இருக்கும் அழகாய் இருக்கும் எட்டிப் பார்த்தால் உருவம் தெரியும் அது என்ன? கிணறு

09) தீக்குளித்துச் சாகிறவன் காற்றுக் குளித்தும் சாவான் அவன் யாா?
கற்பூரம்

10) தன்னிடம் சேருபவனை தன்னைப் போலவே மாற்றுவான் அவன் யார்?
இளநீர்

11) குண்டுச் செம்பில் தண்ணீர் இருந்தும் குருவி குடிக்கு வழியில்லை அவன் யார்? இளநீர்

12) உரசினால் உயிரை விடுவான் அவன் யார்?
தீக்குச்சி

13) தூக்கம் வந்தால் தானாக மூடும் கதவுகள் அவை எவை?
கண்கள்

**ஆக்கம்:- சி. நேருஜன்**

**தரம்:- 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்பின் விளிம்பில்......

அது ஓர் அழகிய கிராமம் அக்கிராமத்தில் இருநூறு குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. அக்குடும்பத்தில் ஒரு குடும்பந்தான் இராமையா குடும்பம் இவர் ஒரு கடற்தொழிலாளி அன்று ஒருநாள் இராமையா கடலுக்குச் சென்று நீண்ட நேரமாகி விட்டது. அவர் இன்னும் வீடு திரும்பவில்லை இராமையாவின் மனைவியும் அவரது மகன் கமலனும் தந்தை மீன் கொண்டு வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

இரவு வேளையாகியும் அவர் வரவில்லை. மறுநாள் காலை இராமையாவின் சக தொழிலாளி ஒருவர் வந்து கூறினார் "இராமையா கடலில் புயலில் சிக்கி கடலுனுள் அமிழ்ந்துவிட்டார்" என கூறி அவர் உடனே வீட்டை விட்டுச் சென்றார். இராமையாவின் குடும்பம் ஒரு ஏழைக்குடும்பம் அவர் கடலுக்குச் சென்றால் தான் வீட்டிற்கு உணவு. இல்லையென்றால் தாயும், மகனும் பசியோடு தான் இருப்பார்கள். இராசையா இறந்ததிலிருந்து கண்ணம்மா தான் குடும்பப் பொறுப்பாளி கண்ணம்மா கமலனைப் பாதுகாப்பாக பாடசாலை அனுப்பி விட்டுத்தான் கூலிவேலைக்குச் செல்வார்.

தாம் இப்படித் துன்பப் படுவதைப் போன்று மகன் இருக்கக்கூடாது அவன் உயர்படிப்பு எல்லாம் முடித்து அரச உத்தியோகம் ஒன்று எடுக்க வேண்டும் என்று ஆசை அதற்காக கண்ணம்மா ஒருபோதும் கமலனை பாடசாலையிலிருந்து நிறுத்துவதில்லை கண்ணம்மா கூலிவேலைக்குச் சென்று வேலை முடித்து வீட்டிற்கு வந்து வீட்டிலுள்ள உணவுப் பொருளைக் கொண்டு உணவு தயார் செய்து விட்டு மாலையிலும் கூலிவேலைக்குச் செல்வார்.

ஒருநாள் பாடசாலை விடுமுறை கமலன் வீட்டில் தான் இருந்தான் அவனது நண்பனும் வீட்டிற்கு வந்தான். கண்ணம்மா வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து விட்டு வேலைக்குச் செல்ல ஆயத்தமாகும் போது கமலனும் அவனது நண்பனும் கண்ணம்மாவுடன் செல்ல ஆயத்தமாகினர். இதனைக் கண்ட கண்ணம்மா செல்லமாக "கமலா இன்று உனது நண்பனோடு இருந்து படி" என்றார் கமலன் தாயின் பேச்சைக் கேட்காமல் தானும் வேலை செய்யும் பண்ணைக்கு வருவதாக கூறினான். கண்ணம்மா சரி நீயும் வா, என்று கூறி மூன்று பேரும் சென்றனர். கமலனும் நண்பனும் வேலை செய்யும் பிரசேதத்திற்குச் சற்றுத் தூரமாகநின்றனர். கண்ணம்மா வேலை செய்யச் சென்றாள் இருவரும் கண்ணம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணம்மா மண்வெட்டியை எடுத்து நிலத்தைக் கொத்தி பயிர்களை நட்டு பயிர்களுக்கு நீருற்றி முற்றிய மரக்கறிகள் எல்லாவற்றினையும் பிடுங்கி வியர்வை நிலத்தில் சிந்தும்படி வேலை செய்தாள் அப்போது கமலன் உயர்வகுப்பு படித்துக் கொண்டிருந்தான் இதைக் கண்டவுடன் கமலனால் தன் தாய்படும் துன்பத்தை சகித்துக் கொள்ள முடியாமல் கண்களில் இருந்து நீர் வடிந்தது. அப்போது அவனது நண்பன் பல ஆறுதலைக் கூறி கமலனை வீட்டுக்கு அழைத்துச் சென்றான். மறுநாள் ஒரு கடிதம் ஒன்று வந்தது. என்ன கடிதம் என்றும் இது எங்கிருந்து வந்தது என்றும் தெரியாமல் வேகமாக அக்கடிதத்தை பிரித்துப் பார்த்தான் முகம் மலர்ந்து தாயிடம் கூறினான் அம்மா எனக்கு அரச வேலை ஒன்று கிடைத்திருக்கிறது என்று கூறினான்.

இச்செய்தியைக் கேட்டவுடன் கண்ணம்மா ஆனந்தக் கண்ணீர் பெருக நான் நினைத்தது நிறைவேறி விட்டது. எனக்கூறிக் கொண்டு மகனை வாரி அணைத்து முத்தமிட்டாள். அப்பொழுது தான் கமலனுக்குத் தெரியும் எதற்காக இவ்வாறு வேலைக்குச் சென்றார் என்று. தாயின் ஆசை என்னவென்றும் புரிந்து கொண்ட கமலன் நிம்மதிப் பெருமூச்சுடன் தன் வேலையில் மூழ்கினான்.

*"உனது சந்தோஷம் அன்னையின் அன்பிலிருந்தே*
*இறுதி வரைக்கும் கிடைக்கும்"*

**ஆக்கம்:- க. சிறிகரன்**
**தரம்:- 08**

**வாக்காளர் தினம்:-**

- இலங்கையில் வாக்குரிமையை நினைவூட்டுவதற்காக யூன் 1ம் திகதி வாக்காளர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**ஜிங்றி பாவர்:-**

- இலங்கையின் மிகச்சிறந்த கட்டிடக்கலை நிபுணராக திகழ்ந்தவர்
- இவரது 10வது சிராார்த்த தின நிகழ்வு 2013 மேயில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கலாச்சாரம்

தமிழர்களுடைய கலாசாரம் என்றால் என்ன? கலாசாரம் என்பது மொழி மற்றும் இலக்கியம் மதம். தொடங்கி கட்டிடக் கலை முதல் இசை, நாட்டியம், சமையல் வரை பல்வேறு வகையாக ஒன்று சேர்ந்தது தான் ஒரு இனத்துடைய மதத்துடைய, மொழியினுடைய கலாசாரம் என்று சொல்ல முடியும். இவ்வகையான கலைகள் இன்னமும் சீரழியவில்லை என்று தான் சொல்ல வேண்டும். கலாச்சாரம் என்றால் ஒரு இனத்தினுடைய அடையாளம் தேசியக்கொடி இல்லாவிடினும் ஒரு இனத்தினுடைய கலாசாரம் மறைந்து போக பல காரணங்கள் காணப்படுகின்றன. தமிழர் இனம் காலம் காலமாக பலத்த அழிவைக் கண்டது. இதன் மூலம் என்ன தெரிகிறது? கலாசாரங்களைக் குலைப்பதனால் ஒரு இனத்தையே அழிக்க முடியும் தமிழர்களான நாம் எம்முடைய அடையாளத்தை அழியாது பாதுகாக்க எம் கலாச்சாரத்தை வளர்க்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

காலத்திற்கேற்ப தமிழர்களுடைய கலாசாரங்கள் மாற்றங் கண்டுள்ளன. இல்லை என்று சொல்ல முடியாது. உலக மாற்றங்களுக்கேற்ப கலாசாரங்களும் மாற்றங் காணுபது சகஜம். தமிர்களுடைய கலாசாரமாகிய வேட்டியை இன்று நீழக்காற்சட்டை என்று போட்டுத் திரிகின்றோம். அது மட்டுமல்ல மேற்கத்தேய இசைக்கருவிகளைப் பெரும்பாலும் பயன்படுத்துகின்றோம். உணவு வகைளில் கறிகள் என்று இல்லாமல் பீட்சா என்றும் நூடில்ஸ் என்றும் மேற்கத்தேய உணவுகளையும் உண்கின்றோம். எம்முடைய கலாசாரங்கள் மாற்றங்காணுவது ஆரோக்கியமே. கெட்டது அல்ல நாம் யார் என்ற அடையாளத்தை மாற்றம் செய்வது கலாசாரத்தை அழிப்பதற்குச் சமன்.

எமது கலாசாரத்தை அழியாது பாதுகாக்க எம்மை மற்றும் எம்முடைய வருங்கால சந்ததியைக் கலை கலாச்சார நிகழ்வுகளில் பங்கெடுக்க வைக்க வேண்டும். கணனி, கையடக்கத் தொலைபேசி மற்றும் முகப்புத்தகத்துடன் இருக்காமல் கலைகளில் பங்கெடுக்கப் பெற்றோர்களுடன் பிள்ளைகளும் ஊக்கமெடுக்க முன்வர வேண்டும். கலாசாரம் தானாக அழிவது கிடையாது. நாம் தான் காரணம். எமது கலாசாரத்தை அழியாது பாதுகாக்க வேண்டுமென்றால் பற்று வைப்பது மட்டுமன்றி அதில் ஈடுபட வேண்டும். சமையலை ஒரு உதாரணமாக எடுப்போம் இன்று இந்திய உணவு என்றால் உலகுக்கே தெரியும் யாழ்ப்பாணத்தினுடைய உணவு என்று எதைச் சொல்கின்றோம். நிச்சயமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்முடைய உணவு வகையில் தனித்துவமான வித்தியாசம் ஒன்று உள்ளது. வெள்ளையனுக்கு இந்திய உணவு பற்றிய அறிவு உள்ள மாதிரி யாழ்ப்பாணத்து உணவு வகைகளைத் தெரியாது எமது உணவு வகைகள் உலகிற்குத் தெரியப்படுத்த வேண்டும். இதன் மூலமும் கலாசாரத்தைப் பேணவும் பாதுகாக்கவும் முடியும். முன்பு கூறியது போல ஏனைய கலாசாரங்களைப் பார்த்து நாம் மாறுவது பிழையல்ல. ஆனால் எம்முடைய கலாசாரத்தைத் தூக்கி எறிவது அதனைச் சீரழிப்பதாகும். எம் வருங்கால தலைமுறை எம்முடைய கலாசாரத் தைப் பாதுகாக்க வேண்டுமென்றால் இன்று நாம் கலாசாரத்தை இன்றைய தலைமுறைக்கு எடுத்துரைக்க வேண்டும். எம்முடைய கலாச்சாரத்தின் மூலமாக எம்முடைய கலாச்சாரத்தை நாமே வளர்க்க வேண்டும்.

தற்காலத்தில் இன்றைய வளர்ந்து வரும் சமுதாயத்தை நோக்கும் போது கையடக்கத் தொலைபேசி, முகப்புத்தகம் (Face book) இந்த இரண்டும் கலாசாரத்தைச் சீரழிப்பதில் முக்கய பங்கு வகிக்கின்றன. இவ்விடயத்தில் தமது பிள்ளைகள் நன்மைக்காக இவற்றைப் பயன்படுத்துகின்றார்களா என்பதை முக்கியமாகப் பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். நவீன வளர்ச்சி என்ற போர்வையுல் தமிழர்களாகிய எம் கலாசாரம் சீரழிந்து கவலைக்கிடமான ஒன்றாகும்.புராதன காலம் தொடக்கம் தமிழர் பண்பாட்டில் முக்கியமாக ஆடைக்கு முன்னுரிமை வழங்க்கப்படுவது வழமை. பெண்கள் சேலை அணிவதும் ஆண்கள் வேட்டி உடுத்துவதும் வழமையாகக் கொண்டிருந்த காலம் மாறி இன்று பாவாடை, சட்டை, ஜீன்ஸ், ரீசேட் என அரைகுறை ஆடை அணியும் வெளிநாட்டுக் கலாசாரம் உட்புகுந்து சீரழிவை உருவாக்குகின்றமை யாவரும் அறிந்த விடயமே. தமிழ்ப் பெண்ணானவள் சேலையணிந்து, தலைக்குப் பூமாலை சூடிச நெற்றியில் பொட்டிட்டு செல்லும் அழகோ தனியழகு. ஏன் அந்த நிலை இன்று மாற வேண்டும் எல்லாவற்றிற்கும் எம் மனங்களே காரணமாகி விடுகின்றது. தமிழ்மொழிக்கு உள்ள தனித்துவம் போன்றே தமிழ்க் கலாசாரத்திற்கும் தனித்துவம் உண்டு. வெளிநாட்டிலிருக்கும் சில வெள்ளைக் காரப் பெண்களே எம்பண்பாட்டு ஆடையாள சேலை அணிவதில் மோகம் கொண்டு அணியும் போது எம் தமிழப் பொண்கள் அவர்களது ஆடைகளில் மோகம் கொள்வதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்.

நவீன கலாசார வளர்ச்சி உலக மட்டில் வியாபித்திருக்கின்ற நேரத்தில் எம்மை நாம் வளர்த்துக் கொள்வதில் ஆர்வமுடையவராகத் திகழவேண்டுமே யொழிய எம்மை நாமே அழித்துக் கொள்கின்ற அளவிற்கு புகழலிடம் கூடாது என்பதை மறந்து விடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உலகம் ஒரு நாடக மேடை - அதில்*
*நாம் நடிக்கின்ற கலைஞர்கள்"*

பாத்திரமேற்று நடிக்கும் போது எல்லோராலும் ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு எமது வேடங்களைப் புனைய வேண்டும். நிலையில்லாத இவ்வுலக வாழ்க்கையை வாழுகின்ற சொற்ப காலத்தில் எம்மை நாமே அழித்து விடுவது எந்தளவு நியாயமாகும்?

ஆகவே எல்லோராலும் விரும்பப்படுகின்ற தமிழ்க் கலாச்சாரத்தை மீண்டும் புதுப்பொலிவுறச் செய்து பார்ப்பவர்கள் கண்களுக்கு ஏளனப்பார்வை யால் வழி சொல்லாது. ஏற்றுக் கொள்ளும் பார்வையுடன் நடக்க எம்மை நாமே மாத்த முற்படுவோம். அழகிய தமிழ்ச்சமுதாயம் அழிந்திடாத தமிழ்ப்க் கலாச்சாரத்தை மீண்டும் எம்மிடையே நிலைபெறச் செய்வோம்.

**ஆக்கம்**
**ஆசிரியை யே. பிறின்சி**

## சர்வதேச கிரிக்கட் பேரவை (ICC) சம்பியன்கள் கிண்ண கிரிக்கெட் போட்டி

ஏழாவதும் இறுதியுமான ICC சம்பியன்கள் கிண்ண கிரிக்கட் போட்டி 2013 யூனில் இங்கிலாந்திலும் வேல்ஸிலும் நடைபெற்றன. 1988இல் வஜல்ஸ் சம்பியன் கிண்ணம் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டி மினிஉலகக்கிண்ண கிரிக்கட் போட்டிகள் எனவும் அழைக்கப்பட்டது.

4 வருடத்திற்கு ஒருமுறை உலகக்கிண்ண சர்வதேச ஒரு நாள் கிரிக்கட் போட்டிகளும் 2 வருடங்களுக்கு ஒரு முறை சர்வதேச கிரிக்கட் பேரவை 20- 20 கிரிக்கற் போட்டிகளும் நடைபெறுவதால் இப் போட்டிகள் இவ் ஆண்டுடன் முடிவுக்கு வருகின்றது. 1998ம் ஆண்டு நடைபெற்ற 1வது போட்டியில் தென் ஆபிரிக்க சம்பியனாகவும் 2009 அவுஸ்திரேலியாவும் சம்பியனாகியது இறுதிப் போட்டியில் இந்தியா சம்பியாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாடசாலையின் முன்னைய தோற்றம்



பாடசாலையின் தற்போதைய தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்தின் ஒளி

தென்னஞ்சோலைக் கிராமத்தில் ஸ்ராலினிற்கும் நாகம்மாவிற்கும் தவப்புதல்வனாக சுரேஸ் பிறந்தான். சுரேஸ் இளமையிலே புத்திசாலித்தனமாக வாழப்பழக் கொண்டார். இளமையிலே கற்கும் திறனும் சமூக நற்பழக்க வழக்கங்களும், சமய நம்பிக்கையும், பிறருக்கு உதவும் மனப்பாங்கும், அர்ப்பணிப்பு, தியாகம் நேர்மைத்திறன், போன்ற நற்பணிகளை பேணி வளர்த்தார்.

தென்னஞ்சோலை கிராமப் பாடசாலையில் கல்வி கற்ற சுரேஸ் உயர்கல்வியை ஆர்மணி என்னும் நகரப்பாடசாலையில் பொறியில் கல்வியைக் கற்றார். பொறியியல் கல்வியைக் கற்ற சுரேஸ் பல்கலைக்கழகம் சென்று கற்று பல்கலைக்கழக பொறியில் விரிவுரையாளரானார்.

தனது நாட்டிற்கும் தனது விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் உள்ள இடைவெளியை உணர்ந்த சுரேஸ் தனது நண்பர்களான சிவம், கணபதி போன்றவர்களின் உதவியுடன் விஞ்ஞான கழகத்தை ஆரம்பித்தார். ஆனால் அவனது நண்பர்கள் விஞ்ஞான கழகத்திற்குரிய பணத்தை மோசடி செய்தார்கள் அதுமட்டு அல்ல அந்தக் குற்றத்தை சுரேஸ் மீதே சுமத்தினார்கள்.

சுரேஸ் எதற்கும் அஞ்சாது திக்கற்றவர்களிற்கு தெய்வமே துணை என்று தனது விடாமுயற்சியைத் தொடர்ந்தார். தனது அறிவை மக்களின் நல்வாழ்விற்கு அர்ப்பணித்தார் இதனால் சுரேஸ் மீது அதிகாரிகளும், மக்களும் அதிகளவு நம்பிக்கை கொண்டனர். சுரேஸின் ஆர்வத்திற்கு நற்துணையாக அவனது நண்பனின் பிள்ளைகள் திறமையும், ஆற்றலும், நேர்மையும் உள்ளவர்களாக விளங்கினர். அவரின் எதிரிகள் எல்லாம் கடவுளின் அருளாளல் நலிவடைந்தனர். சுரேசும் நண்பனின் மகனான அருள்தாசும் விஞ்ஞானமற்றத்தின் ஊடாக இயந்திரங்களை உருவாக்கும் தொழிற்சாலையை நிறுவினர். தனது செலவையும் பிறரின் செலவையும் பொருட்படுத்தாது வியத்தகு தரமான இயந்திரங்களை உற்பத்தி செய்தார்கள் அதுபோல் உலகநாடுகளுடன் போட்டி போட்டுக் கூடிய அளவிற்கு விஞ்ஞான மன்றத்தில் உள்ள விஞ்ஞானிகள் இரவு பகல் பாராது அயராது நின்று உழைத்தனர். பின்தங்கிய சோனாநாடு விஞ்ஞான மன்றத்தினால் பொருளாதார வளர்ச்சியடைந்தது. சொனா நாட்டு ஜனாதிபதி அவருக்கு சிறப்பு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேஸ் தனது இயற்கைச் சூழல் தொழிற்துறையில் நச்சுத்தன்மை அதிகரித்து வருவதை உணர்ந்தார். அவர் நச்சுவாயுக்களை உறிஞ்சி சடப்பொருளாக மாற்றும் நுட்பத்தைக் கண்டுபிடித்தார் இதனால் அவர் சர்வதேச நோமல் பரிசைப் பெற்றார்.

சோனா நாட்டில் இருந்து விண்கலங்களை அனுப்பும் அளவிற்கு அவர் பெரும் ஆற்றலைப் பெற்றார். இதனால் சோனா நாட்டு மக்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால் அவரின் வளர்ச்சியை விரும்பாத பகைவர்கள் தர்க்கமற்ற வகையில் வதந்தியைப் பரப்பினர். சுரேஸ் தனக்கு இவ்வளவு ஆற்றலைத் தந்த இறைவனுக்கு நன்றிக்கடனாக ஆலயவளர்ச்சிக்கு பெரும் நிதியைச் செலவு செய்தார். இறைவனே காரணப் என்றுணர்ந்து ஆன்மீக செல்வனாக விளங்கினார்.

சுரேஸ“ நிலம் மாசடைவதைப் பற்றி கவலை மிகுந்தது அவரும் அவரது விஞ்ஞானிகளும் மாசடையாத பதினெட்டுப் பொருட்களை ஆய்வு செய்யும் போது தற்செயலாக மூலகம் ஒன்று வெடித்ததால் சுரேஸ் இறந்து விட்டார்.

குறவிருத்தி நாட்டில் பிறந்த சுரேஸின் அறிவு, ஆற்றலை கண்டு உலகமே வியந்தது. கிராமத்தின் ஒளி அணைந்தது சோனா நாடே துயரத்தில் ஆழந்தது.

**யாவும் கற்பனை**

**ஆக்கம்:- திரு. க. தர்மசீலன்**
**ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துள்ளித் திரிந்த பள்ளி நினைவுகள்

வயல் வரம்பு பாதை தாண்டி
தொடக்க கல்வி பயில
குமுழமுனை நல்பள்ளி
சென்றதை மறக்கவில்லை...
கைவிரல் சூப்பிக்கொண்டு
காகித கப்பல் விட்டதை
இன்னும் மறக்கவில்லை.....

ஊர் நண்பனும் - முன்பு
பள்ளித் தோழனுமான - "சுமன்"
இது பெரிய கச்சான்
சாப்பிடு மச்சான் - என்று
ஆமணக் கொட்டையை
சாப்பிடத் தந்து - தானும்
சாப்பிட எண்ணியதை
மறக்கவில்லை.....

[illegible] ஜோன்சனும் - நானும்
[illegible]க்குள் காலோட்டி
சைக்கிள் ஓட பழகுகையில்
நடு அச்சுடைந்து
எச்சிலால் ஒட்டியதை
இன்னும் மறக்கவில்லை....

கிளி/குமுழமுனை பள்ளியில்
ஆண்டைந்து படிக்கையிலே
ஆசிரியர் வேலை நான் பகர்த்து
நடேசமூர்த்தி அதிபரிடம்
சல் அடி வாங்கியதை
இன்னும் மறக்கவில்லை....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையிலும் என் படிப்பின்
வெறுமையிலும் விடா முயற்சியுடன்
என் அன்னை பள்ளி சென்றதை
இன்னும் மறக்கவில்லை......

ஒரு மடிப்பில் மூன்று தோசை
கட்டித்தந்த அம்மாவும் மோட்டார்
வண்டியில் பக்குவமாய் இறக்கிச் சென்ற அப்பாவும்
பயத்துடனே பள்ளி சென்றதையும் மறக்கவில்லை.....

நாச்சிக்குடாவில் பொம்பர் அடிக்க
குமுழமுனை பள்ளியில் இருந்த அதிபரும்,
ஆசிரியர்களும், நாமும் ஆயாமாரி
குளத்துக்குள் குத்துக்கரணம்
அடித்ததையும் மறக்கவில்லை.....

மதியநேர ஆங்கில வகுப்பை கட்டடித்து
கால்பந்தாடிய போது ஆசானால்
பனை மரத்தை கட்டிப்பிடித்து
நல்ல அடி வாங்கியதை மறக்கவில்லை....

குமுழமுனை பள்ளியுடன் - மூன்று
பள்ளிகள் பயின்று
பல்கலை கழகமும் சென்றுவர
நான் தேடிய நட்பெல்லாம் - இன்று
நாடெங்கும் சிதறி
கூடு கலைந்து வாழ்த்தி வர
அடித்தளம் இட்ட - என்
குமுழமுனை பள்ளிக்கு நன்றி கூறி
ஓங்கட்டும் ஒற்றுமை
எட்டட்டும் வெற்றிகள்
வாழ்க பல்லாண்டு
வளர்க வளர்க பள்ளித்தாயே!

**ப. லிடான் (றதன்)**
**கலைப்பட்டதாரி (BA)**
**குமுழமுனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் ஒரு ஆசிரியரின் வகிபங்கு

ஆசிரியர் தொழில் ரீதியான அர்ப்பணிப்பு, ஈடுபாடு, கௌரவம், விழிப்புணர்வு என்பவற்றைத்தானே தியாகம் செய்பவராகவும். அரசியல் நோக்கில் மட்டுமன்றி நல்ல மனிதராக நல்ல அயலவராக, நல்ல தந்தையாக நல்ல தாயாக விளங்குவதற்கு உதவுபவர் ஆசிரியரே ஆவார். நாட்டின் நற்பிரஜைகளை வளர்தெடுப்பதும் பயிற்றுவிப்பதும், கற்பிப்பதும் ஆசிரியரது மனப்பாங்காகவும் பணியாகவும் அமைகின்றது.

**ஆசிரியர்களால் மாணவர்களிற்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள்**

1) நற்பண்புகள்
2) இலகுவாக புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் மாணவர்களுக்கு கற்பித்தல்.
3) நண்பர்களை அறிமுகம் செய்து வைத்தல்.
4) சகல சிற்பக் கலைகளிலும் நிபுணனாக்குதல்
5) பாதுகாப்பு வழங்கல்.




ஆரிரியர் சமூகத்தை பிரதிநித்துவம் செய்யும் ஒருவர் அவர் ஒரு சொல்வளம், ஒரு நீதிபதி, ஓர் உதவியாளர், தீர்மானம் எடுப்பவர், இரகசியப் பரிசோதகர், ஒரு குழுத்தலைவர், பெற்றோர்களுக்காக செயற்படுபவர், நல்ல நண்பராவார். சமூக வாழ்க்கையில் அவன் வகுக்க வேண்டிய பங்குக்கு அவனை ஆயத்தம் செய்பவர் ஆசிரியர் பிள்ளைகளை அவர்களுடைய அறிவுசார் திறமைகளை அடிப்படை யாகக் கொண்டு தெரிவு செய்து வேறுபடுத்தி அவர்கள் ஆற்றவிருக்கும் சமூக மற்றும் தொழில் சார் பாத்திரங்களுக்கு ஆயத்தம் செய்பவராவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியான வகிபாகங்களைக் கொண்ட ஆசிரியர் தற்காலத்தில் புதிய மாற்றங்களை கருத்திற் கொண்டு கற்பிக்கவேண்டும். அதுமட்டுமன்றி இக்கால மாணவர்களுக்கு நிகழ்காலத்துடன் தொடர்புபடுத்தி அறிவை வழங்க வேண்டும். மாணவர் வளர்ந்த பின் வாழவிருக்கும் உலகுடன் தொடர்புபடுத்தல் தொடர்பான அறிவை ஊட்டுபவராக இருத்தல் வேண்டும்.

S. கிருபார்சினி,
ஆசிரியர்
கிளி/குமுழமுனை அ. த. க. பாடசாலை

**மத்தல சர்வதேச விமான நிலையம்:-**

இலங்கையின் 2 வது சர்வதேச விமான நிலையம் இதுவாகும். இது தென் மாகாணத்தில் ஹம்பாந்தோட்டை மாவட்டத் அமைக்கப்பட்டுள்ளது. 2013 மார்ச் 18ம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இந்த விமானநிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இச் சர்வதேச விமான நிலையத்தில் 3500அ நீளமும் 75.அடி அகலமும் கொண்ட விமான ஓடுபாதை விமானஅறை, பயணிகள், இறங்குதளம், என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாயிரம் ஹெக்டயர் நிலப்பரப்பில் இவ்விமான நிலையம் அமைக்கப் பட்டுள்ளது. உலகிலுள்ள மிகப்பெரிய விமானமான எயார்பஸ் 380 ரக விமான தலையிறக்க வசதியும் உள்ளது. இங்கு முதலாவது வெளிநாட்டு விமானமாக எயர் ஐரோப்பியாவுக்கு சொந்தமான இரு விமானங்கள் தரை இறக்கப்பட்டது அங்கிருந்து பயணாமாகின


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பக் கல்வி மாணவ மன்றம்



சமூக விஞ்ஞான மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் கொடை

மாற்று வலுவைப் படைத்தாலும்
இறைவன் அவர்கள் வாழ்வில்
பிறந்திட வேண்டுமென
வேற்றுத்திறமையை அளித்தான்.

மனிதனுக்கு ஊனம் என்றால்
உடலின் குறைகள் அல்ல
அது அவன் குணத்தில், மனதில் இருப்பது
எதையும் தாங்கும் இதயம் கொண்ட
இவர்கள் மலையை சரிக்கும்
வலிமையான மனம் படைத்த மானிடரே.

இயற்கை இவர்களது துணிவு
செயற்கை அவர்களது திறமை
இவர்கள் சாதனை வீரர்களே!
கொடிய போரின் பரிசுதான்
இறைவனின் இந்தக் கொடை

வாழ்க்கை ஒரு மோசமான ஆசிரியன்
தேர்வை நடத்தி விட்டுத்தான்
பாடத்தையே சொல்லிக் கொடுக்கிறது
கண் பார்வை அற்றவன் குருடன் அல்ல
தன் குற்றங்களை உணராதவனே குருடன்.

உள்ளத்தில் நம்பிக்கை இருந்தால்
கல்வியிலும் கடவுளை நீங்கள் காணலாம்
வாழ்வில் தேர்ச்சி அதிகம் வெற்றி குறைவு
என மனம் வருந்தாதே
செடியில் இலைகள் அதிகம் என்றாலும்
அதில் பூக்கும் ஒரு சில மலருக்கே
மதிப்பும் மணமும் அதிகம்.

ப. நிறோசா
அருட்சகோதரி
பல்கலைக்கழக மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகமே வாழ்வின் இயக்காற்றல்

மானிடனாய் பிறந்த மனிதன் ஒவ்வொருவனும் உடல், உள்ளம், ஆன்மா என்ற முக்கூட்டினால் வடிவமைக்கப்பட்டவன். இந்த மூன்றும் ஒருங்கிணைந்து செயலாற்றும் போது நல்போக்கும், தொலை நோக்கும், தெளிந்த பார்வையும், கொள்கைப்பிடிப்பும் கொண்ட மனிதனாக நாளும், பொழுதும் தன்னை உருமாற்றிக் கொள்கின்றான். இந்தநிலை மனிதனுள் அரைகுறையாக அமைவதால் உடலுக்கும், உறவுக்கும் அழியும் செல்வங்களுக்கும் அடிமையாகி வாழ்வின் இயக்கற்றலாகிய ஆன்மீகத்தை தொலைத்தவனாக வாழ்விழந்து மகிழ்விழந்து தவிக்கின்றான். தொலைந்து விட்ட ஆன்மீக இயக்காற்றலை மீள புதுப்பித்து வாழ இச் சிறிய சிந்தனைச் சிதறல்கள் உதவும் என நம்புகின்றேன்.

படைத்த பரம்பொருளோடும், தன்னோடும், தன்னைச்சூழஉள்ள மக்களோடும், உலகோடும் இப்பிரபஞ்சம் முழுவதோடும் தூய்மையான, கள்ளமற்ற உறவை வளர்த்து உறவாட உறைவிடமாக உந்துசக்தியாக அமைவது ஆன்மாவின் இயக்காற்றல் என்றால் அது மிகையாகாது.

சிறகொடிந்த பறவை பறக்க முடியாது. கண்ணிழந்தவன் காட்சி காண முடியாது. பார்க்க முடியாது, நீரினின்று வெளிவந்த மீன் உயிர்வாழ முடியாது. அப்படியே ஆன்மாவின் இயக்காற்றலை அறிந்து, உணர்ந்து அனுபவித்து அன்றாட வாழ்வாக்க முயற்சிக்காதவன் நிஜ வாழ்வை வாழ முடியாது மாறாக நடைப்பிணமாக உயிர் இருந்தும் வாழ்வற்றவனாக நடமாட முடியும்.

எல்லா மதங்களும் இந்த ஆன்மீகத்தின் இயக்காற்றலை பலவடிவங்களில் கோடிட்டுக் காட்டுகின்றன. திருவிலி வியத்தில் இயேசுபிரான் ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்தால் அவனுக்கு என்ன பயன்? (லூக் 9:25) என்று வலியுறுத்திக் கூறுகின்றார். இவ்வார்த்தைகள் நம் ஆன்மாவில் ஓங்காரமாக ஒலித்து எமது தேடல்களில் ஆன்மீக வாழ்விற்கு முதலிடம் கொடுத்து வாழ எம்மை தூண்டட்டும்.

திருவள்ளுவன் திருக்குறலில் "அருளுடைமை" இல241 ல் செல்வங்களுள் எல்லாம் சிறந்த செல்வம் அருளுடைமை ஆகிய செல்வமே, மற்றச் செல்வங்கள் அற்பர்களிடம் கூடக்கானகிடக்கும்" என்பதை அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம் பூரியார் கண்ணும்" உள என ஆணித்தரமாக எடுத்தியம்புகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்செல்வங்கள் என்ன? அன்பு அமைதி பொறுமை, கனிவு, கருணை, பொருமை, தாழ்மை, மன்னிப்பு, பகிர்வு தன்னடக்கம் இறைநம்பிக்கை, உண்மைநீதி போன்ற மனித நேயமுள்ள பண்புகளாகும். பொருட்செல்வம் என்ன? பணம், பட்டம், பதவி, புகழ், பெருமை, கௌரவம், சொத்து, சுகம் போன்றவையாகும். உலக வாழ்விலே கோடி. கோடியாக இவை அத்தனையும் குவிந்தாலும் அருட்செல்வமாகிய ஆன்மீக இயக்காற்றில் இருந்து புறப்படும் நற்பண்புகள் வாழப்படவில்லை என்றால் எம்வாழ்வு போலியானது. பொருளற்றது என்பதில் ஐயமில்லை.

எவனொருவன் பரம்பொருளாம் இறையோடு உறவாடி ஆன்மீக பயிற்சியும் முதிர்ச்சியும் பெறுகின்றானோ அவனே தன்னோடும் பிறரோடும் உலகோடும் இயற்கையோடும் உறவை வளர்க்கலாம். இந்நற்பண்புகளில் எல்லாம் தலைசிறந்தது அன்பே ஆகும். இதையே இந்து மதம் "அன்பே சிவம்" என்றும் கிறிஸ்தவ மதம் "அன்பே கடவுள்" என்றும் கூறி பரமார்த்தாவோடு உள்ளன்பு கொண்டுவாழும் உள்ளம் அன்பாக வாழ்ந்து அருள் அளிக்கும் வாய்க்காலாக வாழ வேண்டும் என்று விரும்புகின்றார்.

ஈறாக சமய சடங்காசாரங்கள் பக்திமுயற்சிகளோடு மட்டும் திருப்தி காணும் எம் ஆன்மீக வாழ்வைப் புதுப்பித்து ஆன்மீக இயக்காற்றல் மிக்க அருட்செல்வங்களால் எம் வாழ்வை மலரவைப்போம். பிறர் நலனில் அக்கறை கொள்வோம். பிரபஞ்சத்தைப் பாதுகாப்போம். நிறைவில் பரமார்த்தாவோடு சங்கமிப்போம்.

**சிஸ். லூமினா போல்ராஜா**
**தி. கு. கன்னியர்**
**குமுழமுனை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *My Country*

My country is Sri Lanka, It is an Island and it is in the indian ocean, It's capital is Colombo. There are nine provinces and twenty five districts in my Country. The Sinhalease. Tamil and Muslims are living in my country.

Sl exports tea, rubber coconut and spices. The staple food of the people is rice. SriLanka is a beautiful country. The Mahaweliganga is the longest siver in SriLanka. Tourists visit our country to see the beautiful sights and we earn a lot of money through tourism. The president of our country is Mr, Mahinda Rayapakcha. I love my country very much.

Name:- S. Siyany
Grade:- 09

# *Oh My Friend*

Oh my friend!
I am living for you
I love you than any one
Friend! you needs are my duties
I can give every thing for you
I want only one thing from you
That is place in your heart
You are a sweet Flower
Which blossom in this world?
To speread sweetness.

R. Thanga
Grade:- 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Mobile Phones*

A Mobile phone is a modern divice of communication. It has many functions. There are different kinds of mobile phones. Such as touch screen, vedio players music players Cameras, visual displayers. Internet explores etc. A mobile phone is a poitable device that one can take with him l her. where ever they go. The mobile phone at so the a calculater, stop watch, torch radio television calendar note pad and game playing devices.

In the modern scientific and technological development the mobile phone has become avery essentiol service to both young and old in recent times. However the mobile phones have many advantages and disadvantages when we speak about advantages. It is a device that can be used at any where and every where Message can be sent and received with in a very short time. And also the information around the world can be receved by using the internet it is also a helper to do the business easly and quickly now a days we can pay our current bill waterbill and other payments through the phones. Because the mobile phones give us a lot of advantages there are some disadvantages too.

Among the disadvantages. It is a waste of time for children and students because they chat on the face book and spend their fruitful time without aim not only they spend the time but also they lost their studies.

In this moden world mobile phones are used for illlegal activities for example threatening the people by miscalls and terrible sms. Students lose their concentration on studies and lose their life by using face book and misusing the phones.

There fore it has been revealed that the mobile phone is a barrier to the life of a child. If it is allowed to use without parents proper guidence. When we use these mobile phones in a proper way it gives us a lot of advantages so use the phones Properly and get benifits.

**Old Student**
**V. Dansika**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Sir Ponnambalam Arunachalam*

Sir Ponnambalam Arunachalam was born on 14th September 1853
He had his secondary Education at colmbo Acadamy.
He was a bright student
He had won a scholarship to cambridge university.
He wanted to be a lawyer
He retired in 1913
He was unhappy about the colonial Rulers.
He was wrote critical article
He wanted the mother tongue to be the stale Language.
He died on a th January 1904

T. Dinoj
Grade:- 08

# Seven Dangers to Human Virtue

1. **Wealth without work**
2. **Pleasure without conscience**
3. **Knowledge without character**
4. **Business without ethics**
5. **Science without humanity**
6. **Religion without sacrifice**
7. **Politics without principle**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவம்

குழந்தை பூமியிலே வந்து உதிக்கும் முன்பே தாயின் கருவறையில் கல்வியைக் கற்கத் தொடங்குகின்றது என்பது யாவரும் அறிந்த விடயமாகும். அந்த வகையிலே கருவறையில் இருக்கும் குழந்தை சூழலிலுள்ள ஒலிகள் மூலமும், தாயினது செயற்பாடு ரீதியான செயல்கள் மூலமும் கல்வியைப் பெற்றுக் கொள்கின்றது. கருவுற்றிருக்கும் தாய் சமயநூல்கள், அறநூல்கள், இலக்கியங்கள் மனதிற்கு மகிழ்வூட்டும் நூல்களைக் கற்பதன் ஊடாக குழந்தையும் நல்லெண்ணங்களைக் கொண்டதாகவும், நல்ல உளவிருத்தியை கொண்ட பிள்ளையாகவும் உருவாகின்றது. கருவறை யிலுள்ள குழந்தை அசைவதன் ஊடாக தனது உடற்பலத்தைப் பெறுகின்றது. இந்த அசைவின் மூலம் கைகளின் எலும்புகள் நன்கு விருத்தியடைந்து காணப்படும்.

பூரண மனித உடலைப் பெற்று பூமியிலே பிறந்த குழந்தையானது தனது சூழலிலே உள்ளவற்றை அறியத் தொடங்குகின்றது. ஒலிக்கேற்பத் துலங்குதல், வெளிச்சத்தைப் பார்த்தல், நிறங்களைப் பார்த்து இரசித்தல் போன்றவற்றினால் பிள்ளையின் கல்வி வளர்க்கப்படுகின்றது. சூழலில் உள்ளவர்களின் பேச்சுக்கள் மூலம் பிள்ளை மொழியைக் கற்கத் தொடங்குகின்றது. இதுவே மொழியைக் கற்கும் ஆரம்ப நிலையாக அமைகிறது. பிள்ளை வாயினால் சிறுசொற்களை உச்சரித்துக்கூறுவதன் மூலம் மனமகிழ்வும், நிறைவும் அடையும் போது குழந்தை சொற்றொட்களை பேசுகின்றது. பிள்ளை மண்ணில் விளையாடும் போது எழுத்துக்களை எழுதுவதற்கான தசைநார்ப்பயிற்சியைப் பெற்றுக் கொள்கின்றது. இவ்வாறு வளரும் குழந்தை மூன்று வயதை அடைந்ததும் முன்பள்ளியிலே சகபாடிகளுடன் சேர்ந்து பலவிதமான செயல்கள் மூலம் கற்கும் போது கற்கின்றேன் என்ற நிலையின்றி விளையாடுகிறேன் என்ற நிலையிலே மகிழ்வுடன் பல விடயங்களைக் கற்றுக் கொள்கின்றது.

ஐந்து வயது நிறைவடைந்ததும் ஆரம்பக் கல்வியை முறையாக கற்பதற்காக பாடாலைக்கு வரும் குழந்தையானது எழுத்துக்களை முறையாக எழுதவும், உச்சரிக்கவும் கற்கத்தொடங்குகின்றது. எழுதப்பழகுவதன் மூலம் குழந்தைகள் பாடங்களை வேகமாக கற்றுக் கொள்வதுடன் புதிய கருத்துக்களைச் சிந்திக்கவும், ஏற்கனவே கற்றவற்றை மனதில் இருத்திக் கொள்ளவும் நன்கு பயிற்சி பெறுகின்றன. கையெழுத்துக்கும் கல்விப் பயிற்சிக்கும் இடையில் ஆழ்ந்த தொடர்பு இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குழந்தை என்ன எழுதுகின்றான் என்பதல்ல எப்படி எழுதுகின்றான் என்பதே முக்கியமாகும். குழந்தை எழுதும் போது மூளையுடன் தொடர்புள்ள நரம்பு மண்டலம் தானாகவே செயற்படத் தொடங்குகின்றது. சுயமாக எழுதும் போது எழுத்தின் வடிவத்தை மனதில் வாங்கிக் கொண்டு அதை எங்கே ஆரம்பிப்பது, எப்படி வளைப்பது, எங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போய் முடிப்பது என்பதையெல்லாம் சுயமாக தீர்மானிப்பதால் சுதந்திரமும் அதிகம். சிந்தனையும் அதிகம், செயலும் அதிகமாகும். முதல் முறையாக பார்த்து எழுதும் போதோ, வரையும் போதோ அப்படியே அச்சு அசலாக இருக்காது. சில வேறுபாடுகள் இருக்கும் அந்த வேறுபாடுகள் தான் கற்றுக்கொள்வதற்கு வழியாக மாறுகின்றது. எழுத்தைச் சரியாக வரைய முடியவில்லையே என்று தோன்றியதும், எழுத்தின் வடிவத்தைக் கூர்ந்து கவனிக்கவும், எழுதும் முறையைக் கற்றுக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இது கவனித்தல், கற்றல் நிலையில் வைத்திருத்தல் ஆகிய பயிற்சிகளை ஒருங்கே அளிக்கிறது. ஓர் எழுத்தை முதன் முறையில் எழுதும் போது அப்படியே எழுத வராது என்பதால் குழந்தைகள் திரும்ப திரும்ப எழுதிப் பார்த்து அதன் வடிவத்தை அப்படியே கொண்டுவர மூளை உதவுகிறது.

இப்படியே பயிற்சி செய்வதன் மூலம் குழந்தை எழுத்தை சரியான முறையில் எழுதப்பழகுகின்றது. எழுத்துக்களின் ஒலியை உச்சரித்தபடி எழுதுவதன் மூலம் சொற்களை சரியாக எழுதுவதுடன் அதிக வேகத்துடனும் எழுதப்பழகுகினறது. எழுத்துக்களுக்குரிய ஒலியை சரியான முறையில் இனங் கண்டு அதனை உரிய முறையில் வாசிக்கவும் பழகுகின்றது. இக்குழந்தை களுக்கு கல்வியைப் புகட்டும் ஆசான்கள் ஆசான்களாக மட்டு மல்லாது தாயாக, தாதியாக தோழராக அவர்களுடன் அன்பு காட்டி கல்வியை விளையாட்டு மூலமாகவும் செயற்பாட்டு மூலமாகவும் ஊட்டுகின்றார்கள்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்பதற்கு இணங்க குழந்தைகள் சிறுவயதிலேயே தான் கல்வியை பசும் மரத்து ஆணி போல் தமது உள்ளத்தில் பதிக்கும் காலமாகும். எனவே சிறுவயதில் முறையாக கல்வியைக் கற்பதன் மூலம் ஆரம்ப நிலையை த் தாண்டி மேல்நிலைக்குச் செல்லும் போது அவர்களின் திறமை அதிகரித்துக் காணப்படும். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பதது போல மனிதனின் கல்வியின் ஆரம்பநிலையே அவனை மேல் நிலைக்கு இட்டுச் செல்கின்றது என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

எனவே ஆரம்பக்கல்வியிலே குழந்தைக்கு உறுதுணையாக இருப்பவர்கள் தாயும், ஆசான்களுமேயாகும். மாடிக்கட்டத்திற்கு ஏறிச் செல்ல படிகள் எவ்வாறு உதவுகின்றதோ அதுபோல குழந்தை கல்வி நிலையில் மேலே செல்ல ஆரம்பக் கல்வியே ஏணியாக உதவுகின்றது. எனவே ஆரம்பக்கல்வியின் முக்கியத் துவத்தை உணர்ந்து முறையாக கற்பது சாலச் சிறந்ததாகும்.

**திருமதி. ஜெ. மகேஸ்வரன்**
**ஆசிரியை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்துமா மன்றம்



கிறிஸ்தவ மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகைக் கற்பாறையும் கடல் வாழ் சூழல் தொகுதியும்

உலகிலுள்ள மிகப்பயன் தரக்கூடிய சூழல் தொகுதியாக முருகைக் கற்பாறை சார்ந்த சூழற் தொகுதியைக் குறிப்பிடலாம். மத்தியகோட்டில் இருந்து வடக்கே 30 பாகை அகலக்கோட்டுக்கும், தெற்கே 30 பாகை அகலக்கோட்டுக்கும் இடைப்பட்ட வலயத்திலேயே இம் முருகைக்கற்பாறை விருத்தியடைகிறது. உலகில் 600000 சதுரகிலோ மீற்றர் வரையான பிரதேசம் முழுவதும் முருகைக் கற்பாறை பரவலாக இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

முருகைக்கற்பாறை ஆரம்பமாவது மிகச் சிறிய பொலிப் எனும் அங்கிகளின் மூலமேயாகும். இச்சிறிய உயிரி சமுத்திரத்தின் நீரில் மிதந்து கொண்டு இருக்கும் இவ்வாறு மிதக்கும் போது மிகவும் இறுக்கமாக கடினமான மேற்பரப்பு ஒன்று (உதாரணம் கற்பாறை) குறுக்கிடுமிடத்து அங்கு தங்கி வாழத் தொடங்கும் இப்பொலிப் அங்கியை முருகைக்கற்பாறையின் பெற்றோர் என அழைக்கலாம்.

இப்பொலிப்பு உயிரி இறந்து விட்டாலும் அதன் கூடுகள் எஞ்சியிருக்கும். அத்துடன் வேறு பொலிப்புகள் வளரத் தொடங்கும் இச்செயல் வருடக்கணக்கில் நடைபெறும் போது மிகப் பெரிய கடிமான கூடுதோன்றும். இவ்வாறு பல்லாயிரம் வருடங்களாக கோடிக்கணக்கான பொலிப்புகள் தம் கூட்டை நிர்மாணிப்பதன் மூலம் பாரிய அளவிலான வெளி கடினமான கூடு தோன்றுகிறது. இக்கடினமான கூட்டையே “முருகைக் கற்பாறை” என்கிறோம்.

உலகில் இருக்கும் அனைத்து கடலிலும் முருகைக் கற்பாறை தோன்றுவதில்லை முருகைக் கற்பாறையின் விருத்திக்கும் பொருத்தமான விசேட சுற்றாடல்தொகுதி உள்ள சமுத்திரங்களில் மட்டுமே முருகைக் கற்பாறை விருத்தியடையும். இவ் விசேட சூழல் தேவைகள் என்ன என்பது கீழே தரப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சமுத்திர நீரின் வெப்பநிலை 20% - 30% பாகைக்கு இடைப்பட்டதாக இருத்தல்.

❖ சமுத்திர நீரின் உப்புச் செறிவு ஆயிரத்துக்கு 30% - 35% என மாறாமல் இருத்தல்.

❖ சிறந்த முறையில் சூரியஒளி சமுத்திரத்தின் அடியின் விழ வேண்டும்.

❖ தெளிவான நீர் அவசியம்.

❖ சமுத்திரத்தின் அடிப்பரப்பு பொலிப்புகள் உயிர் வாழ்வதற்குப் பொருத்தமான சூழலாக இருத்தல் வேண்டும்.

முருகைக் கற்களின் தன்மை தோற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் பல வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றில் பிரதானமானவைகள் சில கீழே தரப்படு கின்றன.

1) கனமான மேற்பரப்பில் வளரும் வெளிக்கூட்டை அமைத்துக் கொள்ளும் முருகைக்கற்கள்.
2) வெளிக்கூட்டை அமைத்துக் கொள்ளாத மிருதுவான முருகைக்கற்கள்
3) கடல் அனிமனி, ஜெலிமீன் மாற்றம் ஹைட்ரொய்ட்.

முருகைக்கல் பாறைகள் அவற்றின் அமைவிடத்தின் அடிப்படையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன.

விளிம்புப் பாறை (Fringing REEF)

தடுப்புப் பாறை (Barrier Reef)

அத்தோல் பாறை (Atolls)

முருகைக்கல் சார்ந்த தாவரங்களையும் விலங்குகளையும் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

முட்டுக்காலும் வெளிகடின உள்ள விலங்குகள் 'Crustaces" இவ் விலங்குகளாக நண்டு, இறால் மற்றும் சிங்கி இறால் போன்றவை. சிப்பிகள் மற்றும் சங்குகள் 'shells and Conchs" ஒற்றை ஒடு, இரட்டை தலைப்பு ஒடுகளைக் கொண்ட சிப்பிகள் மற்றும் சங்குகள் முருகைக் கற்பாறையைச் சார்ந்து வாழ்கின்றன.

❖ **கடல் பஞ்சு 'Sponges"**

உயிருள்ள ஸ்பொன்களை கற்பாறை சார்ந்த பிரதேசங்களில் காணலாம். குழாய் கடற்பஞ்சு, சாடிகடற்பஞ்சு, பற்றை கடற்பஞ்சு, முடகடற்பஞ்சு, செந்தணல் கடற்பஞ்சு என்பன வாழ்கின்றன.

❖ சிறு நுண்ணுயிர் தாவரங்கள் மற்றும் விலங்குகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ முருகைக்கற்பாறை சார்ந்த மீன்கள் ஏராளம் இருக்கின்றன. இவை மிகச் சிறிய அளவிலும் பல அடிநீளத்திலும் காணப்படுகின்றன. கிரணம், அம்புஸ்ஸா, கிளிமீன், திமிலைமீன், கோட்பிஸ், சீலா, விலாங்கு, தட்டுவக் காலி மீன் என்பன அவற்றுள் சிலவாகும்.

முருகைக் கற்பாறை சார்ந்த பிரதேசங்களில் முருகைக்கற்கள் மட்டுமல்லாத பல்வேறு கடல்வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன அதாவது முருகைக் கற் பாறை சார்ந்த சூழல் பல்வேறு வகை தாவரங்களுக்கும், நுண்ணுயிரி களுக்கும் வாழிடம் உணவு மற்றும் பாதுகாப்பு அளிக்கின்றது.

### முருகைக்கற்பாறை சார்ந்த உணவுச் சங்கிலி

❖ சூரியஒளி நேரடியாக இச் சூழற் தொகுதிக்கு சக்தி வழங்குகிறது.

❖ நீரோட்டத்தின் மூலம் விலங்குகள், தாவரங்கள், உணவுகள் எடுத்து வரப்படுகின்றன.

❖ நுன் தாவரங்களும், விலங்குகளும், சூரியஒளி மற்றும் நீரோட்டத்தின் மூலம் வழங்கப்படும் போசனைப் பொருட்களைப் பெற்று வளர்ச்சியடைகின்றன.

❖ இவ் நுன் தாவரங்களை உணவாக கொள்ளும் மீன்கள் இறால், நண்டு போன்றன இங்கு வாழ்கின்றன.

❖ இவ் உணவுச் சங்கிலியின் இறுதியாக இருப்பவன் மனிதன். எந்த வகையில் மனிதனுக்கு முருகைக் கற்பாறை பயன்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

## இலங்கையில் முருகைக் கற்பாறையின் பரம்பல்

இலங்கையும் வெப்ப வலயத்தில் உள்ள தீவாக இருப்பதால் முருகைக் கற்பாறைகளின் விருத்திக்கு உகந்த சுற்றாடல் நிலைமைகள், இலங்கையின் கடல் எல்லையை சூழவுள்ள பிரதேசங்களில் காணமுடியும். இவற்றில் பெருமளவில் காணப்படும் பிரதேசங்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | ஹிக்கடுவை | - மாத்தறை கடற்கரையோரம் |
| 2) | தங்கல்ல | - ரெக்காவ கடல் எல்லை |
| 3) | பணிச்சண்கேணி | - பனிச்சன்கேணி வாகரை |
| 4) | பாசிக்குடா | - கல்குடா பிரதேசம் |
| 5) | நிலாவெளி | - குச்சவெளி கடற்கரை பிரதேசம் |
| 6) | பருத்தித்துறை | - காரைநகர் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சூழவுள்ள தீவுகள் |
| 7) | மன்னார் | - கற்பிட்டி கடற்கரை பிரதேசம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முருகைக் கற்பாறையின் முக்கியத்துவம்**

1) பல்வேறு மீன் இனங்கள், இறால், சிங்கி இறால் உட்பட பல்வேறுபட்ட நீர் வாழ் இனங்களுக்கு உணவு மற்றும் வாழ்விடம் வழங்கும் முக்கிய தொகுதியாக தொழிற்படுகின்றது.
2) மீன் உற்பட பல்வேறு அங்கிகளின் இனப்பெருக்கத்துக்குப் பொருத்தமான சூழலாகச் செயற்படுகிறது.
3) கடலரிப்பைத் தடுக்கும் ஒரு இயற்கைக் காரணியாகத் தொழிற்படுகிறது.
4) மீன்பிடிப்பதற்கு பொருத்தமான பிரதேசம்
5) இயற்கை அழகைத் தருகிறது.
6) மண்ணின் அமிலத் தன்மையைக் குறைக்கும் ஒரு இரசாயனப் பொருளாகப் பயன்படுகிறது.
7) லியுக்கேமியா மற்றும் புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் பெரும்பாலான மருந்துகளைப் பெற்றுக் கொள்ளல்.
8) சுற்றுலா மற்றும் அந்நிய செலாவணியைத் தேடித் தருகிறது.
9) எதிர்கால ஆராய்ச்சிகளுக்கு நீர்வாழ் அங்கிகளின் கணக்கெடுப்பு பிரதேச மாகப் பயன்படுத்தவும் முக்கியமானது.

## முருகைக்கற்பாறை தேசமடைவதற்கான காரணிகள்

மனிதன் தன் தனிப்பட்ட நன்மையை மட்டுமே கருதி செயற்படுவதனால் முருகைக்கற்பாறைகளுக்கு ஏற்படும் பாதிப்பு இயற்கையால் ஏற்படும் பாதிப்பு களைவிட பாரதூரமானதாகும்.

❖ **தவறான முறையில் மீன்பிடித்தல்**
டிஸ்கோவலை, மொக்ஸிவலை, கடலடிப்பரப்பை வளமாகக் கொண்டு செல்லக் கூடிய வலைகள் வெடிப்பொருட்கள் என்பவற்றை பயன்படுத்தி மீன் பிடித்தல்.

❖ முருகைக்கற்பாறையை சுண்ணாம்பு பெறுவதற்காகவும் நினைவுச் சின்னமாக வைத்துக் கொள்ள உடைத்தல்.

❖ கடல்சார்ந்த கரையோரப் பிரதேசங்களில் தும்புக்கைத்தொழில் செய்வதற் காக தென்னை மட்டைகளை ஊறப்போடுவதனால் கடல் நீர் மாசடைதல்.

❖ இயந்திரப்படகுகளை நிறுத்த நங்கூரம் பயன்படுத்தல்.

❖ காடு அழிப்பதனால் நதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது சேறுகளினால் பாதிக்கப்படுதல்.

❖ நட்சத்திர மீன் என அழைக்கப்படும் உயிரினம் பொலிப்புகளை உணவாக உட்கொள்ளல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகைக் கற்பாறைகளைப் பேணல்

உலக நாடுகளில் முருகைக் கற்பாறைகளை அழிவில் இருந்து பாதுகாக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவையாவன

- ❖ மலேசியா தேய்ந்து போன டயர்களை ஆழம் குறைந்த கடற்பிரதேசத்தில் பாறை போன்று பரப்பி அதன் மேல் செயற்கையாக முருகைக் கற்பாறை வளர்ச்சியடைய வாய்ப்பளிக்கின்றது.
- ❖ இன்னும் சில நாடுகள் பழைமையான கப்பல்களை கடலில் மூழ்கச் செய்து முருகைக்கற்பாறை வளர இடமளிக்கின்றன.
- ❖ இலங்கையில் 1979ம் ஆண்டு முதல் ஹிக்கருவை பிரதேசத்தில் 110 ஏக்கர் பரப்பில் சமுத்திர சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்களை அறிமுகம் செய்தல்.
  1981 ஆம் ஆண்டில் 57ஆம் இலக்க கரையோரம் பேணல் சட்டம்
  1983 ஆம் ஆண்டில் 64ஆம் இலக்க கரையோரம் பேணல் மறுசீரமைப்பு

## தற்போதுள்ள பாதுகாப்பு வலயங்கள்

- ❖ ஹிக்கருவை தேசிய பூங்கா - ஹிக்கருவை
- ❖ தடைவேலி கடலககாவலிடம் - கற்பிட்டி
- ❖ உள்நாட்டு தேசிய பூங்கா - நிலாவெளி
- ❖ ருமாலை கடலக காவலிடம் - ருமாலை

மனிதனுக்குப் பொருளாதார ரீதியாக பெரும் பயன்களைப் பெற்றுத் தரும் முருகைக் கற்பாறை சார்ந்த கடற்பிரதேசம் இன்னுமொரு வகையில் தன் இயற்கை அழகின் மூலம் மனத்திருப்தியையும் மனமகிழ்ச்சியையும் பெற்றுத் தருகிறது. மேலும் இது கடல்வாழ் உயிரினங்களுக்கு பாதுகாப்பு வழங்கி சிறந்த சூழல் தொடர்புகளைக் கட்டியெழுப்புகிறது. எனவே இந்த வளத்தை முறையாகக் கையாளாவிட்டால் நமக்கும் கிடைத்துள்ள அளப்பரிய ஒரு இயற்கை வளத்தை இழந்துவிட நேரிடலாம்.

**திரு. ஜெ. நிஷாகர்**
(BA. Dip. in. Te. PGDE)
**சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்**
**(சமுகவிஞ்ஞானம்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசு பெறுவோர் விபரம் - 2010 - 2013

## தரம்– 02

| | | | |
|---|---|---|---|
| 01) | து. துவாரகன் | 2013 | கணிதம், சுற்றாடல், சமயம் |
| 02) | சு. இளநிலவன் | 2013 | அதிகூடிய வரவு |
| 03) | ம. ஜென்சிகா | 2013 | தமிழ் |

## தரம் – 03

| | | | |
|---|---|---|---|
| 01) | ம. கிறிஸ்ரிகா | 2012 | அதிகூடிய வரவு |
| | | 2013 | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் |
| 02) | வி. சுஜீபா | 2012 | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், அதிகூடிய வரவு |
| | | 2013 | அதி கூடிய வரவு |

## தரம் – 04

| | | | |
|---|---|---|---|
| 01. | ந. நிசாந் | 2011 | தமிழ், சுற்றாடல், சமயம் |
| | | 2012 | சமயம், அதிகூடிய வரவு |
| | | 2013 | சமயம் |
| 02) | மு. எழிலழகன் | 2012 | தமிழ் |
| | | 2013 | சுற்றாடல், தமிழ் |
| 03) | றோ. றோனால்டன் | 2011 | அதி கூடிய வரவு |
| | | 2013 | கணிதம் |
| 04) | து. கிந்துஜா | 2011 | கணிதம் |
| | | 2012 | கணிதம், சுற்றாடல் |
| 05) | கு. யாழினி | 2013 | ஆங்கிலம் |
| 06) | ச. தமிழ்நிலா | 2013 | அதிகூடிய வரவு |

## தரம் – 05

| | | | |
|---|---|---|---|
| 01) | சு. கீரன் | 2010 | சமயம், அதிகூடிய வரவு |
| | | 2011 | கணிதம், சுற்றாடல் |
| | | 2012 | கணிதம், தமிழ், அதிகூடிய வரவு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 02) ர. சாருஜன் | 2010 | தமிழ் |
| | 2011 | அதிகூடிய வரவு |
| | 2012 | அதிகூடிய வரவு |
| | 2013 | அதிகூடிய வரவு |
| 03) றோ. றோமில்டன் | 2010 | கணிதம் |
| | 2011 | சமயம் |
| | 2012 | சமயம், சுற்றாடல் |
| 04) சு. சபின்சலா | 2010 | சுற்றாடல் |
| | 2011 | தமிழ் |
| 05) ர. தனுசா | 2012 | தமிழ், ஆங்கிலம் |
| | 2013 | சமயம், அதிகூடிய வரவு |

## தரம் – 06

| | | |
|---|---|---|
| 01) க. கஜதீபன் | 2011 | ஆங்கிலம் |
| 02) ப. டினோஜன் | 2012 | தமிழ், சமயம் |
| | 2013 | சமயம் |
| 03) அ. தமிழவன் | 2011 | அதிகூடிய வரவு |
| | 2012 | ஆங்கிலம் |
| | 2013 | ஆங்கிலம், அதிகூடிய வரவு |
| 04) த. டிஷான் | 2010 | அதிகூடிய வரவு |
| 05) அ. அசோக்குமார் | 2012 | அதிகூடிய வரவு |
| 06) யோ. ஜெனுப்பிரியா | 2010 | கணிதம், சுற்றாடல், சமயம் |
| | 2011 | சமயம், கணிதம், தமிழ், சுற்றாடல் |
| | 2012 | சமயம், கணிதம், சுற்றாடல் |
| | 2013 | தமிழ், கணிதம், சுற்றாடல் |
| 07) யோ. ஜெதுப்பிரியா | 2010 | தமிழ் |

## தரம் – 07

| | | |
|---|---|---|
| 01) பு. ஜெறோசன் | 2013 | அதிகூடிய வரவு |
| 02) அ விதுசா | 2010 | சமயம், கணிதம், தமிழ், சுற்றாடல் |
| | 2011 | தமிழ், கணிதம், சமயம், ஆங்கிலம், அதிகூடிய வரவு |
| | 2012 | தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சமயம். |
| | 2013 | சமயம், தமிழ், கணிதம், வரலாறு, ஆங்கிலம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 03) | சி. யதுசனா | 2010 | ஆங்கிலம் |
| | | 2012 | அதிகூடிய வரவு |
| 04) | யே. டினோஜா | 2011 | சுற்றாடல் |
| 05) | க. கயல்விழி | 2010 | அதிகூடிய வரவு |

தரம் - 08

| | | | |
|---|---|---|---|
| 01) | வி. சுஜீபன் | 2010 | ஆங்கிலம், அதிகூடிய வரவு |
| | | 2013 | வரலாறு |
| 02) | வி. டனுஜன் | 2013 | ஆங்கிலம் |
| 03) | சு. கிதுஜனா | 2010 | தமிழ், கணிதம், சமயம், சுற்றாடல் |
| | | 2012 | சமயம், கணிதம், வரலாறு |
| | | 2013 | விஞ்ஞானம் |
| 04) | நா. மரியபியோறினா | 2011 | தமிழ். கணிதம், சுற்றாடல் ஆங்கிலம், சமயம். |
| | | 2012 | தமிழ் |
| | | 2013 | சமயம், தமிழ், கணிதம் |
| 05) | ம. மதிநிலா | 2011 | அதிகூடிய வரவு |
| | | 2013 | அதிகூடிய வரவு |
| 06) | கே. டிசாந்தினி | 2011 | அதிகூடிய வரவு |
| 07) | ந. திசாளினி | 2012 | அதிகூடிய வரவு |

## தரம் – 09

| | | | |
|---|---|---|---|
| 01) | ப. பாலசுதன் | 2011 | வரலாறு, அதிகூடிய வரவு |
| | | 2012 | சமயம், வரலாறு |
| | | 2013 | சமயம் |
| 02) | பா. கிரிசாந்தன் | 2012 | அதிகூடிய வரவு |
| 03) | த. டிலான் | 2012 | அதிகூடிய வரவு |
| 04) | சி. சியானி | 2010 | தமிழ், கணிதம், சுற்றாடல் சமயம், அதிகூடிய வரவு |
| | | 2012 | கணிதம், ஆங்கிலம் |
| | | 2013 | தமிழ், கணிதம்,விஞ்ஞானம், வரலாறு, அதிகூடிய வரவு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 05) ர. தங்கா | 2010 | ஆங்கிலம் |
| | 2011 | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் |
| | 2012 | தமிழ், விஞ்ஞானம் |
| | 2013 | ஆங்கிலம் |

## தரம் - 09ஜ நிறைவு செய்து வெளியேறிய மாணவர்களில் பரிசு பெறுவோர்

| | | |
|---|---|---|
| 01. ர. பிரசன் | 2010 | சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, அதிகூடிய வரவு |
| | 2011 | சமயம், தமிழ், வரலாறு, அதிகூடிய வரவு |
| | 2012 | அதிகூடிய வரவு |
| | 2013 | சமயம், தமிழ், வரலாறு, அதிகூடிய வரவு |
| 02) அ. அருண் பிரபாகர் | 2010 | தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு |
| 03) றா. நிர்மலதாஸ் | 2011 | தமிழ், கணிதம், வரலாறு அதிகூடிய வரவு |
| | 2012 | கணிதம் |
| 04) யோ. மேரிஜெனிஸ்ரா | 2010 | தமிழ், விஞ்ஞானம், வரலாறு |
| | 2012 | சமயம், தமிழ், விஞ்ஞானம், அதிகூடிய வரவு |
| 05) வி. டன்சிகா | 2010 | சமயம், கணிதம், ஆங்கிலம் அதிகூடிய வரவு |
| 06) மு. விஜேந்தினி | 2010 | தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, அதிகூடிய வரவு |
| | 2011 | சமயம், கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம், வரலாறு |
| 07) த. குயின்சனா | 2012 | வரலாறு |
| 08) இ. சிந்துஜா | 2010 | அதிகூடிய வரவு |
| 09) ஞா. சிறிதா | 2010 | அதிகூடிய வரவு |
| 10) ஞா. சிந்துஜா | 2011 | அதிகூடிய வரவு |
| 11) க. தவயோகினி | 2011 | அதிகூடிய வரவு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில தினப் போட்டி

யோ. மேரி ஜெனிஸ்ரா தரம் - 09 Copy Writing மூன்றாம் இடம் - 2012

செ. பிரதீப் , ம. கிறிஸ்ரிகா,
வி. சன்சிகா, ய. பிரியங்கா
மு. தர்ஷிாயினி
து. கிந்துஜா, வி. கிந்துஷா
யோ. றோனால்டன்
கு. யாழினி, பு, ஜெனோசா
ச. வினித், தோ. டினுசன்
க. மலர்க்கொடி, மு. எழிலழகன்
நா. திஷாந், த. டிமாலன்
சி. டனுசிகன், ஜெ. ரிலுசன்

தரம் - 01 Group Singing இரண்டாம் இடம் 2012

## தமிழ்மொழித்தினப்போட்டி

| | | | |
|---|---|---|---|
| யோ. ஜெனுப்பிரியா | தரம் - 05 | பாவோதல் | மூன்றாம் இடம் - 2013 |
| வே. பிரசாந்தினி | தரம் - 08 | பாவோதல் | மூன்றாம் இடம் - 2013 |
| ர. தனுசா | தரம் - 03 | பேச்சு | மூன்றாம் இடம் - 2013 |
| றோ. றோமில்டன் | தரம் - 02 | திருக்குறள் | இரண்டாம் இடம் - 2011 |
| த. சுதர்சினி | தரம் - 09 | திருக்குறள் | இரண்டாம் இடம் - 2011 |
| ர. தங்கா | தரம் - 06 | திருக்குறள் | இரண்டாம் இடம் - 2011 |
| ர. தனுசா | தரம் - 03 | திருக்குறள் | இரண்டாம் இடம் - 2012 |
| ம. கிறிஸ்ரிகா | தரம் - 02 | திருக்குறள் | இரண்டாம் இடம் - 2013 |

## மெய்வன்மைப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| ம. மதிநிலா | தரம் - 05 | உயரம் பாய்தல் | முதலாம் இடம் - 2011 |
| அ. அன்ரனிறெக்ஸ் | தரம் - 05 | உயரம் பாய்தல் | மூன்றாம் இடம் - 2011 |
| ஞா. டிலான் | தரம் - 08 | 200அ ஓட்டம் | இரண்டாம் இடம்- 2013 |

## நூலக வாரம்

| | | | |
|---|---|---|---|
| சி. சியானி | தரம் - 07 | கட்டுரை | மூன்றாம் இடம் - 2012 |
| யோ. மேரிஜெனிஸ்ரா | தரம் 09 | கட்டுரை | முதலாம் இடம் - 2012 |
| சி. சியானி | தரம் - 08 | பொது அறிவு | முதலாம் இடம் - 2013 |
| ர. தங்கா | தரம் - 08 | பொது அறிவு | இரண்டாம் இடம் - 2013 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| றா. மரிய பியோரினா | தரம் - 08 | பொது அறிவு | மூன்றாம் இடம் - 2013 |
| ர. தங்கா | தரம் - 08 | சுவரொட்டி | மூன்றாம் இடம் - 2013 |
| சி. சியானி | தரம் - 08 | சுவரொட்டி | மூன்றாம் இடம் - 2013 |

## காவேரி மன்றம்

| | | | |
|---|---|---|---|
| சி. சியானி | தரம் - 08 | கட்டுரை | முதலாம் இடம் - 2013 |
| ர. தங்கா | தரம் - 08 | கட்டுரை | இரண்டாம் இடம் - 2013 |
| அ. விதுசா | தரம் - 06 | கட்டுரை | இரண்டாம் இடம் - 2013 |
| ம. மதிநிலா | தரம் - 06 | கட்டுரை | மூன்றாம் இடம் - 2013 |

## சித்திரப்போட்டி

| | | | |
|---|---|---|---|
| சூ. கிதுஜனா | தரம் - 07 | சித்திரப்போட்டி | முதலாம் இடம் - 2013 |
| செ. பிரிந்தா | தரம் - 05 | சித்திரப்போட்டி | முதலாம் இடம் - 2013 |
| க. பௌஸ்ரீனா | தரம் - 05 | சித்திரப்போட்டி | இரண்டாம் இடம் " |
| கு. சயந்தன் | தரம் - 08 | சித்திரப்போட்டி | மூன்றாம் இடம் - " |
| ர. தங்கா | தரம் - 08 | சித்திரப்போட்டி | இரண்டாம் இடம் - " |
| கு. சோபிகா | தரம் - 09 | சித்திரப்போட்டி | இரண்டாம் இடம் - " |

## கோட்ட மட்ட போட்டிகள்

ரா. மரிய பியோரினா தரம் - 04 விரைவுகணிதம் முதலாம் இடம்- 2010

## சித்திரப்போட்டி

சு. கீரன் தரம் - 03 ஆக்கம் மூன்றாம் இடம் - 2012

## சமூக விஞ்ஞானப் போட்டி – கோட்ட மட்டம்

| | | |
|---|---|---|
| சி. சியானி | தரம் - 06 | முதலாம்இடம் - 2011 |
| மு. விஜேந்தினி | தரம் - 09 | முதலாம் இடம் - 2011 |
| அ. அனுஸ்ரா | தரம் - 09 | இரண்டாம் இடம் - 2011 |
| சூ. கிதுஜனா | தரம் - 06 | முதலாம் இடம் - 2012 |
| ப. பாலசுதன் | தரம் - 07 | இரண்டாம் இடம் - 2012 |
| சி. சியானி | தரம் - 07 | மூன்றாம் இடம் - 2012 |
| யோ. மேரி ஜெனிஸ்ரா | தரம் - 09 | முதலாம் இடம் - 2012 |
| த. குயின்சனா | தரம் - 09 | இரண்டாம் இடம் - 2011 |
| சி. சியானி | தரம் - 08 | முதலாம் இடம் - 2013 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக விஞ்ஞான போட்டி மாவட்ட மட்டம்

| | | |
|---|---|---|
| சி. சியானி | தரம் - 06 | இரண்டாம் இடம் - 2011 |
| மு. விஜேந்தினி | தரம் - 09 | இரண்டாம் இடம் - 2011 |
| சி. சியானி | தரம் - 08 | முதலாம் இடம் - 2013 |

## எமது பாடசாலையில் ஆரம்பக்கல்வியினைக் கற்று உயர்கல்வி கற்றோர் விபரம்

### பல்கலைக்கழகம்

01) செல்வநாயகம் - கஜன்
02) பத்மசேனன் லிடான் ரியூடர்
03) யேசுதாசன் றாகினி
04) பத்மசேனன் - நிறோசா

### கல்வியியற் கல்லூரி

01) திருமதி. சுபாகரன் ஜெயரஜனி
02) திருமதி பிரபாகரன் சந்திரிக்கா
03) திரு. மரியஹேமசூரியா திசறூபன்
04) செல்வி நவரட்ணம் யாழினி

## எமது பாடசாலையின் மன்றங்களும் உறுப்பினர்களும்

### இடைநிலை மாணவர் மன்ற நிர்வாகக் குழு

தலைவர் :- சு. கதிர்மகன் — உப தலைவர் :- த. டிலான்
செயலாளர் :- சி. சிஜானி — உப செயலாளர் :- ர. தங்கா
பொருளாளர் :- வி. டனுஜன்

| | | | |
|---|---|---|---|
| யோ. ஜெனுப்பிரியா | தரம் - 06 | மதிநிலா | தரம் - 08 |
| அ. விதுஷா | தரம் - 07 | இ. ஜெயகஸ்தூரி | தரம் - 09 |

### ஆரம்பக் கல்வி மாணவர் மன்றம்

தலைவர் :- றோ. றோமில்டன் — உப தலைவர்:- சுமன் கிதுசன்
செயலாளர்:- ர. தனுஷா — உப செயலாளர்:- சபின்சலா

| | | | |
|---|---|---|---|
| யோ. அபினா | தரம் - 01 | சூ. தமிழ்நிலா | தரம் - 02 |
| வி. சுஜீபா | தரம் - 03 | ந. திஷாந் | தரம் - 04 |
| ற. சாருஜன் | தரம் - 05 | | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ மன்றம்

| | | | |
|---|---|---|---|
| தலைவர்:- | இ. கஸ்தூரி | உப தலைவர்:- த. டிலான் | |
| செயலாளர்:- | ப. பாலசுதன் | உப செயலாளர்:-ச. மரிஸ்ரெலா | |
| பொருளாளர்:- | ஜே. டினோஜா | | |
| யோ. ஜெனுப்பிரியா | தரம் - 06 | ச. சாளினி | தரம் - 07 |
| றா. மரிய பியோரினா | தரம் - 08 | த. சுகிந்தினி | தரம் - 09 |

## சமூக விஞ்ஞான மன்றம்

| | | | |
|---|---|---|---|
| தலைவர்:- | த. டினோஜ் | உப தலைவர்:- சி. சியானி | |
| செயலாளர்:- | வே. பிரஷாந்தினி | உப செயலாளர்:- | ர. தங்கா |
| பொருளாளர்:- | வி. டனுஜன் | | |
| பா. டினோஜன் | தரம் - 06 | யே. டினோஜா | தரம் - 07 |
| கே. டிசாந்தினி | தரம் - 08 | ப. பாலசுதன் | தரம் - 09 |

## இந்துமாமன்றம்

| | | | |
|---|---|---|---|
| தலைவர்:- | சோ. கீர்த்தனன் | உப தலைவர்:- | ந. திசாளினி |
| செயலாளர்:- | க. பிரஷாந்தினி | உப செயலாளர் | :-மு. மிதுர்சன் |
| பொருளாளர்:- | வி. டனுஜன் | | |
| சி. மகிழினி | தரம் - 06 | க.கயல்விழி | தரம் - 07 |
| ம. மதுநிலா | தரம் - 08 | கே. டிசாந் | தரம் - 09 |

## கணித விஞ்ஞான மன்றம்

| | | | |
|---|---|---|---|
| தலைவர்:- | அ. பஜிதன் | உப தலைவர்:- | மு. மிதுர்சன் |
| செயலாளர்:- | வி. மேகலா | உப செயலாளர்:- சி. சியானி | |
| பொருளாளர்:- | வி. டனுஜன் | | |
| சி. மகிழினி | தரம் - 06 | பு. ஜெறோசன் | தரம் - 07 |
| றா. மரிய பியோரினா | தரம் - 08 | ஞா. டிலன் | தரம் - 09 |

## சுகாதார மன்றம்

| | | | |
|---|---|---|---|
| தலைவர்:- | த. டிலான் | உப தலைவர்:- சி. சியானி | |
| செயலாளர்:- | வி. டனுஜன் | உப செயலாளர்:-க. சிறிகரன் | |
| பொருளாளர்:- | ர. தங்கா | | |
| த. டிசான் | தரம் - 06 | அ. மதுசன் | தரம் - 07 |
| சி. தமிழரசன் | தரம் - 08 | பா. கிருசாந்தன் | தரம் - 09 |

## ஆங்கில மன்றம்

| | | | |
|---|---|---|---|
| தலைவர்:- | வி. டனுஜன் | உப தலைவர்:- | ப. பாலசுதன் |
| செயலாளர்:- | ர. தங்கா | உப செயலாளர்:- சி. சியானி | |
| பொருளாளர்:- | சூ. கிதுஜனா | | |
| சி. அ. தமிழவன் | தரம் - 06 | அ. விதுசா | தரம் - 07 |
| க. சிறிதரன் | தரம் - 08 | சூ. விதுர்சா | தரம் - 09 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அன்னையின்

மலர் சிறப்புற மலர

ஆக்கங்களை

தந்து உதவியவர்கட்கும்

விளம்பரங்களை தந்து

உதவியவர்கட்டுகும்,

பல வகையில் ஆக்கமும்

ஊக்கமும் தந்து உதவிய

நல் உள்ளங்கட்கும்,

சீரிய முறையில் அச்சிட்டு உதவிய

ஷாம்பவி பதிப்பகத்தினருக்கும்

எமது மனமார்ந்த



# நன்றிகள் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஷாம்பவி பதிப்பகம், 278, கஸ்தூரியர் வீதி, யாழ்ப்பாணம். 021 2224143.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org